கல்கி

KALKI
25.7.87
ரூ. 1.50



இரண்டும் ஒரே தோற்றம் தான்



கலவை : 70% காப்பி 30% சிக்கரி



கலவை : 80% காப்பி 20% சிக்கரி

ஒன்றில் காட்டம் குறைவு

இரண்டு இன்ஸ்டன்ட் காப்பி—சிக்கரி கலவைகளில் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவது எளிதல்ல. ஆனால் கலவையை பொறுத்துத்தான் சுவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். சிக்கரி அளவுக்கு அதிகமானால் கசப்பாக இருக்கும். எனவேதான் ஸன்ரைஸ் தரும் கூடுதல் காப்பி சுவையும் ஸ்ட்ராங்கும் உங்களுக்கு சிறப்பாக இருக்கிறது. ஏனெனில், ஸன்ரைஸில் காப்பியும் சிக்கரியும் 80:20 என்ற விகிதத்தில் கலந்திருக்கிறது. மற்ற சாதாரண இன்ஸ்டன்ட் கலவையிலோ 70:30 என்ற விகிதம். ஸன்ரைஸ் கசப்பாக இல்லாமல் சிறப்பாக ருசிப்பதற்கு இதுவே காரணம்.

நாங்கள் சொல்வதை நம்புவதைவிட நீங்களே சுவைத்துப் பாருங்கள்.



Nestlé.
ஸன்ரைஸ்
இன்ஸ்டன்ட் காப்பி-சிக்கரி கலவை

கூடுதலான காப்பி கலவை

HTA 5118A TA

விலைவாசி உயர்வால் திணறும் குடும்பத் தலைவி!

* சாந்தி





* இந்துமதி

எப்படிச் சமாளிக்கிறார்கள்?

இந்துமதி நடராஜன் :

ரங்கநாதன் தெருவில் காய்கறி வாங்கச் சென்றபோது ஒரு சிறிய பிளாஸ்டிக் கூடை கண்ணில் பட்டது. குழந்தைகளின் பென்சில் ரப்பர் போன்றவை போட்டு வைக்க உதவுமே என்று அதை வாங்கிக் கொண்டு கையில் பிடித்தபடி காய்கறிக் கடைக்குச் சென்றேன். புட்டுக் கூடையைப் பார்த்த காய்க்காரர், கிண்டலாகக் கேட்டார். ''என்னம்மா! இதில்தான் காய் வாங்கப் போகிறீர்களா?'' என்று. இப்போது காய்கறி விற்கும் விலையைப் பார்த்தால் அவர் சொன்னது ஹாஸ்யமாகவே தோன்றவில்லை!

ஆனால், விலைவாசி ஏறினாலும் செலவுகளைக் குறைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவது சேமிப்புதான். மாதாந்திர பட்ஜெட் போடும்போது சேமிப்புக்கு என்று ஒரு தொகை ஒதுக்குவதுண்டு. அவசர, திடீர் செலவுகளுக்கு இத்தொகை கைகொடுக்கும். இப்போதெல்லாம் அத்தொகை கணிசமாகக் குறைந்துவிட்டது. குடும்பத்தில் ஒரு கல்யாணம் அல்லது வேறு விசேஷம் ஏதும் நடைபெறும்போது இந்தச் சேமிப்புத் தொகைதான் உதவியிருக்கிறது. போகப் போக, இந்தத் தொகையை நம்பிப் பெரிய அளவில் கல்யாணம் போன்ற விழாக்களை நடத்துவது மத்தியதர வகுப்பினருக்குக் கஷ்டமாகிவிடும். எனவே, ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டு எளிமையாக இருப்பதைத் தவிர வேறு வழி இல்லை. சமுதாய விழிப்புணர்ச்சிதான் இத்தகைய மாறுதலை விளைவிக்க முடியும். சமுதாயத்தின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் திருமணங்களை ஆடம்பரமாகநடத்தும்கட்டாயத்தில் இப்போது இருக்கிறோம். இந்தப் பழக்கங்கள் திடீரென்று மாறிவிட முடியாது என்றாலும் நமது குழந்தைகளின் காலத்திலாவது நல்ல மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதற்கு நமது குழந்தைகளை நாம் தயார் செய்ய வேண்டும். சுயமாகச் சிந்திக்கவும் கேள்விகள் கேட்கவும் அவர்களை ஊக்குவித்து, நல்லது கெட்டதை அவர்களே ஆராய்ந்து அறியும் திறனை உண்டாக்க வேண்டும். நம்மைப் போலவே அவர்களும் வகுத்த பாதையிலிருந்து விலக பயந்தால்

இந்த விலைவாசி உயர்வில் திண்டாட வேண்டியதுதான்!''

நடராஜன் :

''விலைவாசி உயர்வால் மிகவும் பாதிக்கப்படுவது கீழ், மத்தியதர வகுப்பினர்தான். அதிலும் **Organised Sector**—இல் பணிபுரிபவர்களுக்கு அரசாங்கமே கிராக்கிப்படி போன்றவற்றை அவ்வப்போது கொடுத்து விடுகிறது. **Unorganised Sector** ஐச் சேர்ந்தவர்கள்தான் உண்மையில் மிகவும் திணறிப் போகிறார்கள். 'ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு, மாட்டைத்தூக்கி ஆட்டில்போட்டு' ஊரெல்லாம் கடன் வாங்கி, அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அவஸ்தைப்படுபவர்கள் இவர்கள்தான். இந்த வர்க்கத்தினர் குழந்தைகளுக்கு நல்ல கல்வி கொடுப்பதையும் பெண்களுக்குக் கௌரவமாகக் கல்யாணம்செய்துகொடுப்பதையும்கட்டாயமாகக் கொண்டுள்ளதால் இவர்களுடைய திண்டாட்டம் அதிகரிக்கிறது. பிதுரார்ஜித சொத்தாக இவர்கள் விட்டுச் செல்வது கடன்களைத்தான்!

''எனது தந்தை சமீப காலம்வரை புதுக்கோட்டையில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தி வந்தார். செல்வமும் செல்வாக்கும் மிக்கவராக இருந்தார். ஆனால் கடைசிக் காலம்வரை அவர் ஒரு ஃப்ரிட்ஜோ, கிரைண்டரோ, வேறு ஆடம்பரப்பொருளோ வாங்கவே இல்லை. என் அம்மாவும் அதற்கான தேவையை உணரவோ வலியுறுத்தவோ இல்லை. மாறாக, எனது நிறுவனத்தில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றும் ஒருவர் (நான்கு இலக்குச் சம்பளம் பெறுகிறார்) வி.சி.ஆர். முதற்கொண்டு வாங்கியிருக்கிறார்!

''ஆக, விலைவாசி ஒருபக்கம் உயர்ந்து கொண்டே இருந்தாலும் இன்னொரு பக்கம்-வியாபாரம் பெருகிக் கொண்டிருக்கிறது. மக்கள் செலவுகளைக் கட்டுப்படுத்துவதில்லை. போதாக்குறைக்கு இப்போது தவணை முறையில் சகல பொருள்களையும் வாங்க முடிகிறது. ஆடம்பரப் பொருட்களை வீட்டில் வைத்திருப்பது ஒரு கௌரவமாகக் கருதப்படுவதால் எப்பாடுபட்டாவது அவற்றை வாங்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பட்டுப் புடவைக் கடைகளிலும் நகைக் கடைகளிலும் நெரிகின்ற கூட்டத்தைப் பார்த்தால் விலைவாசி உயர்ந்துவிட்டது என்று நம்பவே கஷ்டமாகத்தான் இருக்கிறது.''

* என்னதான் விலை ஏறினாலும் வியாபாரம் ஜரூருப்பாக நடக்கிறது.



* நடராஜன்



காந்தி :

''அரசாங்கத்தால் நிலைமை சீரடையும்னு நம்பிப் பிரயோஜனமே கிடையாது. எந்த அரசாங்கமும் விலைவாசியைக் குறைத்துக் காட்டியசரித்திரம்கிடையாது. மிஞ்சிமிஞ்சிப் போனால் ஆளும் கட்சிதான் மாறுகிறதே ஒழிய ஆட்சிமுறை, நிர்வாக அமைப்பு — இவை மாறுவதே இல்லை. அதனால் விலைவாசி பிரச்னையை நாம் நமது சாமர்த்தியத்தால்தான் எதிர்கொள்ள வேண்டும்.

''என் மகனுக்கு நல்ல கல்வி அளிக்க வேண்டுமானால் நான் சில தியாகங்களைச் செய்துதான் ஆக வேண்டும். என் கணவர் கும்பகோணத்தில் பணியாற்றுகிறார். அவர் தமது பெற்றோருடன் தங்கியிருக்கிறார். நான் வேலையை விட்டுவிட எங்கள் பொருளாதார நிலைமை அனுமதிக்காது என்பதால் நான் சென்னையில் என் மகனுடன் தங்கி வேலை பார்த்து வருகிறேன். குறைந்த வாடகைக்குக் குரோம்பேட்டையில்தான் வீடு கிடைத்தது. அதனால் அங்கு தங்கிக் கொண்டு தினமும் மந்தைவெளியில் உள்ள அலுவலகத்



தேகு



• பட்டுப்புடவைக் கடையில் எப்போதும் கூட்டம் தான்.

• மூர்த்தி



துக்குப் போய் வருகிறேன். அதிர்ஷ்டவசமாகக் குரோம்பேட்டையிலேயே ஒரு பள்ளியில் என் மகனுக்கு இடம் கிடைத்தது.

"ஒரு நாளைப் போல மந்தைவெளி வரை போய் வருவது சிரமமாகத்தான் இருக்கிறது. சில நாட்கள் மாலையில் திரும்பும் போது அதிகக் கட்டணம் கொடுத்து மொபசில் பஸ்ஸில் வர வேண்டியிருக்கும். அத்தகைய நாட்களில் ஆகும் அதிகப்படி செலவை சரிகட்ட நான் குரோம்பேட்டையிலிருந்து என் வீட்டிற்கு வழக்கம்போல் இன்னொரு பஸ் பிடித்துப் போகாமல் நடந்தே போய்விடுவேன். ஐம்பது பைசா மிச்சமாகும்.

"வீட்டுக்குத் தேவையான பொருட்களைப் பார்த்துப் பார்த்துத் திட்டமிட்டு வாங்குகின்றேன். எவ்வளவு சிரமமாக இருந்தாலும் பிறரை அனுப்பாமல் நானே அரசாங்க நியாய விலை பல்பொருள் அங்காடிக்குப் போய்த்தான் வாங்குவேன். போன வருடம் மார்ச்சு மாதம் கிலோ ரூ 6.50. விற்ற துவரம் பருப்பு இந்த வருடம் அதே மாதத்தில் ஒன்பது ரூபாய்க்கு விற்றது. மார்ச் இறுதியில் விலை 9.30 ஆகி ஜூனில் 9.80 வரை ஏறிவிட்டது. ஆனால் எப்போதுமே மார்ச்சு மாதத்தில்தான் சாமான்கள் விலை குறைவாகக் கிடைக்கும் என்பதால் பருப்பு, புளி, உளுந்து போன்றவற்றை வருடத்துக்கு வாங்கி வைத்து விடுகிறேன். 9.00 ரூபாய்க்கும் பருப்பு கிடைக்கும் பத்து ரூபாய்க்கும் கிடைக்கும். ஆனால் ஒன்பது ரூபாய் பருப்பு நமக்குப் போதும் என்று தீர்மானித்து விடுவேன். ஆனால் இதுவே ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடிய பண்டமானால் விலையைப் பொருட்படுத்தாமல் தரமானதையே தேர்ந்தெடுப்பேன். ரேஷனில் பாமாலின் தருகிறார்கள். விலை மலிவுதான். ஆனால் அதில் மிச்சப்படுத்தும் பணத்தைவிடப் பல மடங்கு அதிகமாக டாக்டருக்கு அல்லவா அழ வேண்டியிருக்கும். அதனால் விலை அதிகமானாலும் சூரியகாந்தி எண்ணெயைத்தான் வாங்குகிறேன்.

"இப்படியே கடுகு முதல் கற்பூரம் வரை ஒவ்வொரு பண்டத்தையும் யோசித்துத் திட்டமிட்டுத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. ஒரு முழம் பூக்கூட அனாவசியமாக வாங்க முடியாது. காப்பிக் கொட்டையை வாங்கி







வீட்டிலேயே வறுத்து அரைத்துக் கொள்கிறேன்.

"வாங்குவதில் சிக்கனத்தைக் கடைபிடிப்பதைப் போலவே, பண்டங்களைச் செலவிடுவதிலும் திட்டமிடல் வேண்டும். இதைக் குடும்பத் தலைவி மட்டும் செய்தால் போதாது. வீட்டில் உள்ள நண்டு சிண்டு முதல் எல்லோருமே ஒத்துழைக்க வேண்டும். உதாரணத்துக்குத் தண்ணீரையே எடுத்துக் கொள்ளுங்கள். குழாயைப் பெரிதாகத் திறந்துவிட்டு மாளுவாரியாகத் தண்ணீர் செலவழிப்பதால் அடிக்கடி மோட்டார் போட வேண்டியிருக்கிறது. மின்கட்டணம் அதிகரிக்கிறது. ஒவ்வொரு மாதமும் மின்கட்டண அட்டையில் மீட்டர் ரீடிங் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என்று ஒப்பு நோக்கும் பணியை என் மகனிடம் ஒப்படைத்தேன். இதனால் அவன் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு யூனிட்டுகள் செலவாகிறது என்று கண்காணிக்க ஆரம்பித்தான். அனாவசிய மின்செலவைத் தவிர்க்கக் கற்றுக் கொண்டான். இப்படித்தான் குழந்தைகளுக்குப் பொறுப்புக்களைக் கொடுத்துப் பழக்க வேண்டும். நாம் முன்னுதாரணமாக விளங்கினாலே அவர்களுக்குப் பொறுப்பு வந்துவிடும்.

"மத்திய தர வகுப்பினர் பலர் போனஸ் மற்றும் இதர உபரி வருமானம் ஏதேனும் வந்தால் அதைக் கட்டாயம் செலவழித்துவிடுவது என்று தீர்மானமாக இருக்கிறார்கள். அநேகமாக அந்தப் பணம் டீ.வி., மிக்ஸி, டூ-இன்—ஒன் போன்ற பொருட்களுக்குச் செலவிடப்படுகிறது. ஆனால் உபரி வருமானத்தைக் கொண்டு வாங்கும் பொருளுக்கு அன்றாட வருமானத்திலிருந்துதான் தீனி போட வேண்டியிருக்கிறது! இதனால் செலவுகள் அதிகமாகின்றன.

"இதற்குப் பதிலாக அந்தப் பணத்தைத் தொடாமல் வைத்திருந்தால் விழி பிதுங்கச் செய்யும் ஜூன் மாதத்தில் பள்ளிக்கூட பீஸ் கட்ட, புத்தகம் வாங்க, யூனிஃபார்ம், ஷூஸ் வாங்க என்று அது கைகொடுக்கும்.

"என்னைப் பொறுத்தமட்டில் நான் உபரி வருமானத்திலிருந்து ஒரு ரவிக்கைத் துணி கூட வாங்கிக் கொள்வதில்லை. மாதாந்திரச் செலவுகளிலேயே துணிவாங்கும் செலவுகளையும் அடக்கிக் கொள்கிறேன். எப்போது முடிகிறதோ அப்போது மட்டுமே வாங்கிக் கொள்வேன். அடுத்தவர்களைப் பார்த்து ஆசைப்பட்டு வாங்கிக் கொள்வதெல்லாம் மத்தியதர வகுப்பினரைப் பொறுத்தவரை தவறான பொருளாதாரக் கொள்கை.

"இவ்வளவு தூரம் கஷ்டப்பட வேண்டுமா, ஆசைகளை அடக்கிக் கொள்ள வேண்டுமா, பூ வாங்கக்கூட யோசிக்க வேண்டுமா என்று சிலர் கேட்கலாம். அவர்களுக்கு என் பதில் இதுதான்:

"இந்த வாழ்க்கைமுறையால் எனக்குச் சில

இழப்புகளும், ஆதங்கங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து நான் இம்மியளவு விலகினாலும் அடுத்தவரிடம் கடனுக்குக் கையேந்த வேண்டியிருக்கும். இப்போது என்மட்டில் போகும் வருத்தங்களும் பிரச்னைகளும் நாளை ஊரறிய வெளிச்சமாகிவிடும். கடன்களிலிருந்து மீளவே முடியாது. என்ன செய்வது, வாழ்க்கையில் சின்ன சந்தோஷங்களைத் தியாகம் செய்தால்தான் பெரிய சந்தோஷங்களை அடைய முடியும்!"

மூர்த்தி:

"நான் ரங்கநாதன் தெருவுல ஒரு நாளைக்கு நூறு தடவையாவது மேலும் கீழுமா அலைஞ்சு ஊதற பொம்மை, கிலுகிலுப்பைன்னு எதையாவது விக்கறேன். எதை வித்தாலும் வாங்கறதுக்கு ஆள் இருக்கு. இந்த வியாபாரத்துல ஒரு நாளைக்குப் பதினைஞ்சு இருபது ரூபா கிடைக்கும். சில நாள் மழை கிழை வந்தா வியாபாரமே நடக்காது. இப்ப அரிசி பருப்பு விக்கற விலைல இந்தப் பிழைப்பை நம்பிக் குடும்பம் நடத்துறது ரொம்பக் கஷ்டமா இருக்கு...."

தெரு:

"எல்லாப் பொருளும் வருஷா வருஷம் விலை ஏறுது. ஆனால் வாங்கறவங்க சலிக்காம வாங்கிக்கிட்டுத்தான் இருக்காங்க. ஆனால், இந்த மணி மாலை விலை இரண்டு ரூபாய்ன்னு சொன்னால் மட்டும், 'எட்டணாவுக்குத் தரியா'ன்னு கேக்கறாங்க! எங்க பொருளோட விலையை ஏத்தினாத்தானே நாங்களும் விலைவாசியைச் சமாளிச்சு வயிற்றை நிரப்ப முடியும்?"

விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ன?

மளிகைக் கடைக்காரர் சுப்ரமணியன்:

"நான் ரொம்பப் படிச்ச ஆளில்லைங்க. ஆனாலும் ஆறேழு வருஷமா மளிகைக் கடை வைச்சிருக்கேன். என் அனுபவத்துல சொல்றேன். முதல் காரணம், ஜனத்தொகை ஏகமாயிட்டதுதான். சரக்கு வரவும் அதிகமாகித்தான் இருக்குது. ஆனாலும் ஜனத்தொகைக்கு ஏற்ற மாதிரி அதிகமாகலை. அப்புறம், ஜனங்களுக்கும் வாங்கற சக்தி அதிகமாயிருக்குது. அதுவும் ஒரு காரணம்தான் சார்!

பெட்ரோல் விலை ஏறிக்கிட்டே இருக்கிறதால, சரக்கு கொண்டு வர செலவு அதிகமாகுது. அந்தக் காசும், விக்கிற விலையை அதிகமாக்கிடுது. வருஷா வருஷம் மொத்த வியாபாரிங்களும் விலையை ஏத்தறாங்க. அதையும் நாங்க விக்கிற விலையிலே கூட்டிக்க வேண்டியிருக்குது. அப்புறம் இன்னொரு விஷயத்தையும் சொல்லத்தான் வேண்டும். எனக்குத் தனிப்பட்ட முறையில அந்தத் தொந்தரவு இல்லேன்னாலும் ஊர்ல பொதுவா அந்தப் பிரச்னை இருக்கு. அதாவது கட்சிக்காரங்க போலீஸ்காரங்க எல்லாம் அப்பப்ப வந்து மாமூல் நன்கொடை அது இதுன்னு வாங்கிக்கிட்டுப் போறாங்களா? அதுவும் கடைசிலே ஜனங்க தலையிலத்தானே சுமையா ஏறுது?

எஸ். சுவாமிநாதன் (சார்ட்டர்டு அக்கவுண்டண்ட்)

இன்றைக்கு விலைவாசி அதிகரித்து வருவதற்கு ஒரு முக்கியமான காரணம் டி.வி. என்றால், அது பலருக்கு வியப்பைத் தரும். ஆமாம்! டி.விக்கு விளம்பரம் மூலம் அபரிமிதமான வருமானம் கிடைக்கிறது. ஆனால் இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்களும், ஏதோ பல்வேறு விளம்பரதாரர்களின் சொந்தப் பணம் இல்லை. நாம் பொருளை வாங்கத் தரும் விலையிலிருந்துதான் இந்தப் பணம் வருகிறது. டி.வி. வந்தபின், ஒவ்வொரு தயாரிப்பாளரும் தமது விளம்பர பட்ஜெட்டைப் பல கோடிகளுக்கு உயர்த்தி விட்டார். இந்த அதிகப்படியான பட்ஜெட்டைத் தங்கள் லாபத்திலிருந்து செலவழிக்க அவர்கள் தயாராக இல்லை. பதிலாக விற்பனை விலையைக் கூட்டிவிட்டார்கள்!

— நமது நிருபர்கள்

மேலட்டை வண்ணப்படம்: **கே.வி. ஆனந்த்**

படங்கள்: **கே.வி. ஆனந்த், சோமு**

துறையைக் குட்டிப் அரசியல் ஆதிக்கம்!

— ஓய்வு பெற்ற உயர் போலீஸ் அதிகாரி சி.வி. நரசிம்மன் பேட்டி

விலைவாசி உயர்வு:

வில்லன் யார்?

—நிபுணர் அலசுகிறார்



• சித்ரா நாராயணசாமி

இந்தியாவில் விலைவாசி விஷம் போல் உயர்வதற்கும் பணவீக்கம் பெருகுவதற்கும் என்ன காரணம்? இரண்டு தலைமுறைக் காலமாக இந்தியப் பொருளாதாரத்தையும் அதன் போக்கையும் விமர்சித்து வருபவரும் அண்மையில் ரோட்டரி சங்கத்தினரால் For the sake of Honour Award அளித்துக் கௌரவிக்கப்பட்டவரும் ஆன சித்ரா நாராயணசாமி பதிலளிக்கிறார்:

பண வீக்கத்துக்கு என்ன காரணம் என்பதை நாம் புரிந்து கொண்டு அதை நிவர்த்தி செய்ய முயற்சி எடுப்பதே இல்லை. உதாரணமாக ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட பல செலவுகளில் நமது அரசாங்கம் பணத்தை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் செலவுகளால் அரசாங்கத்துக்கு ஒரு பைசாக் கூட லாபம் கிடையாது. இம்முறையில் வீணாகும் தொகையின் பரிமாணத்தை நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. ஏஷியாட், அப்னா உத்சவ் போன்ற விழாக்களை நடத்துவது, தேவைக்கு அதிகமான அதிகாரிகள், ஊழியர்களுக்குச் சம்பளம் தருவது, மாபெரும் சர்வதேச மாநாடுகளுக்குப் பணத்தைக் கோடி கோடியாகச் செலவழிப்பது, அவசியத்துக்கு அதிகமாக அரசாங்க வாகனங்கள், கார்களை வைத்திருப்பது, பல்வேறு சமுதாய நலத் திட்டங்கள் என்ற பெயரில் பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பது போன்ற, திட்டத்துக்கு அப்பாற்பட்ட எத்தனையோ பல செலவினங்கள் உற்பத்திக்கு உதவுவதில்லை, முதலீடாகி லாபத்தைப் பெற்றுத் தருவதில்லை; ஆனால் பணப்புழக்கத்தை அதிகரிக்கின்றன. இதனால் விலைவாசிகள் உயரவே செய்யும். எனவே இவற்றை அறவே தவிர்க்க முடியாவிட்டாலும் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் நமது அரசு இதைச் செய்வதில்லை. உற்பத்தியைப் பெருக்கி லாபத்தையும் ஈட்டித்தரும் விதமாகப் பணம் முதலீடாவதே சிறந்தது. ஆனால் இந்த விதமாகப் பார்த்தாலும் நமது அரசு சரியாகச் செயல்படவில்லை. பல கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு, பல காரணங்களுக்காகக் கைவிடப்படும் அரசுத் திட்டங்கள் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் ஏராளமான செலவில் ஆரம்பிக்கப்பட்டு, எதிர்பார்த்தபடி செயல்படாமல் நஷ்டப்படும் அரசுத் தொழிலகங்கள். இவற்றைத் துவக்க வாங்கப்படும் கடன்; அடையும் நஷ்டத்தை ஈடுகட்ட மேலும் கடன், அவற்றுக்கான வட்டி... மத்திய அளவிலும் சரி, மாநில அளவிலும்சரி, இன்றுநிலைமை இப்படித்தான் இருக்கிறது. இத்தனை பொருள் விரயத்தையும் நஷ்டத்தையும் தாங்கிக் கொள்வது யார்? உற்பத்தியான பண்டத்தைக் கடைசியில் விலை கொடுத்து வாங்குகிற, வரி செலுத்துகிற திருவாளர் பொதுஜனம்தான்.

ஆங்காங்கே ஒரு சில அரசுத்துறைத் தொழில்கள் லாபகரமாக நடக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இந்த லாபமெல்லாம் மற்ற அரசுத்துறை நிறுவனங்களின் மாபெரும் நஷ்டத்தால் விழுங்கப்பட்டு விடுகிறது. திட்டமிட்டபடி, எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்காமல் நஷ்டம் ஏற்படும்போது அரசாங்கத்தின் பட்ஜெட்டில் பற்றாக்குறை அதிகரிக்கிறது. பற்றாக்

குறை பட்ஜெட்டைச் சமாளிக்கச் செயற் கைப் பணம் அச்சடிக்கப்படுகிறது. இதன் பயனாக விலைவாசிகள் கண்மூடித்தனமாக ஏறுகின்றன.

கடந்த சில வருடங்களாக இந்தியா அயல்நாடுகளுக்குச் செலுத்தும் கடன் தொகை அதிகரித்துக் கொண்டே வரு கிறது. இதற்குக் காரணம் நாம் வாங்கும் கடன் அதிகரித்திருப்பது மட்டும் அல்ல. ரூபாயின் மதிப்பு வெகுவாகக் குறைந்து வருவதுதான். இதன் விளைவாக, தொழில் துவங்குவதற்காக அயல்நாடுகளில் வாங்கப் படும் இயந்திரங்களைப் பெற நாம் கொடுக் கும்' விலையும், மற்றும் தயாரித்த நிலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையும் அதிகரித்துக் கொண்டே போகின் றன. போதாக்குறைக்குக் கடந்த மத்திய பட்ஜெட், இறக்குமதி செய்யப்படும் இயந்தி ரங்களின் பேரிலான சுங்க வரியை 55 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதமாக உயர்த்தியுள்ளது. விளைவு: தொழில் முதலீட் டுத் தொகை பன்மடங்கு அதிகரிக்கிறது. இதற்கு உரிய லாபத்தை அடைய உற்பத்தி யாகும் பண்டத்தின் விலையை உயர்த்த வேண்டி நேர்கிறது.

இந்திய அரசு கடன்களுக்கு வட்டியாகச் செலுத்தும் தொகையே அதன் செலவினங் களில் 25 சதவிகிதத்தை விழுங்கி விடுகிறது. உலக மார்க்கெட்டில் இந்தியா மேலும் கடன் வாங்கக் கூடாது என்று உலக வங்கி எச்சரித் திருக்கிறது.



கணவன்: எப்பப் பார்த்தா லும் விலைவாசி பத்தியே பேசறியே?

மனைவி: நீங்கதானே எப்ப வும் உயர்ந்த விஷயங் களைப் பத்தியே பேச ணும்னு சொல்வீங்க?

—லஷ்ஜண

பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த நீண்ட காலத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். குறுகிய காலத்தில் பயன் தரும் தொழில் களுக்கு முக்கியத்துவமும் சலுகையும் தரும் வகையில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத் தைத் திருத்தி அமைக்க வேண்டும்.

ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ள திட்டங் களை விரைவில் முடிக்க,போர்க்கால அடிப் படையில் நடவடிக்கைகள் எடுக்க வேண் டும். பொதுப் பணித்துறையில் 25 வருடங் களுக்கும் மேலான அனுபவம் இருந்தும் நாம் துரிதமாகப் பணிகளைச் செய்து முடிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. ஓர் அணை கட்டுவதற்கு முன்பு எடுத்துக் கொண்ட நேரத்தில் பாதியை மட்டுமே எடுத்துக் கொள்ள இந்த நீண்ட கால அனுபவம் நமக்கு உதவியிருக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படி இல்லை! மாறாக, திட்டமிட்ட கால அளவைவிட அதிகமாகவே எடுத்துக் கொள்கிறோம். அதனால் செலவு பன்மடங்கு அதிகமாகி விடுகிறது.

போதாக்குறைக்குப் பருவ மழை தவறிய தால் வறட்சி, அதன் விளைவாக விவசாயம் பாதிக்கப்படுவது, விளைச்சல் குறைவது, விலை ஏற்றம் என்று வரிசையாகச் சங்கிலித் தொடர் போல் துன்பங்கள். வறட்சி காரணமாக, கிராமப்புற மக்கள் பஞ்சம் பிழைக்கப் பட்டணம் நோக்கிச் செல்கிறார் கள். இதனால் நகரங்களில் ஜனத்தொகை திடீரென்று அதிகரிக்கிறது. இந்தத் திடீர் ஜனத்தொகைப் பெருக்கத்தால் வேறு விலை வாசி உயர்கிறது.

உணவு தானியத் தயாரிப்பில் இந்தியா தன்னிறைவு அடைந்துவிட்டதாகக் கூறிக் கொள்ள அனுமதிக்காமல் ஜனத்தொகை அதிவேகமாக அதிகரித்துக் கொண்டிருக் கிறது. ஜனத்தொகை அதிகரிப்பை ஒப்பு நோக்குகையில் உற்பத்திப் பெருக்கம் குறைவு தான். எண்ணெய் வித்துக்களை இறக்குமதி செய்யவே ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கிறோம்.

அதிர்ஷ்டவசமாக, ஜனத்தொகைக் கட்டுப்பாட்டில் இந்திய அரசு நிறையக் கவ னம் செலுத்தி வெற்றி கண்டு வரு கிறது. இதே வேகம் நீடித்தால் நிலைமை சீரடைய வாய்ப்பிருக்கிறது.

தனியார் துறையில் தொழில், வர்த்தக அதிபர்களின் நன்மைக்குகளை அரசாங் கம் புரிந்து கொள்ள மறுக்கிறது. அதீத லாபம் ஈட்டும் பேராசை நோக்கம் அவர்க ளுடையது என்று அரசாங்கம் தீர்மானித்து விடுகிறது. உண்மையில் லாபம் எல்லாமே தொழிலதிபருக்குப் போவதில்லை. பங்கு தாரர்கள் அனைவருக்கும் லாபத்தில் ஒரு பகுதி போய்ச் சேர்கிறது. இது நாட்டின்

பொதுவான பொருளாதார நிலைமையை மேம்படுத்தும்.


தனியார் விஷயத்தில் இவ்வளவு எச்சரிக்கை காட்டும் அரசாங்கம் ஏன் அதே அக்கறையைத் தனது துறை நிறுவனங்களில் காட்டுவதில்லை? பொது மக்கள் பணம்தான் அரசுத்துறை நிறுவனங்களிலும் முதலீடாகிறது. நாம் செலுத்தும் எல்.ஐ.சி., ஜி.ஐ.சி. ப்ரீமியம்கள், வங்கிகளில் உள்ள நமது சிறு சேமிப்பு, தேசிய சேமிப்புப் பத்திரங்கள், பாண்டுகள் போன்றவற்றில் நாம் செய்யும் முதலீடு போன்ற யாவும் அரசுத் துறைச் செலவினங்களுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் தனியார் துறை நமது முதலீட்டுக்குத் தரும் லாபத்தை அரசுத்துறை ஈட்டித் தருவதில்லை.

விலைவாசி உயர்வால் கிராக்கிப்படி உயர்வதும் கிராக்கிப்படி உயர்வதால் விலைவாசி மீண்டும் உயர்வதுமாக ஒரு விடுபட முடியாத வட்டத்தினுள் இன்று நாம் உழன்று கொண்டிருக்கிறோம். இதிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் அரசாங்கம் முக்கியமாகச் சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும். பட்ஜெட் பற்றுக்குறையையும் நோட்டுப் புழக்கத்தையும் குறைக்க உற்பத்திக்கு உதவாத அரசுச் செலவினங்களைக் குறைந்தபட்சமாக்குதல்; உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் பெருக்கத் தனியார் துறைக்கு ஊக்கமளித்தல்; அரசுத்துறை நிறுவனங்கள் லாபகரமாக இயங்க வற்புறுத்துதல்; அரசாங்கச் சிவப்பு நாடாவை நீக்கித் தொழில், உற்பத்திப் பெருக்கத்துக்கு அவசியமான ஆதாரத் தேவைகளில் கவனம் செலுத்துதல் ஆகியனதான் அவை.

"ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி அளவை மனத்தில் கொண்டுதான் கரன்ஸி நோட்டுக்களை அச்சடிக்க வேண்டும் என்பது நவீன பொருளாதாரக் கொள்கை. மொத்த உற்பத்தியை வாங்குவதற்குத் தேவைப்படும் பணத்தைக் காட்டிலும் ஓரளவு அதிகமாக அச்சிட்டு, பணப் புழக்கத்தைச் செயற்கையாக அதிகரித்து, அதனால், உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கிராக்கியை உண்டாக்கி, மேலும் உற்பத்தியைத் தூண்டுவது இன்று உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை. ஆனால் அதிகப்படி நோட்டுக்கள் அச்சடிப்பு ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதோடு உற்பத்தி அந்நாட்டின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்ப்பதாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால்..... விலைவாசி குறையுமா? விடிவு காலம் பிறக்குமா? என்ற சோகமான கேள்விதான் மீண்டும் மீண்டும் எதிரொலித்துக் கொண்டிருக்கும்."

— ஒரு வங்கியின் ஓய்வு பெற்ற தலைமை அதிகாரி.

சந்திப்பு: சீதா ரவி





மேனி
ரெக்ஸோனு
Rexona
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும்
உங்கள் பொன்னுன கனவு...நிறைவேற
வரமளிப்பது ரெக்ஸோனு.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா
(தேவதாரம்) ஆகிய நாலு வகை
இயற்கைத் தைலங்களின் நற்கலவையான
ரெக்ஸோனு...சருமப் பராமரிப்பிற்கு
இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனு
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிற
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரி
LINTAS RX 90 2416 TM

அன்றைய இலங்கையும் இன்றைய இலங்கையும்

• பொன்னியின் செல்வனில் 'இலங்கைக்குக் கப்பலில் அரிசி ஏற்றிச் செல்வது பற்றிப் படிக்கையில், இன்றைய இலங்கைப் பிரச்னை நினைவுக்கு வந்து மனம் நெகிழ்ந்தது!

கோவை, உமார்த்தி.

வா • இந்த வார அட்டைப்படம் எனக்கு என்ன கருத்தைத் தெரிவிக்கிறது தெரியுமா சார்? "தம்பி! நீ படிக்காமல் லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கக் கூடிய ஒரே தொழில் அரசியல்தான்" என்று நையாண்டி செய்வதுபோல் இருக்கிறது!

மயிலாடுதுறை, கி. எழில்.

• சி.எஸ்.ஸின் பேட்டி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. கல்விக் கூடங்கள் திறக்கும் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் கண்களையும், திறக்காதா இவரின் கருத்துக்கள்! நன்றாகப் படிக்கும், நல்ல சூழ்நிலை அமைந்த புத்திசாலியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 100% தேர்வு காண்பிக்கும் பணம் பிடுங்கும் பள்ளிக்கூடங்கள்தான் அதிகம். அதிகமான வசதி இல்லாத, வாய்ப்பு இல்லாத கிராமப்புற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 100% தேர்வு காண்பிக்கும் பள்ளிக்கூடங்கள் உருவாவது எப்பொழுது? கல்வியாளர்கள் குழு அமைத்து உடனடியாக இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண அரசாங்கம் முயல வேண்டும்.

விழுப்புரம், கே.எஸ். குமார்.

ட் • கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சென்னை மாநகரில் ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப் படவில்லை. குறிப்பாக எங்கள் பகுதியில் வீட்டு வசதி வாரியம் ஒரு பெரிய குடியிருப்பை உருவாக்கியிருக்கிறது. அதில் ஏறத்தாழ மூவாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. இங்கு வாழ்பவர்களுக்கு அரசின் சார்பிலோ அல்லது மாநகராட்சி சார்பிலோ ஆரம்பப் பள்ளிகள் கிடையாது. குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமானால் விரும்பியோ விரும்பாமலோ பணம் பிடுங்கித் தின்னும் பள்ளிகளில்தான் படிக்க வைக்க வேண்டும். ஆனால் அரசு சொல்வதோ அனைவருக்கும் இலவசக் கல்வி என்று....!

சென்னை — 39, சி. தெ. இளமுருகன்.

ட • "தப்பிக்கும் திருடர்களைத் தட்டிக் கொடுக்கலாமா?" தலையங்கம் பிரதமரைத் தட்டிக் கேட்கும் வகையில் இருந்தது. நன்மை செய்யும்போது தட்டிக் கொடுக்கவும், தவறு செய்யும்போது தட்டிக் கேட்கவும் மன உறுதியுடன் துணியும் பத்திரிகைகளுள் ஒன்றான 'கல்கி'யைத் தட்டிக் கொடுக்கத்தான் வேண்டும்.

கோடிக்கரை, எஸ். சாந்தினி.

• பிரதமரின் போக்கு, 'தப்பிக்கும் திருடர்களைத் தட்டிக் கொடுப்பது' போல் உள்ளது மட்டுமல்லாமல், 'உதை பட்ட கொள்ளையர்க்கு ஒத்தடம் கொடுப்பது' போன்றுள்ளது என்பது தங்களின் தலையங்கத்திலிருந்து புரிய வருகிறது.

ஊஞ்சலலை, உதயன்.

மே • ஆண்டாண்டு காலமாக ஓயாத நாமச் சண்டைக்குக் கல்கிதான் காரணமாமே!" களுக்..." இந்த வருட சிறந்த ஜோக் இதுதான் சார்.

ஆங்கரை, ஆனந்.

ஜை • தருமபுரி மாவட்டத்துப் பணிகள் வேகமாக நடக்கின்றனவோ இல்லையோ, கல்கியின் ரீ—விசிட் ரிப்போர்ட்டில் வேகம் இருந்தது.

திருநெல்வேலி, எஸ். கணேசன்.

• கருணாநிதி வறட்சிக் காலத்தில் வசூல் செய்கிறார் என்பதைவிட எந்தவிதமாக வசூலிக்கிறார் என்பதைத்தான் கவனிக்க வேண்டும் எனத் தராசு கூறியிருப்பது நகைப்புக்குரியது. இது எப்படி இருக்கிறதென்றால், தலைகுப்புறக் கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல்தான்!

சென்னை — 15, வி. முரளி.

• கலைஞர் நிதி வசூலிப்பது பற்றிய கேள்விக்கு நீதியோடு பதிலளித்த தராசு அவர்களே! நீங்கள் பாராட்டுக்குள்ளாகிறீர்கள். மீண்டும் உங்களின் நடுவு நிலைமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

தக்கலை, இராமலிங்க்.

• 'விடியலாத மக்களுக்கு விடு' என்ற திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 1956—ல் கே.ஏ. அப்பாஸ் எழுதிய கதை, மூன்று பத்தாண்டுகளை முழுவதுமாகக் கடந்த பின்பும் மாறாத அவலத்தை உணர்த்துகிறது. அதே சூழலில் அக்கதையின் நாயக நாயகியின் வாரிசுகளாய் இன்னும் வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான பாதையோரவாசிகளை எண்ணி மனம் வேதனையுற்றுக் குமுறுகிறது. சிறப்பாக மொழி பெயர்த்துத் தந்துள்ள நெல்லை எஸ். வேலாயுதத்திற்கும் பாராட்டு.

காட்டூர், எஸ். அருள்மொழி.

• கடந்த 31.5.87 கல்கி இதழில் சாமி ஐயா பற்றிச் சிலர் கூறியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. 85 ஆம் ஆண்டு கடும் தண்ணீர்ப் பஞ்சம் இருந்த போது, பேரூராட்சி வண்டியை உபயோகித்து, ஐயப்பா நகர் நலச் சங்கம் தண்ணீர் விநியோகித்தது உண்மையே. ஆனால் பேரூராட்சித் தேர்தலுக்குப் பின் பேரூராட்சித் தலைவர் சாமி ஐயாவிடம் எங்கள் சங்கம் [illegible] எடுத்துக் கூறியதன் பேரில் தண்ணீர், பொது விநியோகமாக (கட்டணம் இல்லாமல்) ஏற்றத் தாழ்வு ஏதுமின்றி அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. சாமி ஐயா ஏதோ பழிவாங்கும் உணர்ச்சியுடன் நடந்து கொண்டதாகச் சிலர் கூறியிருப்பது நியாயமேயல்ல.

திருச்சி — 21, செள. இலக்குமணன்.

நிற்க நிழல் வேண்டும்!

இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைப் பின்னணியாகக் கொண்டு

வாஸந்தி




எழுதும் பரபரப்பான தொடர்கதை

கல்கி

ஆகஸ்டு 2உ ஆண்டுமலரில் ஆரம்பமாகிறது






ஜனாதிபதி தேர்தலில் மனச் சாட்சிப்படி வாக்களிப்பீர்!
நீங்களும் வாங்க, இந்திராம்மா ரெகார்டைக் கேட்கிறோம்!
அதிருப்தி இ.காங்கிரஸ் எம்.எல்.ஏ. எம்.பி.க்கள்
அவர் தான் கரசக்கி எரியறார்னு, நீங்களும் தீ வைக்கறேன்றீங்களே?... இது தர்மமா? நியாயமா?.. அடுக்குமா?
பர்னாலா
லோங்கோவால் ஒப்பந்தம்
தேவிலால்
ஆட்சி அல்ல, காட்சி நடக்கிறது என்று சொல்பவர்களுக்கு, இந்தச் சத்துணவுக் காட்சியே ஆட்சிக்கு மாட்சி சேர்க்கிறது!' என்று கூறிக் கொள்வேன்!
சத்துணவு கூடம்
ஊழல்



கல்கி

1987 ஜூலை 5
மலர் 45 இதழ் 49
பிரபவ ஆனி 21



ஆர். வி.யா? கிருஷ்ணய்யரா?

இரண்டரை ஆண்டுகளுக்கு முன் ராஜீவ் பிரதமராக வந்தபோது அவரது செல்வாக்குக் கண்டு பிரமித்தோம்; அரசியலை அவர் தூய்மைப்படுத்தப் போகிறார் என்று கருதி மகிழ்ந்தோம்; அவரது ராஜதந்திரத்தைப் பார்த்துப் பூரித்துப் போனோம். ஆனால் இப்போதோ, அவர் இந்த மூன்று அம்சங்களையுமே அடியோடு இழந்துவிட்டு நிற்கிறார்..

அவர் செல்வாக்கு படுவேகமாகக் குறைந்து வருகிறது என்பதைக் கேரள, மேற்கு வங்கத் தேர்தல்கள் மட்டுமின்றி ஹரியானாத் தேர்தலும் நன்கு உணர்த்துகிறது. அங்கு லோகதளம் (பகுகுணா பிரிவு) பெற்ற வெற்றிக்குப் பிராந்திய உணர்வுகளை அவர்கள் தூண்டி விட்டதும், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசியதும் காரணமாக இருக்கலாம். ஆனால், காங்கிரஸும் இதே தவறுகளைச் செய்துள்ளது. ஜனாதிபதி ஆட்சியைப் பஞ்சாபில் கொண்டு வந்ததே ஹரியானா மக்களின் பிரதேசப் பற்றுக்குத் தூபம் போடத்தானே! மேலும், 'ஹரியானா நலனுக்கு ஊறு விளைவிக்கும் விதமாக, சண்டிகரைப் பஞ்சாபுக்கு மாற்ற மாட்டேன்' என்றும், வேறு பலவிதமாகவும் ராஜீவ் பேசி அவர்களுடைய பிரதேசப் பற்றுக்குத் தீனி போடவில்லையா? தேவிலால், 'விவசாயிகளின் பாங்குக் கடன்களைத் தள்ளுபடி செய்வேன்' என்றால் பன்ஸிலாலும்தான், 'விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வரவேண்டிய 113 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்வேன்' என்று வாக்களித்தார். எனவே, அங்கு விழுந்த ஓட்டுக்கள் லோகதளத்துக்கு ஆதரவாக விழுந்தன என்பதைவிடக் காங்கிரஸுக்கு எதிராக, பிரதமரின் கொள்கைகளுக்கும் செயல்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக விழுந்தன என்று கொள்வது பொருந்தும். ஆக, 'ஹிந்தி மாநிலங்களின் இதயம்' என்று கருதப்படும் ஹரியானாவிலேயே காங்கிரஸ் மட்டுமின்றிப் பாரதப் பிரதமரும் செல்வாக்கு இழந்து பரிதாபமாகக் காட்சி தருகிறார்.

'திருவாளர் சுத்தம்' என்றும், 'அரசியலைத் தூய்மைப்படுத்தப் போகிறவர்' என்றும் நாம் கருதி வந்த ராஜீவ், வரிசையாக ஃபேர்பேக்ஸ் விவகாரம், சப்மரீன் ஊழல், பீரங்கி பேர போஃபார்ஸ் ஊழல், தொழிலதிபர்களுக்குச் சலுகை என்று பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி, இவற்றை மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தவிக்கிறார். இவற்றிலிருந்து தப்பிக் கரைசேரப் போகிறாரா அல்லது புதைசேறாக இவை அமைந்து அவரைச் சிக்க வைக்கப் போகின்றனவா என்பதை அறிய உலகமே காத்திருக்கிறது.

அவரது ராஜதந்திரமும் வெறும் தற்காப்பு அரசியலாக மாறி வருகிறது. பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி வந்ததும் பயங்கரவாதம் வாலைச் சுருட்டிக் கொண்டு விட்டதா? இல்லையே! தில்லிக்கும் பரவியது. அங்கு பதினாறு பேரை ஒரே சமயத்தில் பலிவாங்கியது. தவிர, ஜனாதிபதி ஆட்சி அமுலுக்கு வந்தபின், இன்றுவரை அதிகாரபூர்வமான எண்ணிக்கைப்படியே 140 பேர்களைப் பயங்கரவாதிகள் பஞ்சாபில் கொன்றிருக்கிறார்கள். பர்னாலா அரசின் கையாலாகாத்தனம் என்று காரணம் காட்டி அங்கே ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்தவர்கள், புதுதில்லியின் இந்தக் கையாலாகாத்தனத்துக்கு எங்கே ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவார்கள்?

இப்படிப்பட்ட ஒரு கேவலமான சூழலில் ஜனாதிபதி தேர்தல் நடக்கப் போகிறது. ஆரம்பக் குழப்பங்கள் தீர்ந்து, இறுதியில் ஒரு சரியான நபரையே எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து வேட்பாளராக்கியுள்ளன. வி. ஆர். கிருஷ்ணய்யர் கூறுகிற ஒவ்வொரு கருத்தும் கண்ணியமாகவும், நடுநிலையிலும், அறிவுபூர்வமாகவும் அமைந்து அவர் அந்த உயர்ப் பதவியை வகிக்கச் சகல விதத்திலும் தகுதி பெற்றவர் என்பதை உணர்த்துகிறது.

ஆனால் வெற்றி வாய்ப்பு ஆர். வி.க்கே அதிகம் என்பது கணக்குப் போடுகிறவர்களின் கணிப்பு. இந்தக் கூட்டல் கழித்தலில் தவறு நேர்வதற்கில்லை என்றாலும், காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் மனசாட்சிப்படி வோட்டுப் போடத் தீர்மானிக்கலாம் என்ற பயம் காங்கிரஸ் உயர் மட்டத்திலேயே நிலவுவதும் உண்மை.

மக்களைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதி, ஆர். வி.யா, கிருஷ்ணய்யரா என்பதைவிட, இத்தேர்தலில் வெற்றி பெறுகிறவர், ஆட்சியிலே ஓர் ஆரோக்கியமான மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியவரா என்பதே முக்கியம். இதை ஆர். வி. விடம் எதிர்பார்க்க முடியுமா? வாக்குரிமை உள்ளவர்கள் சிந்திக்கட்டும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

ரத்தம் ரத்தம்



• இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட ஐம்பது சத விகிதம் குழந்தைகளுக்கு ரத்த சோகை உள்ளது

கேள்வி: ரத்த சோகை என்றால் என்ன?

பதில்: ரத்தம் உடலில் குறைந்து போவது; அல்லது ரத்தத்தின் தன்மை மாறுபட்டு அது வலுவிழந்து போவது. அனீமியா என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

கேள்வி: ரத்தத்தின் தன்மை எப்படி மாறு படும்?

பதில்: பெரும்பாலும் நாம் காணும் ரத்த சோகை இரும்புச் சத்து குறைவாக இருப்ப தால் ஏற்படுவது. இரும்புச் சத்து ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் என்ற ஒருவகை புரதச் சத்துக்கு அவசியமானது. இரும்புச் சத்து குறைவதால் ஹீமோகுளோபின் அள வும் குறைந்து ரத்தசோகை ஏற்படுகிறது.

கேள்வி: ஹீமோகுளோபின் என்ன செய் கிறது? அதன் பணி என்ன?

பதில்: ஹீமோகுளோபின்தான் நுரை யீரலிலிருந்து பிராண வாயுவைப் பெற்று, ரத்தத்தின்வழியேபயணப்பட்டுதிசுக்களுக்கு அதனை அளித்து, பதிலுக்குக் கரியமில வாயு எனப்படும் கார்பன் — டை — ஆக்ஸைடைப் பெற்றுக் கொண்டு நுரையீரலுக்குத் திரும்பு கிறது. நுரையீரல் கரியமிலவாயுவைப் பெற்று வெளியேற்றுகிறது. மீண்டும் பிராண வாயுவை ஹீமோகுளோபினுக்கு அளிக்க அது திசுக்களை நோக்கி ரத்தத்தின் மூலம் பயணப்படுகிறது. ரத்தத்தின் செந்நிறத்தை ஹீமோகுளோபின்தான் அளிக்கிறது.

கேள்வி: ரத்தசோகை ஏற்பட்டிருப்பதன் அடையாளங்கள் என்ன?

பதில்: ரத்தம், ரத்த நிறமாக, அதாவது ஆழ்ந்த சிவப்பாக இருப்பதற்குப் பதில், இளஞ்சிவப்பாக மாறும். கண்களின் கீழ் இமையை இறக்கிக் கண்ணாடியில் பார்த் தால் ஓரங்கள் இரத்தச் சிவப்பாக இருப் பதற்குப் பதில் இளஞ்சிவப்பாக இருக்கும். வேறு அறிகுறிகளும் உண்டு. பசி குறையும், சோர்வு ஏற்படும், பலஹீனமாக இருக்கும், மூச்சிரைக்கும். எரிச்சல் ஏற்படும். சில ருக்குத் தலைசுற்றல், வயிற்றைப் புரட்டல் ஏற் படும். இவை ஆரம்பக் கால அறிகுறிகள்.

கேள்வி: நோய் முற்றினால் அறிகுறி என்ன?

பதில்: நாக்கு வெளிறிப் போய் பளபளக் கும். நகங்கள் அடிக்கடி உடையும்.

கேள்வி: ரத்தசோகை வராமல் தடுப்பது எப்படி?

பதில்: ஆரோக்கியமான சத்துணவு சாப் பிடுவதுதான் வழி. இரும்புச் சத்து எதில் இருக்கிறது என்று பார்த்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக கீரை, காய்கறிகள், பருப்பு வகைகள் சேர்க்க வேண்டும். சைவ உணவைவிட அசைவ உணவில் உள்ள இரும்புச் சத்து உடலால் எளிதில் கிரகிக்கப்படுகிறது.

கேள்வி: ரத்தசோகை யாருக்கு அதிகம் ஏற்படுகிறது? ஆண்களுக்கா? பெண் களுக்கா?

பதில்: சந்தேகமின்றிப் பெண்களுக்குத் தான். காரணம் மாதவிடாய் காலத்தில் ரத்தம் இழக்கிறார்கள். கர்ப்பமாய் இருக்கும் போது வயிற்றில் உள்ள சிசுவுக்குத் தங்கள் ரத்தத்தின் மூலம் போஷாக்கு அளிக்கிறார் கள். பிரசவ நேரத்தில் ரத்தம் இழக்கிறார் கள். எனவே ஆண்களைவிடப் பெண்கள் அதிக முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.


கேள்வி: டானிக் மூலம் இரும்புச்சத்தைப் பெற முடியாதா?

பதில்: முடியும். இதற்கென்றே மருந்து கள் உள்ளன. ஆனால் இரும்புச்சத்தை மருந் தாக உட்கொண்டால் சிலருக்கு உடல் தடிப்பு உடல் அரிப்பு போன்ற பல உபாதை

கள் ஏற்படுவதுண்டு. இத்தகையவர்கள் ஊசி போட்டுக் கொள்வது பலனளிக்கும். ஆனால் டானிக், ஊசிக்கு அவசியமின்றி, சத்துள்ள உணவு உண்டு, வரும்முன் காப்பதே சிறந்தது.

கேள்வி: அனீமியாவுக்கும் வைட்டமின்களுக்கும் தொடர்பு உண்டா?





பதில்: உண்டு. குறிப்பாக வைட்டமின் 'பி.' (B). இதில் பலவகை உண்டு. அதனால் இதை பி—காம்ப்ளெக்ஸ் என்பார்கள். இவற்றுள் பி—12, ஸையனேகோபாலமின், ஃபோலிக் ஆஸிட் ஆகியவை ரத்தசோகையைத் தவிர்ப்பவை. இவையும் மருந்தாகவும் ஊசி மருந்தாகவும் கிடைக்கின்றன. ஆனால் நோய் முற்றிய நிலையில்தான் இவை அவசியம். காய்கறி, கீரை, பழங்கள், சாப்பிட்டு வந்தால் வைட்டமின் பற்றுக்குறை ஏற்படாது.

கேள்வி: முன்னெச்சரிக்கையாக வைட்டமின் மாத்திரைகளை விழுங்கி வைத்தால் என்ன?

பதில்: தேவையற்றபோது வைட்டமினை விழுங்குவதால் அந்த அதிகப்படி வைட்டமினை உடல் ஏற்பதில்லை, சேமித்து வைப்பதும்இல்லை. மலத்தின் வழியேவெளியேற்றிவிடும். எனவே வீண் பண விரயம்தான். இதில் இன்னோர் ஆபத்தும் உண்டு. வைட்டமின்களை மாத்திரைகளாக விழுங்கி வந்தால் உணவிலிருந்து வைட்டமின்களைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் சக்தியை உடல் படிப்படியாக இழந்துவிடும்.

கேள்வி: சோகை நோயுடன் வாழக் கற்றுக் கொண்டுவிட முடியாதா?

பதில்: காலத்தை ஓட்டலாம். ஆனால் நோய் கடுமையானால் வேண்டாத உடன் விளைவுகள் ஏற்படும். தவிர, ரத்தசோகை உள்ளவர் எளிதில் களைத்துப் போவதால் அவர் நன்றாக உழைக்க மாட்டார். இப்படி ஏராளமான பேரின் உழைப்புத்திறன் பாதிக்கப்பட்டால் அது நாட்டுக்கே நஷ்டமல்லவா?

கேள்வி: ரத்தசோகையை ஒழித்துக் கட்ட அரசு ஏதேனும் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதா?

பதில்: சமீப காலம்வரை இதன் முக்கியத்துவம்உணரப்படவில்லை. காரணம்மலேரியா போலவோ அல்லது அம்மை போலவோ இது ஒரு கொடிய நோயாகக் கருதப்படவில்லை. அதனால் ரத்தசோகையுடன் வாழக் கற்றுக் கொண்டுவிட்டார்கள் இந்தியர்கள். நம் நாட்டில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 50 சதவீதத்தினருக்கு ரத்தசோகை உள்ளது. பெண்களில் 60 சதவீதத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். சமீப காலமாகத்தான் இது மக்களின் ஆரோக்கியத்தை மட்டுமின்றி அவர்களுடைய உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது, எனவே தேசிய அளவில் நஷ்டம் உண்டாகிறது என்பது உணரப்பட்டிருக்கிறது. ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

கேள்வி: இவ்வளவு பெரிய பிரச்னையை எப்படி சமாளிப்பது? நம் நாட்டில் பெரும்பாலோர் ஏழைகள். சத்துணவு என்பது அவர்களுக்கு எட்டாக்கனி அல்லவா?

பதில்: உண்மைதான். இதனால்தான் உலக சுகாதாரக் கழகம், ஐ.நா. சபையின் குழந்தைகள் நலன் பிரிவு ஆகியவை இந்திய அரசுடன் ஒத்துழைத்துப் பல ஆராய்ச்சிகளைச் செய்துள்ளன. இரும்புச் சத்து குறைவாக இருப்பதால் நேரக்கூடிய ரத்தசோகையை,இரும்புச் சத்து சேர்க்கப்பட்ட உப்பைச் சமையலில் சேர்ப்பதன் மூலம் தவிர்க்கலாம் என்று இந்த ஆராய்ச்சிகளால் கண்டறியப்பட்டுள்ளது. சில இரும்புச் சத்து மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படும் தேமல் தடிப்பு போன்ற உபத்திரவங்கள், இரும்புச் சத்து சேர்ந்த உப்பைச் சமையலில் சேர்த்துக் கொள்வதால் உண்டாவதில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இப்படி ரத்த சோகையை வெற்றி கொண்டதால் குழந்தைகளின் படிப்பாற்றலும் பெரியவர்களின் உழைப்பாற்றலும் அதிகமாவதும் உணரப்பட்டுள்ளது.

கேள்வி: இந்த உப்புக்கும் சாதாரண உப்புக்கும் ருசியில் வேற்றுமை உண்டா?

பதில்: அநேகமாக இல்லையென்றே கூறிவிடலாம். பார்ப்பதற்கும் சாதா உப்பு போலத்தான் இருக்கிறது. விலை சற்று அதிகமாக இருக்கும். ஆனால் சத்துணவுக்கு ஆகக்கூடிய செலவைவிட மிகக் குறைவுதான்.

நன்றி: **சுந்தர் கெமிகல்ஸ்**

தகவல்: **மௌஷ்மி**

மாதம் ஒரு மாவட்டம்



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

செங்கல்பட்டு

மாவட்டத்திற்கு வரப்போகிறோம்

'நகரேஷு காஞ்சி' என்று வர்ணிக்கப்பட்ட நகரம் காஞ்சிமா நகரம்தான். அப்படிப்பட்டதோர் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிற சிறப்பு பெற்றது செங்கல்பட்டு மாவட்டம். இது மட்டும்தானா? மல்லைக் கடலின் ஓரத்தில் சிற்பக் கலையின் சிறப்பைக் கூறும் மாமல்லபுரம் என்ன சாதாரண ஊரா. அல்லது உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பறந்து வந்து சரணடையும் பறவைகளின் தோட்டமாக விளங்கும் வேடந்தாங்கல்தான் சாதாரணமானதா? இப்படிப்பட்ட சிறப்புக்கள் இருந்தாலும் கூடவே செங்கல்பட்டு மாவட்டத்தில் பிரச்னைகளும் இல்லாமல் இருக்க முடியாது.

அதனால்தான், கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில், பதினேழாவது மாவட்டமாகச் செங்கல்பட்டு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எனவே, செங்கல்பட்டு மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப்பிர ன், இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் பாராமுகங்களையும் சமூக விரோத சக்திகளுடைய அட்டகாசங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் தெளிவான முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். கூடவே, உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஆகஸ்டு மாத மத்தியில் நமது கல்கி பிரதிநிதிகள் செங்கல்பட்டு மாவட்டம் முழுமையும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள் செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசி — விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் செப்டம்பர் மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும் புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாப் பிரச்னைகளைப் பற்றிய செய்திகளையும் பிரசுரித்துவிட முடியாது என்பது உண்மைதான். ஆயினும் நியாயமான பிரச்னைகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லப்படுவதன் மூலம், அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும். இவற்றோடு வாழ்க்கையின் அன்றாட அவலங்களையும், சமூக விரோதிகளின் அக்கிரமங்களையும் மோசடிகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், நமது சகோதர மக்களிடத்திலும் ஓர் ஒட்டுமொத்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாமல்லவா! உடனடியாக எழுதியனுப்புங்கள்.

செங்கல்பட்டு மாவட்டம் பற்றிய பிரச்னைகள், அநீதிகள் தவிர, சாதனைகளும் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.7.87.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — செங்கல்பட்டு' என்று குறிப்பிடுதல் அவசியம்.

(தற்போது நமது நிருபர்கள் வடார்க்காடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்கள். அவர்கள் சேகரித்த தகவல்கள், கட்டுரைகளாகவும் பேட்டிகளாகவும் புகைப்படங்களுடன் ஜூலை 19, 26 இதழ்களில் இடம்பெறும்.)



உறவு தட்டளவில்

அவசரமாக வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு கமலா பஸ் ஸ்டாண்டுக்கு வந்தாள்.

ஒன்பது மணி பஸ் கிளம்ப நின்றிருந்தது.

உள்ளே வந்து ஓரிடத்தில் உட்கார முனைந்தாள்.

''எழுந்திருங்கம்மா! துணி போட்டிருக்குதே தெரியலே? எங்க அக்கா வருது! நீங்க வேறே இடத்துக்குப் போங்க!''

கமலா எழுந்தாள். இருந்த மூன்று இடங்களையும் பார்த்தாள். அத்தனையும் அக்கா தங்கையென்று ரிசர்வாகியிருந்தன.

சற்று நேரம் நின்றாள். வண்டி கிளம்பும் போது யாரோ இறங்கிவிட,ஓரிடம் அவளுக்குக் கிடைத்தது.

'அக்கா'வும் வந்து உட்கார்ந்திருந்தாள்.

ஆயிரம் விளக்கு அருகே, பஸ் ஒரு குலுங்கலுடன் நின்றது.

முன்னால் திடீரென்று நின்றுவிட்ட மற்றொரு பஸ் மீது லேசாக மோதிவிட்டிருந்தது.

பெண்கள் பகுதியில்'ஒரே கூக்குரல்.

''அக்காவுக்கு வாயிலேயிருந்து ரத்தம் வருதே! மயங்கி விழுதே! யாராச்சும் சோடா வாங்கியாங்க!''

கண்டக்டர் கேட்டார்: ''இந்தம்மாவை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போகணும். யாரம்மா கூட வர்றது?''

சலசலப்பு சட்டென்று ஓய்ந்தது. யாருமே பதில் சொல்லவில்லை.

ஆட்டோ ஒன்றைக் கூப்பிட்டு, அவளை மெல்ல அதில் ஏற்றி, கண்டக்டரே மருத்துவ மனைக்குப் போனார்.

கமலாவுக்கு ஒரே வியப்பு.

''நீயாவது கூடப் போம்மா!'' என்றாள் பக்கத்தில் உட்கார்ந்து வந்தவளை.

அவள் பதில் சொல்லாமல் மண்டையை ஆட்டிவிட்டு மற்றவர்களோடு வேறு பஸ்ஸில் இடம் பிடிக்க ஓடினாள்.

பஸ் காலி! அக்கா தங்கை உறவெல்லாம் பறந்துவிட்டிருந்தது.

மறுநாள் காலை, ஒன்பது மணி. பஸ் ஏற வந்தாள் கமலா.

மீண்டும் வழக்கமான பல்லவி.

''இங்கே உட்காராதே! அக்கா வருது. நேத்து அடிபட்டுதே அது! நீ வேறே இடம் பாரு!''

பொறுக்க முடியாமல் கேட்டாள் கமலா.

''அக்கா என்கிறீங்க! தங்கை என்கிறீங்க! அடிபட்டதும் ஒருத்தர் கூடப் போகலே ஆஸ்பத்திரிக்கு? அவங்க அவங்க வேலையைப் பார்த்துக்கிட்டு வேறே பஸ் ஏறிப் போயிட்டீங்க! ஒரே கும்பலாத்தானே தினமும் போறீங்க? இப்போ இருக்கிற கரிசனம் அப்போ ஏன் இல்லே?''

''நீ சும்மா போம்மா! ஆஸ்பத்திரிக்கு நாங்க போயிருந்தா 'வியாபாரத்துக்குச் சாமான் வாங்கிட்டு எப்போ திரும்பறது? கண்டக்டரே ஆட்டோவில் கூட்டிப் போய் மருந்து ஊசியெல்லாம் போட்டுப் பூக்கடை வரை கொண்டாந்து விட்டாரு. அந்தச் செலவு அவருதாப் போச்சு! நாங்க போனால் இதெல்லாம் ஆகுமா?''

மிகவும் எளிதாகச் சொல்லி முடித்தாள் அவள்.

சிறிது நேரத்தில் உதட்டில் சிறு பிளாஸ்திரியுடன் 'அக்கா' வந்து உட்கார்ந்தாள்.

''நேத்து பார்த்தியா! கும்பலா வந்து கூச்சல் போட்டோமோ, தப்பிச்சோம்! நீ தனியா போயிருந்தா உன் கதி என்ன ஆகியிருக்கும்? உன்னை ஆயிரம் விளக்கிலே தனியா இறக்கிட்டுப் போயிருப்பாங்க எல்லோரும், இல்லேக்கா?''

'அக்கா'வும் ஆமோதித்துத் தலையை ஆட்டினாள்.

கமலாவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

'அக்கா'வும் அவள் 'தங்கை'யும் பார்க்காதவாறு எதிர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு சிரித்தாள்.

— பர்வதவர்த்தனி





13

அந்தப் பிரமிப்பு வாழ்க்கை முழுவதும் தொடரும் என்று தெரிந்துவிட்டது. திருமணத்தன்று உறுதிப்பட்டது.

''ஆபீஸ்ல இருக்கறவாளுக்கு, நாம் இரண்டு பேருமே சேர்ந்து பத்திரிகை கொடுத்துவிடலாம். அது தவிர, உங்களுக்கு எத்தனை பத்திரிகைகள் வேண்டியிருக்கும்? அதில் எத்தனை பேர் கல்யாணத்துக்கு வருவான்னும் சொல்லணும். ஒரு கணக்கு வேண்டியிருக்கு.''

நான் முழுவதும் யோசனை பண்ணிய பிறகு எண்ணி நாலு குடும்பங்கள் கல்யாணத்திற்கு வரலாம் என்று பட்டது. மாப்பிள்ளைப் பந்தி என்று பதினைந்து பேர் தேறலாம் என்று தோன்றிற்று. கூட்டுக் குடும்பம் உடைந்து போன சமூக நிர்ப்பந்தத்தில் முதல் குடும்பம் தன்னுடையதாகத்தான் இருக்கும் என்று பட்டது. அப்பா பக்கம் உறவு யாரென்றே தெரியவில்லை. விலாசம் தேடி அனுப்பிய பத்திரிகை கூட ஆளில்லை என்று திரும்பி வந்துவிட்டது. அம்மா பக்கத்து உறவுகளைப் போய்ப் பார்த்தபோது, 'இன்றைக்குத்தான் வழி தெரிஞ்சுதா?' என்று கூசாமல் கேட்டன. 'லவ் மேரேஜா?' என்று ஒரு குடும்பம் துளைத்து எடுத்தது.

இனி உறவுகள் என்பது ஒண்டுக் குடித்தன நண்பர்கள்தான். அட்சதை தெளித்து மனப்பூர்வமாய்க் கைகுலுக்கப் போகும் ஆட்கள் அவர்கள்தான். ரிசப்ஷனுக்குக் கோட் தைத்துக் கொள்ள வேண்டுமா? இல்லை முழுக்கைச் சட்டையே போதுமா? என்று தெரியவில்லை. எந்த மாதிரி கோட் என்பதும் புரியவில்லை. ஆபீஸ் நண்பர்களிடம் இன்னும் நெருங்கிப் பழகவில்லை. ஆபீஸ் வேலை கிடைத்ததும் கைவிட்டு விட்ட காலேஜ் நண்பர்களைப் பார்க்கப் பிடிக்கவில்லை. நல்ல உடன்பிறப்புகள் இல்லை. உறவுகளும் இல்லை.

நிழல் புத்தகம்



தானே கடைக்குப் போனான். துணி விற்பவனிடமே ஆலோசனை கேட்டான். 'கோட்டு தைக்காமல் கல்யாணமா?' என்று அந்தக் கடைக்காரன் சிரித்தபோது, அது சிநேகிதமா, வியாபாரமா என்று புரியவில்லை. உள் சட்டையும் டையும் 'டை' பின்னும் கடைக்காரனே தேர்ந்தெடுத்துக் கொடுத்தான். ஷூஸ் வாங்குகிற இடத்திலும் குழப்பமாய்த்தான் இருந்தது. ஸாக்ஸ் போட்டு, கால் இறுக்கிக் கட்டி, நடந்து, கண்ணாடி முன் பார்த்தபோது, சிங்கப்பூர் செருப்பும் நாலு முழ வேட்டியும்தான் சுகம் என்று தோன்றிற்று.

வேட்டியை டப்பாக் கட்டாய்க் கட்டி, மெல்லிய ஸ்லாக் ஷர்ட் போட்டு, சிங்கப்பூர் செருப்பு சப்தம் போட, புதுப் பெண்டாட்டியோடு சிவாஜி படத்துக்கு ஓடிப் போய் டிக்கெட் வாங்க ஆசை வந்தது.

லலிதா சிவாஜி படம் பார்ப்பாளா...? தெரியவில்லை. படம் பார்த்துவிட்டு, சைக்கிள் ரிக்ஷாவில் வீடு திரும்பி வெறும் மோர் சாதம் தொட்டுக் கொள்ளக் குழம்பு என்று சாப்பிட்டுவிட்டு, பாக்கு மட்டும் போட்டுக் கொண்டு, பெண்டாட்டியோடு பார்த்த படம் பற்றிப் பேசியபடியே தூங்கிப் போகிற சுகம் வருமா என்பது தெரியவில்லை.

அடுத்த வாரம், 'ஜெய்சங்கர்' படம் போலாமா?' என்று மனைவி தயங்கிக் கேட்க, பார்க்கலாம் என்று அழுத்தலாய்ப் பதில் சொல்லிவிட்டு, முன்கூட்டியே டிக்கெட் வாங்கி, விபூதி டப்பாவில் ஒளித்து வைத்துவிட்டு, 'எனக்குப் பிடிச்ச சமையல் பண்ணி, எனக்குப் பிடிச்ச மாதிரி நடந்து கொண்டால் ஜெய்சங்கர் படம், இல்லேன்னா இல்லை' என்று கட்டளை போட முடியுமா? புரியவில்லை.

'என்ன வேணுமானாலும் சமைக்கிறேன், அடுத்த ரூம்ல அம்மா படுத்துண்டிருக்கா. இத்தனை அழிச்சாட்டியம் பண்றது நல்லதா?' என்று புது மனைவி அழ, விபூதி டப்பாவிலிருந்து டிக்கெட்டைக் காட்டிச் சிரிக்க வைக்க முடியுமா? ஜெய்சங்கர் படத்துக்குப் போகும்போதே மீண்டும் பேரம் பேச முடியுமா? பேரத்துக்கு வெளிப்படையாய் ஒத்துக் கொள்ளவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் மனைவி சிவப்பதைப் பார்க்க முடியுமா?

லலிதா, 'ஹூ இஸ் ஜெய்சங்கர்' என்று கேட்பாள். கல்யாணப் பத்திரிகை வழங்கும் போதே, கல்யாண ஏற்பாடுகள் நடக்கும் போதே லலிதாவுக்கு எதிர்மறையாய் ஒரு கற்பனைப் பெண், கற்பனை மனைவி மனசுக்குள் வந்துவிட்டாள்.

பாலகுமாரன்

கல்யாணத்திற்கு முதல் நாள் இன்னும் கலவரம் அதிகரித்தது.

ஜானவாசம் எங்கேயிருந்து என்று அம்மா கேட்ட கேள்விக்கு, ஜானவாசம் வேண்டுமா? என்று பதில் கேள்வி வந்தது. ஏன் வேண்டாம் என்று திருப்பிக் கேட்க அம்மாவுக்கு முடியவில்லை. இவனே போய்க் கேட்பதும் நல்லதில்லை என்று தடுத்துவிட்டாள். கேட்க வேறு ஆள் இல்லை. ஒண்டுக் குடித்தனத்திடம் குறைப்பட்டுக் கொண்ட போது, 'இது இப்ப ஃபேஷன்!' என்று தலையாட்டிவிட்டார்கள்.

ஆனால் அம்மா முகத்தில் குறை அப்பிக் கிடந்தது. ஆள் கூட்டம் குறைவாய் இருந்த மண்டபத்தில் நாதஸ்வரக்காரன் மட்டும் அரை மணி நேரம் வாசித்துவிட்டுப் போய் விட்டான்.

'உங்க பக்கத்துக் கூட்டம் கூடக் காணுமே!' என்று சங்கரனிடம் கவலையோடு விசாரித்தபோது, 'நாளைக்குக் காலையில் பாருங்கோ கூட்டத்தை!' என்று உற்சாகத்தோடு பேசினார்.

ஆனால் ஆறு மணிக்கு எழுந்து பல் தேய்த்தபோது கூடம் காலியாக இருந்தது. ஏழு மணிக்கு மெல்ல குவியத் துவங்கியது. எட்டு மணிக்கு நெரிசலாயிற்று. யார் யாரோ வந்து கைகுலுக்கினார்கள். பாப் தலையும், லிப்ஸ்டிக் முகமுமாய்ப் பெண்கள் தெரிந்தார்கள். லலிதா ஒரு நிமிஷம் என்று சாஸ்திரிகளிடம் பர்மிஷன் கேட்டு எழுந்து போய் ஒரு சல்வார் கம்மீஸ் பெண்ணை ஓடிப் போய்க் கட்டிக் கொண்டாள். பம்பாய் சிநேகிதியாம். காலை விமானத்தில் திருமணத்திற்காகவே வந்திருக்கிறாளாம்.

''மாப்பிள்ளை என்னவாக்கும் பண்றார்'' என்கிற பாலக்காட்டுப் பேச்சுகள் அதிகம் கேட்டன. பம்பாய் பாலக்காட்டு சிநேகிதர்கள் அதிகமாம். அநேகமாய் எல்லோரும் வந்திருக்கிறார்களாம்.

வைர பேசரியும் டாலடிக்கிற மூக்குத்தியுமாய் இருக்கிற மாமிகள் கூட ஆங்கிலத்தில் தான் பேசினார்கள். சிவப்புக் கல் தோடும் ஒட்டிய கன்னமும் களைத்த முகமும் கலைந்த தலையுமாய், கட்டின புதுசு உடம்பில் ஒட்டாமல், தனியே அம்மா நின்று கொண்டிருந்தாள்.

''யார், யாருக்கு உறவு?'' என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

''டேய் சங்கரா.... கெட்டிக்காரன்டா நீ... கல்யாணத்தைச் சிப்பா முடிச்சுட்டே'' என்று யாரோ சொல்லிச் சிரித்ததும் அதற்குச் சங்கரன் தலையாட்டலும் உள்ளே ஓர் அவமானக் கோபம் கொடுத்தது.

'இந்தக் கல்யாணம் சீப்பா.... நான் சீப்பா?' என்கிற ஆத்திரம் வந்தது.

பிற்பகல் தாலி கட்டி அம்மாவோடும் லலிதாவோடும் தன் வீட்டுக்குள் நுழைகையில் கூச்சமாக இருந்தது. 'வெல்கம்' என்று எழுதியிருந்த கோலத்தின் மீது பக்கத்து வீட்டு மாமி ஆரத்தி கொட்டிக் கலைத்தபோது கோபம் வந்தது. கொட்டினவளை உற்றுப் பார்த்து லலிதா சிரித்தபோது உள் கோபம் அதிகமாயிற்று. நாசூக்கே இல்லாத ஜனங்களுக்கு நடுவே பிறந்து வளர்ந்து விட்டோம் என்று மனசு குறைப்பட்டது.

லலிதா மூலை மூலையாய் உற்றுப் பார்த்தாள். பாதி காப்பி சாப்பிட்டு விட்டு மீதியை வைத்துவிட்டாள். ஏன் என்று ஜாடையாய்க் கேட்டதற்கு, ''ரொம்ப ஸ்ட்ராங்!'' என்று கிசுகிசுப்பாய்ப் பதில் சொன்னாள். லலிதாவைக் குழந்தைகள் சுற்றிச் சுற்றி ஓடின. சின்ன ஹாலில் இருபது பேர்கள் நிற்கும்படியாய் ஆயிற்று. வாசலில் தனி கூட்டம் நின்றது. அந்த பாப் தலை பாம்பே பெண் கூடவே இருந்தாள். லலிதாவின் காதில் அவள் ஏதோ அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்.

காரில் சத்திரம் திரும்பும்போது பாப் தலைப் பெண் ஆங்கிலத்தில் கேட்டாள்:

''வேறு சௌகரியமான வீடு பார்த்து விடுவீர்கள் இல்லையா?''

கேள்வி அவளுடையதா லலிதாவுடையதா என்று தெரியவில்லை.

''அவசியமெனில் செய்துவிடலாம்'' என்று முரளி பதில் சொன்னான்.

''பியானோ வைக்க வேண்டுமல்லவா... பியானோ இல்லாமல் லலிதா உயிர் வாழ மாட்டாள், எனக்குத் தெரியும்.''

குடித்தனம் பண்ணப் பியானோ அவசியமா? புரியவில்லை. சின்னப் பெட்டியில் எடுத்துப் போகும் வயலின், புல்புல்தாரா என்று ஏன் லலிதா கற்றுக் கொண்டிருக்கக் கூடாது?

''லலிதா, உன் வீடு அற்புதம். அழகு கொஞ்சுகிற இடம். முதல் இரவு உன் வீட்டிலேயே வைத்துக் கொள். ஹோட்டல் அறை போகாதே.... ஆமாம். முரளி என்ன சொல்கிறார் தெரியவில்லையே....'' கன்னிப் பெண் கண்டதும் பேசிக் கொண்டு வந்தது.

லலிதா தெருவையே பார்த்துக் கொண்டு வந்தாள். சத்திரத்தில் இறங்கி எதுவும் சொல்லிக் கொள்ளாமல் தன் அறை நோக்கிப் போனாள்.

லலிதாவுக்குத் தன் வீடு பிடிக்கவில்லை என்பதாய் மனசுக்குப் பட்டது. பிடிக்காதது வீடா? மனிதர்களா....? இரண்டும்தானா?

ரிசப்ஷன் இன்னும் ஜாஜ்வல்யமாய் இருந்தது. அம்மாவைக் கூப்பிட்டு முதல் போட்டோ எடுத்தார்கள். பிறகு சங்கரனோடு சேர்ந்து ஒரு போட்டோ எடுத்தார்கள். மற்றதெல்லாம் நண்பர்கள். நண்பர்கள்.... நண்பர்கள்தான்.

கோட்டும் சூட்டுமாய் ஆட்கள். சூடிதாரும் பட்டுப்புடைவையுமாய்ப் பெண்கள். லலிதாவுக்குக் கண் எழுதி, உதடு எழுதி, புருவம் வரைந்து, முகம் முழுவதும் ஆயில் மேக்கப் செய்து, சினிமா ஒப்பனையாய்ச் செய்திருந்தார்கள். லலிதா தோளை அணைத்துக் கொண்டு யாரோ போட்டோவுக்கு போஸ் கொடுத்தான். உயிர் சிநேகிதன் என்று லலிதா அறிமுகப்படுத்த, அவன் கைகுலுக்கினான். பிறகு விரலைத் துப்பாக்கி மாதிரி

வைத்துக் கொண்டான். ''ஏய் மதராஸி, இந்தப் பெண்ணை என்னிடம் கொடுத்து விடு. இல்லையேல் இந்தத் துப்பாக்கி கர்ஜிக்கும்!'' என்று வசனம் பேசினான்.

விளையாட்டாம், பாராட்டாம்!

முரளி சிரித்தான்.

'எடுத்துக்கொண்டுபோ' என்று சொல்லி விடலாமா? என்று யோசித்தான்.

உள்ளே ஒரு பெண் வந்தாள். தலைகுனிந்து ஒற்றைப் பின்னல் துவளக் குத்துக்காலிட்டு உட்கார்ந்தாள்.

'பேயாண்டி தனைக் கண்டு நீயேண்டி மையல் கொண்டாய்' என்று பாட்டுப் பாடினாள். 'பெண்ணாகப் பிறந்ததினால் மாறாத காதல் கொண்டேன்' என்று அவளே பதில் சொன்னாள்.

இங்கே மயக்கம் இல்லை.

ஆண் கவரவில்லை.

ஆணின் வடிவழகோ வளமோ வீடோ உறவோ சுற்று ஜனங்களோ கவரவில்லை. கவரும் யோக்கியதையில்லை.

இவன் நல்லவன். தீங்கில்லாதவன். கொக்கிப் போட்டுப் பிடித்த பெரிய மீன். சுருக்குப் போட்டுச் சந்தையிலிருந்து இழுத்து வந்த மாடு. பல் பார்த்து வாங்கி வந்த குதிரை.

உள்ளே சீட்டுக்கட்டு கோபுரம் சப்பணிக்க உட்கார்ந்து கொண்டது. உடம்பில் அயர்ச்சி பரவிற்று. தலையில் மெல்லிய கிறுகிறுப்பு வந்தது.

அம்மா எங்கே என்று தேட ஆசைப் பட்டது. தெரிந்த பெண்ணை விசாரித்தான். அம்மா மாடி வராந்தாவில் படுத்துக்கொண்டிருக்கிறாளாம். முடியவில்லையாம்.

மாலையைக் கழற்றிச் சோபாவின்மீது போட்டான். ''சங்கரன் இங்கே வாங்கோ'' என்று மாடிக்கு ஓடினான். மாடியில் யாரு மற்ற வராந்தாவில் அம்மா சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் கை வைத்ததும் திடுக்கிட்டு எழுந்தாள்.

''என்னடா வந்துட்டே...'' என்றாள்.

''என்னம்மா உடம்புக்கு?''

''தலை சுத்தறது.''

''ஏன்?''

அம்மா அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏம்மா...''

''பயமாயிருக்குடா?''

''எதுக்கு?''

''செத்துப் போயிடுவேன்னு பயமா யிருக்கு முரளி.''

''என்னம்மா இது?''

''உனக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கா முரளி?''

''எதுக்கும்மா கேட்கிறே?''

''ரொம்பப் பெரிய இடம்.''

''அதனால் என்ன?''

''கூடவே கூட்டிண்டு போயிடுவாளோ, உன்னை?''

''எங்கம்மா?''

''அவர்கள் இடத்துக்கு.''

''ஏன் இப்படிக் கேட்கிறே?''

''மனசுல பட்டது.''

''நான் போகமாட்டேன்.''

''போகணும். போறதுதான் நல்லது.''

''என்ன நீ.... ஏதாவது உளறிண்டு....''

அம்மா கண்ணை மூடிக் கொண்டாள். சரிந்தாள். சுருண்டு கொண்டாள். அவன் விழியோரம் நீர் கசிந்தது.


''முரளி! ஜி. எம். வந்திருக்கார்!'' சங்கரன் குரல் கொடுக்க, கீழே ஓடினான். வழியில் யாரோ மாலை கொடுத்தார்கள். மாட்டிக் கொண்டான். ஜி. எம். கைகுலுக்கினார். போட்டோக்கள் மின்னின. கண் கூசிற்று.

(தொடரும்)

வேலையும், பெருந்தன்மை!

கதை - கா.சு.வேலாயுதன்

படம் - கரோ




அந்தப் பக்கமா ஆட்டோலே போயிட்டிருந்தேன். இதைக் கையிலே பிடிக்காம ஸீட் மேலே பக்கத்தில் வச்சிருந்தது தப்பு. குலுக்கல்லே எகிறி விழுந்திருக்கு! நான் கவனிக்கலே....
...ரொம்ப வால்யுபிள் டாகுமெண்ட்ஸ் இருக்குப்பா இதிலே... உனக்குப் பிரதியுபகாரமா என்னால் முடிந்த எதையும் செய்யக் கடமைப் பட்டிருக்கேன்... அது சரி...
நல்ல சான்ஸ்! இவர் கம்பெனியிலேயே நமக்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்கச் சொல்லலாம்!
மூர்த்தி யோசித்து முடிவதற்குள், விநோத் பேசிக் கொண்டே போனார்...
நீ யாரு? என்ன பண்றே...?
பி.எஸ்ஸி முடிச்சிருக்கேன் ஸார். பஸ்ட் கிளாஸ். வேலை தேடிக்கிட்டிருக்கேன். என் அப்பா சச்சிதானந்தம் ஸெயிண்ட் மைக்கேல் பள்ளியில் பிஸிக்ஸ் மாஸ்டர்.
விநோத் வியப்பும் மகிழ்ச்சியுமாக...
அட, சச்சிதானந்தம் மகனா நீ! அதான் பிரதியுபகாரமா எதையுமே என்னைக் கேட்க மாட்டேங்கறே! அப்பாவின் பெருந்தன்மை மகனிடம் இருக்காதா, பின்னே!


மூர்த்தி திடுக்கிட்டு...
ஸார், ஸார்! நீங்க தப்பா புரிஞ்சுக் கிட்டீங்க. வந்து நான்... நான் அப்படியெல்லாம் இல்லே ஸார்!
ஆஹா! எவ்வளவு அடக்கமா பேசறே— அசல் அப்பா மாதிரியே! இதைக் கேளு...
யதேச்சையா ஒருநாள் உங்கப்பாவைக் கடைத் தெருவிலே சந்திச்சப்ப, 'நான் இவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறதுக்கு நீங்கதான் காரணம்; அதனுல் அதற்குப் பிரதியா இப்ப...' என்று ஆரம்பிச்சேன்... அவர் என்னடான்னு...
...'கடமை-யைச் செய்தேன். அதற்குப் பிரதி-பலனை உன்னிடம் எதிர் பார்க்கலே'-ன்னு ஒரே போடா போட்டுட்டார்! நான் அசந்துட்டேன்!...
...அப்பா குணம் மகனுக்குத் தப்பாம அப்படியே இருக்கு. அதான் எதையும் வாய் விட்டுக் கேட்கவே மாட்டேங்கறே! சரி, போயிட்டு வா! அப்பாவுக்கு என் வணக்கம் சொல்லு!
ஏமாற்றத்துடன் திரும்பினுன் மூர்த்தி...
அப்பா! கைக்-கெட்டிய வேலை நழுவிப் போயிடுச்சே! உங்க பெருந்-தன்மை தலையில் இடி விழ!

விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு



TAS

நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக
வடிவமைககப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கொடுத்து
தெம்பை ஊட்டுகின்றது

கொழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ
சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன்
அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரீஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 54
"நஞ்சினும் கொடியாள்"

மாமல்லபுரத்தில் பழைய பல்லவ சக்கரவர்த்திகளின் மாளிகை ஒன்றில் அன்றிரவு அம்மூன்று வீரசிகாமணிகளும் தங்கினார்கள். இரவு உணவு அருந்தியானதும் மலையமான் அரசர் ஐந்து ரதங்களுக்கு அருகில் அரவான் கதை நடக்கிறது என்று கேள்விப்பட்டு அதைக் கேட்கப் போய்விட்டார். ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் அரண்மனை மேல் மாடத்துக்குச் சென்றார்கள்.

மேல் மாடத்திலிருந்து ஆதித்த கரிகாலன் மாமல்லபுரத்தின் இரவுத் தோற்றத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆங்காங்கு மினுக்கு மினுக்கு என்று சில தீபங்கள் மங்கலாகப் பிரகாசித்தன. வீதிகளில் பெரும்பாலும் நிசப்தம் குடி கொண்டிருந்தது. கோவில்களில் அர்த்தஜாம பூஜை முடிந்து வெளிக் கதவுகளைச் சாத்திக் கொண்டிருந்தார்கள். சமுத்திரத்தின் கோஷம் 'ஓ' வென்று சோகத் தொனியாகக் கேட்டது. ஐந்து ரதங்களுக்குப் பக்கத்தில் வில்லுபபாட்டு வித்வானும் அவருடைய கோஷ்டியும் அரவான் கதை நடத்த, அவர்களைச் சூழ்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்த ஜனக் கூட்டம் தீவர்த்திகளின் ஒளியில் கரிய நிழல் உருவங்களாகத் தெரிந்தது.

"இந்த முதிர்ந்த வயதில் கிழவர் கதை கேட்கப் போய் விட்டார், பார்! என்ன இருந்தாலும் பழைய காலத்து மனிதர்கள்தான் மனிதர்கள்! அவர்களுடைய உடல் வலிமையும் மனோ திடமும் இந்த நாளில் யாருக்கு உண்டு?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"அரசே! தாங்களும் பழைய காலத்தின் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டீர்களா? பழைய கால மனிதர்கள் சாதித்த என்ன காரியத்தை நம் காலத்தில் நாம் சாதிக்கவில்லை? தங்களைப் போல் இளம் பருவத்தில் போர்க்களத்தில் வீரச்செயல் புரிந்தவர்களைப் பற்றிக் கதைகளிலும் காவியத்திலும் கூடக் கேட்டதில்லையே?" என்றான் பார்த்திபேந்திரன்.

"பார்த்திபா! நீ உண்மை உள்ளம் படைத்தவன், மனத்தில் ஒன்று வைத்துக் கொண்டு வாயினால் ஒன்று பேசாதவன் என்பதை நன்கு அறிந்திருக்-

கிறேன். இல்லாவிட்டால் நீ என்னுடைய நண்பன் அல்ல, இத சத்ரு என்றே சந்தேகிப்பேன். அவ்வளவு தூரம் என்னைக் குறித்து நீ முகஸ்துதி செய்கிறாய். முகஸ்துதியைப் போல் ஒருவனைப் பாதாளப் படுகுழியில் தள்ளக் கூடியது வேறொன்றுமில்லை!'' என்றான் ஆதித்த கரிகாலன்.


''ஐயா! சுயநல நோக்கத்துடன் ஒருவனைப் பற்றி இல்லாத உயர்வைப் புனைந்து சொன்னால் அது முகஸ்துதியாகும். தஞ்சாவூரில் பழுவேட்டரையர்களின் அடிமையாக இருக்கிறானே மதுராந்தகன், அவனிடம் சென்று 'நீ வீராதி வீரன்' என்று நான் புகழ்ந்தால் அது முகஸ்துதியாகும். அப்படி நான் எப்போதாவது செய்ததாகத் தெரிந்தால் என்னை உடனே தங்கள் கையிலுள்ள வாளினால் கொன்றுவிடுங்கள். தங்களைப் பற்றி நான் சொன்னதில் ஒரு வார்த்தை கூட அதிகம் இல்லையே? பழைய காலத்தில் எந்த வீரன் இவ்வளவு இளம் வயதில் இத்தனை பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறான்! தங்கள் பெரிய பாட்டனாராகிய யானை மேல் துஞ்சின இராஜாதித்தியரை ஒரு வேளை தங்களுக்குச் சமமாக வேணுமானால் சொல்லலாம்; தங்களைவிட அதிகம் என்று அவரையும் சொல்ல முடியாது......''

''நிறுத்து, பார்த்திபா, நிறுத்து! இராஜாதித்தியர் எங்கே? நான் எங்கே? மகா சமுத்திரம் போல் பொங்கி வந்த இராஷ்டிர கூடர்களின் மாபெரும் சைன்யத்தை ஒரு சின்னஞ்சிறு படையை வைத்துக் கொண்டு எதிர்த்து நிர்மூலமாக்கி வீர சொர்க்கம் அடைந்த இராஜாதித்தியரைப் பற்றிப் பேசுவதற்கே நாம் தகுதியற்றவர்கள். அவருடன் நம்மை ஒப்பிட்டுக் கொள்வதா? சோழகுலம் இருக்கட்டும்; நீ பிறந்த பல்லவ குலத்தில் முற்காலத்தில் எப்பேர்ப்பட்ட மகா புருஷர்கள் இருந்தார்கள்? மகேந்திர வர்மரையும் மாமல்லரையும் இனி இந்த நாட்டில் எப்போதாவது காணப் போகிறோமா? தெற்கே துங்கபத்திரையிலிருந்து வடக்கே நர்மதை வரையில் ஒரு குடை நிழலில் ஆண்ட புலிகேசியை வென்று வாதாபியை அழித்து ஜயஸ்தம்பம் நாட்டிய நரசிம்ம வர்மர் எங்கே? நீயும் நானும் எங்கே? இந்த மாமல்லபுரத்தைப் போல் ஒரு சொப்பன புரியை நம்முடைய காலத்திலோ நமக்குப் பிற்காலத்திலோ யாராவது சிருஷ்டி செய்ய முடியுமா?.... அடடா! ஒரு தடவை நாலு புறமும் நன்றாய்ப் பார், பார்த்திபா! அதோ வில்லுப் பாட்டு நடக்கிறதே, அங்கே உற்றுப் பார்! அம்மாதிரி கற்பாறைகளைக் குடைந்து அற்புத ரதங்களின் வடிவங்களிலே அமைத்தவர்கள் சாதாரண மனிதர்களா? முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமல்லபுரம் எத்தகைய கோலாகலமான காட்சி அளித்திருக்க வேண்டுமென்று நினைக்கும்போதே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது! உனக்கு அத்தகைய உணர்ச்சி உண்டாகவில்லையா? உன் முன்னோர்களைப் பற்றி எண்ணும் போது உன் தோள்கள் பூரிக்கவில்லையா?......''

''அரசே! சற்று முன்பு தங்களை முகஸ்துதி செய்வதாகச் சொன்னீர்களே? சில சமயம் தங்களிடமுள்ள குற்றங் குறைகளையும் நான் எடுத்துச் சொல்வதுண்டு என்பதை மறந்து விட்டீர்கள். சிற்பம் — சித்திரம் — கலை என்று வாணாளை வீணாக அடிக்கும் பைத்தியம் தங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பைத்தியம் பிடித்ததினாலேதான் என் முன்னோர்கள் அடைந்த வெற்றியெல்லாம் வீணாக ஆயிற்று. வாதாபிக்குச் சென்று ஜயஸ்தம்பம் நாட்டி விட்டு மாமல்லர் திரும்பி வந்தாரே? பிறகு என்ன செய்தார்? கற்களைச் செதுக்கிக்கொண்டும் பாறைகளைக் குடைந்து கொண்டும் உட்கார்ந்திருந்தார்! அதன் பலன் என்ன? சில காலத்துக்கெல்லாம் மறுபடியும் சளுக்கர்கள் தலைதூக்கினார்கள். பெரும் படையுடன் மீண்டும் பழி வாங்குவதற்கு வந்தார்கள். காஞ்சியையும் உறையூரையும் அழித்தார்கள். மதுரை வரையில் சென்றார்கள். நெடுமாற பாண்டியன் மட்டும் நெல்வேலியில் சளுக்கர் படையைத் தடுத்து நிறுத்தித் தோற்கடித்திராவிட்டால் இன்று வரை இத்தென்னாடு முழுதும் சளுக்கர் ஆட்சியில் இருந்திருக்கும் அல்லவா?''

"இல்லை, பார்த்திபா, இல்லை! உலகில் எந்த அரச குலமும் என்றென்றைக்கும் நீடித்திருந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. இராமர் பிறந்த இக்ஷ்வாகு குலத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. சளுக்கர்களை வீழ்த்த இரட்டை மண்டலத்தார் தோன்றினார்கள். இராஜ்யங்கள் சில சமயம் உன்னத நிலைமை அடைவதும் சில சமயம் தாழ்ச்சி உறுவதும் இயல்பு. சில இராஜ்யங்கள் சில காலம் எவ்வளவோ உன்னதமாக இருந்து விட்டு இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. என்னுடைய முன்னோர்களையே பார்! கரிகால் வளவன், கிள்ளி வளவன் முதலிய சோழ மன்னர்கள் எவ்வளவோ சீரும் சிறப்புமாயிருந்தார்கள். அவர்களையெல்லாம் பற்றி இப்போது நமக்கு என்ன தெரிந்திருக்கிறது? கவிஞர்கள் சிலர் அவர்களைப் புகழ்ந்து பாடியிருப்பதனால் அவர்கள் பேரையாவது தெரிந்து கொண்டிருக்கிறோம். கவி பாடிய பாணர்கள் உண்மையைத் தான் பாடினார்களோ, அல்லது நன்றாக மதுபானம் செய்துவிட்டு, மனம் போன போக்கில் பாடினார்களோ, நமக்குத் தெரியாது. ஆனால் மகேந்திர பல்லவரும் மாமல்லரும் இந்தச் சிற்பபுரியைச் சிருஷ்டித்தார்களே, இது ஆயிரமாயிரம் ஆண்டு காலம் அவர்களுடைய பெருமையை உலகத்துக்கு உணர்த்திக் கொண்டிருக்கும். அவர்கள் செய்த காரியத்துக்கு ஈடாக நீயும் நானும் என்ன செய்திருக்கிறோம்! போர்க்களத்திலே பல்லாயிரம் மனிதர்களைக் கொன்று குவித்திருக்கிறோம்; இரத்த வெள்ளம் ஓடச் செய்திருக்கிறோம். உலகில் நம் பெயரை நிலைநிறுத்த வேறு என்ன செய்திருக்கிறோம்?"

இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் இவ்விதம் பேசுவது ஆதித்த கரிகாலன் தானா என்று ஐயுறும் பாவனையுடன் சிறிது நேரம் திகைத்திருந்தான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு, "அரசே! போரையும் வீரத்தையும் குறித்துத் தாங்களே இவ்விதம் பேசுவது என்றால், நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? தங்களுடைய மனம்



இன்று சரியான நிலையில் இல்லை. ஆகையினாலேயே இப்படிப் பேசுகிறீர்கள்! ஐயா! தங்கள் மனத்திலுள்ள வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லலாகாதா? தங்களுடைய வயிர நெஞ்சத்தைச் சிறிது திறந்து காட்டக் கூடாதா?" என்று ஆவலோடு கேட்டான்.

"பார்த்திபா! என் நெஞ்சைப் பிளந்து காட்டினேனாயின், அதற்குள்ளே என்ன இருக்கும், — எவர் இருப்பர் என்று நினைக்கிறாய்?"

"அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், சுவாமி!"

"என்னைப் பெற்ற தாயும் தந்தையும் இருக்க மாட்டார்கள். என் உயிரினும் இனிய தங்கையும் தம்பியும் இருக்க மாட்டார்கள். என் உயிருக்குயிராகிய நண்பர்களாகிய நீயும் வந்தியத்தேவனும் இருக்க மாட்டார்கள். வஞ்சகமே வடிவான ஒரு பெண் அதில் இருப்பாள். பாவமே உருவான பழுவூர் இளையராணி அதில் இருப்பாள். நஞ்சினும் கொடியவளான நந்தினி என் நெஞ்சுக்குள்ளே இருந்து என்னைப் படுத்தி வைக்கும் பாட்டை இன்று வரை வாயைத் திறந்து யாரிடமும் சொன்னதில்லை. உன்னிடந்தான் இன்று சொன்னேன்!" என்று ஆதித்த கரிகாலன் கூறிய வார்த்தைகளில் தணலின் ஜுவாலை வீசிற்று.

"அரசே! அதை ஒருவாறு நான் ஊகித்தேன். பழுவூர் இளைய ராணியின் பேச்சு வரும்போதெல்லாம் தங்கள் முகம் கறுத்துக் கண்கள் சிவந்து, சொல்ல முடியாத மனவேதனையை வெளியிட்டதைக் கொண்டு அறிந்தேன். ஆனால் இந்தத் தகுதியில்லாத மோகம் எப்படித் தங்கள் நெஞ்சில் இடம் பெற்றது? அன்னியப் பெண்களையெல்லாம் அன்னையெனக் கருதும் மரபில்

தாங்கள் வந்தவராயிற்றே? பழுவேட்டரையர் தங்கள் குலத்துக்கு நெடுங்கால உறவினர்; பிராயம் முதிர்ந்தவர். இன்றைக்கு அவர்கள் நமக்குப் பகைவர்களானாலும்முன்னால்அப்படியில்லையே? தங்கள் தந்தையும் பாட்டனாரும் அவரை எவ்வளவு மதித்து மரியாதை செய்தார்கள்? அப்படிப்பட்டவர் அக்னி சாக்ஷியாக மணந்து கொண்ட பெண்ணை... அவள் எவ்வளவுதான் கெட்டவளானாலும்...... தாங்கள் மனத்திலும் கருதலாமா?''

''கூடாது, பார்த்திபா, கூடாது! அது எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாய்? தெரிந்திருப்பதினாலேதான் இந்த மனவேதனை. அவள் பழுவேட்டரையரை மணந்த பிறகு என் நெஞ்சில் இடம் பெறவில்லை. அதற்கு வெகு காலம் முன்பே என் உள்ளத்தில்அவளுடையமோகவிஷம் ஏறிவிட்டது. அதைக் களைந்தெறிய எவ்வளவோ முயன்றும்முடியவில்லை. குற்றம் எல்லாம் அவள் பேரில் என்று தோன்றும்படி நான் பேசுகிறேன். குற்றம் யாருடையது என்பதைக் கடவுளே அறிவார். பார்க்கப் போனால், பாவம் பழியெல்லாம் எங்களைப் படைத்த கடவுள் தலையிலேயே விழ வேண்டும். அல்லது எங்களைச் சந்திக்கப் பண்ணிப் பின்னர் பிரித்து வைத்த விதியின் பேரில் குற்றம் சொல்ல வேண்டும்!''

''அரசே! நந்தினி பழுவூர் ராணியாவதற்கு முன்னால் தாங்கள் அவளைச் சந்தித்ததுண்டா? எங்கே, எப்போது எப்படிச் சந்தித்தீர்கள்?''

''அது பெரிய கதை. இன்றைக்கு அதைக் கேட்க விரும்புகிறாயா?''

''கட்டாயம் கேட்க விரும்புகிறேன். அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கு மனநிம்மதியிராது. நாளைக்கு இலங்கை போகச் சொல்லுகிறீர்களே? அங்கே சென்று என் கடமையைச் சரிவரச் செய்ய முடியாது. நிலைமை இன்னதென்பதைத் தெரிந்து கொண்டு தங்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனால்தான் என் உள்ளம் ஒருவாறு நிம்மதி அடையும்!''

''நண்பா! எனக்கு ஆறுதல் சொல்லப் போகிறாயா? இந்த ஜன்மத்தில் எனக்கு ஆறுதல் என்பது கிடையாது. அடுத்த பிறவியில் உண்டா என்பதும் சந்தேகம்தான். உன்னுடைய மன நிம்மதிக்காகச் சொல்கிறேன். உன்னிடம் சொல்லாமல் நான் எதையோ ஒளித்து வைத்திருப்பதாக எண்ணிக் கொண்டு நீ இலங்கை போக வேண்டியதில்லை!''

இவ்விதம் கூறி ஆதித்த கரிகாலன் சிறிது நிதானித்தான். பிறகு ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டுச் சொல்லத் தொடங்கினான்.

அத்தியாயம் 55
நந்தினியின் காதலன்

முதன் முதலாக என்னுடைய பன்னிரண்டாம் பிராயத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். ஒரு நாள் பழையாறையில் எங்கள் அரண்மனையின் பின்புறத்திலுள்ள நீர் ஓடையில் நானும் என் தங்கையும் தம்பியும் ஓடம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். விளையாட்டு முடிந்து ஓடத்திலிருந்து இறங்கிப் பூஞ்சோலை வழியாக அரண்மனைக்குச் சென்றோம். வழியில் எங்கள் பெரிய பாட்டி செம்பியன் மாதேவியின் குரல் கேட்டது. நாங்கள் மூன்று பேரும் பாட்டியின் செல்லமாக வளர்ந்தவர்கள். பாட்டியிடம் நாங்கள் ஓடம் விட்டதைப் பற்றிச் சொல்வதற்காக அவருடைய குரல் கேட்ட கொடிவீட்டுக்குள் புகுந்தோம். அங்கே பாட்டியைத் தவிர இன்னும் மூன்று பேர் இருந்தார்கள். மூன்று பேரில் ஒருத்தி எங்களையொத்த பிராயத்துச் சிறு பெண். மற்ற இருவரும் அவளுடைய பெற்றோர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்ணைப் பற்றி அவர்

கள் ஏதோ மாதேவடிகளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கொடி வீட்டுக்குள் புகுந்ததும் அங்கிருந்தஎல்லாரும்எங்களைப்பார்த்தார்கள். ஆனால் அந்தச் சிறு பெண்ணின் வியப்பினால் விரிந்த நெடிய கண்கள் எங்களைப் பார்த்தது மட்டுமே என் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தக் காட்சி இன்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் என் மனக்கண் முன்னால் நிற்கிறது....''

இவ்விதம் கூறிக் கரிகாலன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தான். வானத்தில் அச்சமயம் உலாவிய மெல்லிய மேகத் திரைகளுக்குள்ளே அந்தச் சிறு பெண்ணின் முகத்தை அவன் பார்த்தானோ என்னமோ தெரியாது.

''ஐயா! அப்புறம் சொல்லுங்கள்!'' என்று பார்த்திபேந்திரன் கேட்டதும், கரிகாலன் இந்த உலகத்துக்கு வந்து கதையைத் தொடர்ந்தான்:

''பாட்டியிடம் நாங்கள் ஓடம்விட்டு விளையாடியதைப் பற்றி என் தங்கை குந்தவைதான் சொன்னாள். அதைக் கேட்ட பிறகு, மாதேவடிகள், 'என் கண்ணே! இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எவ்வளவு சூடிகையாயிருக்கிறாள்? இவர்கள் பாண்டிய தேசத்திலிருந்து நம்முடைய ஈசான சிவ பட்டர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு இங்கே இருப்பார்கள். இந்தப் பெண்ணின் பெயர் நந்தினி. இவளையும் சில சமயம் உங்கள் விளையாட்டுக்களில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவள் உனக்கு நல்ல தோழியாயிருப்பாள்!'' என்றார். ஆனால் என் தங்கைக்கு இது பிடிக்கவில்லையென்பதை நான் அறிந்து கொண்டேன். நாங்கள் மூவரும் அங்கிருந்து அரண்மனைக்குச் சென்ற போது குந்தவை, 'அண்ணா! அங்கே ஒரு பெண் நின்றாளே? எவ்வளவு அவலட்சணமாயிருந்தாள் பார்த்தாயா? அவளுடைய முகம் ஏன் அப்படிக் கோட்டான் முகம் மாதிரி இருக்கிறது? அவளுடன் நான் விளையாட வேண்டும் என்கிறாரே, பாட்டி? அவள் முகத்தைப் பார்த்தால் என்னால் சிரிக்காமலிருக்கவே முடியாதே! என்ன செய்வது? என்றாள். இதைக் கேட்டதும் எனக்கு ஒரு முக்கியமான உண்மை தெரிய வந்தது. அதாவது பெண்கள் பிறக்கும்போதே பொறாமையுடன் பிறக்கிறார்கள் என்பதுதான். ஒரு பெண் எவ்வளவு அழகுடையவளாயிருந்தாலும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் காணச் சகிப்பதில்லை. எங்கள் குலத்தில் பிறந்த பெண்களுக்குள்ளே என் சகோதரி சௌந்தரியம்மிக்கவள் என்பது பிரசித்தமானது. அவளுக்கும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் கண்டு பொறுக்கவில்லை. இல்லாவிட்டால் அந்தப் பெண்ணைக் குறித்து ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? நான் என் சகோதரியை இலேசில் விடவில்லை. அவளுக்குக் கோபம் உண்டாக்குவதற்காகவே அந்த இன்னொரு பெண் அழகாய்த்தான் இருக்கிறாள் என்று வற்புறுத்திச் சொன்னேன். இருவரும் அடிக்கடி இதைப் பற்றி விவாதம் செய்து சண்டை பிடித்தோம். எங்கள் சகோதரன் அருள்மொழியோ இந்தச் சண்டையின் காரணத்தை அறியாமல் திகைத்தான். பிறகு சில நாளைக்கெல்லாம் பாண்டிய நாட்டு யுத்தத்துக்குச் சென்ற என் தந்தையோடு நானும் புறப்பட்டுச் சென்றேன். பாண்டிய ஸ்சைன்யத்தையும் பாண்டியர்களுக்கு உதவியாக இலங்கை அரசன் அனுப்பிய சைன்யத்தையும் பல இடங்களில் முறியடித்தோம். கடைசியில், வீர பாண்டியன் ஓடி ஒளிந்து கொண்டான். அவன் ஒளிந்து கொண்டானா அல்லது போர்க்களத்தில் மடிந்தானா என்பது அச்சமயம் தெரியவில்லை. வீரபாண்டியன் மறைந்ததும் பாண்டிய சைன்யத்துக்கு உதவியாக வந்த இலங்கை வீரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டு நாங்கள் சேதுக்கரை வரையில் சென்றோம். இறந்தவர்கள் போக மற்றவர்கள் கப்பலேறித் தப்பித்துச் சென்றார்கள். அடிக்கடி பாண்டியர்களுக்கு உதவியாகப் படைகள் அனுப்பித் தொல்லைப்படுத்தும் இலங்கை மன்னர்களுக்கு என் தந்தை புத்தி கற்பிக்க விரும்பினார். கொடும்பாளூர்ச் சிறிய

வேளாரின் தலைமையில் ஒரு பெரிய படையை இலங்கைக்கு அனுப்புவதென்றுதீர்மானித்தார். இதற்குவேண்டிய கப்பல்களையும் தளவாடங்களையும் சேகரிக்கச் சிறிது காலமாயிற்று. ஆயினும் நாங்கள் அங்கேயே தாமதித்து, கப்பல்களில் படைகளை ஏற்றி அனுப்பினோம். மாதோட்டத்தில் நம் வீரர்கள் பத்திரமாய்ச் சென்று இறங்கினார்கள் என்று தெரிந்த பிறகே அங்கிருந்து சோழ நாட்டுக்குத் திரும்பினோம்.

மீண்டும் நான் பழையாறைக்கு வந்து சேர்வதற்குள் இரண்டு வருஷத்துக்கு மேலாகிவிட்டது. மதுரைப் பக்கத்திலிருந்து வந்திருந்த அர்ச்சகர் பெண்ணை நான் அடியோடு மறந்து விட்டேன். பழையாறைக்கு வந்து பார்த்தபோது என் சகோதரியும் அப்பெண்ணும் அடையாளம் அறிய முடியாதபடி வளர்ந்திருக்கக் கண்டேன். அவர்களிருவரும் மிக்க சிநேகத்துடன் பழகுவதையும் கண்டேன். நந்தினி வளர்ந்திருந்தது மட்டுமல்ல, ஆடை ஆபரணங்களினாலும் ஜொலித்துக் கொண்டிருந்தாள். இது என் சகோதரியின் காரியம் என்று அறிந்தேன். முன்போலில்லாமல் நந்தினி இப்போது என்னைப் பார்க்கவும் பேசவும் கூச்சப்பட்டாள். அதை நான் போக்குவதற்குப் பாடுபட்டேன். வேறு எதிலும் காணாத இன்பம் அவளுடன் பேசிப் பழகுவதில் அடைந்தேன். இது எனக்கு அந்தச் சிறிய பிராயத்தில் எவ்வளவு வியப்பை அளித்தது என்பதைச் சொல்ல முடியாது. காவேரியில் பெருகிவரும் புது வெள்ளத்தைப் போல் என் உள்ளத்தில் ஏதோ ஒரு புதுமை உணர்ச்சி பொங்கி,வெள்ளமாய்ப் பெருகிக் கொண்டிருந்தது. ஆனால் இது என்னைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் பிடிக்கவில்லையென்பதை விரைவிலேயே கண்டு கொண்டேன். நான் வந்ததிலிருந்து குந்தவை அப்பெண்ணிடம் வெறுப்பைக் காட்டத் தொடங்கினாள். ஒருநாள் எங்கள் பாட்டியார் மாதேவடிகள் என்னை அழைத்து, 'நந்தினி அர்ச்சகர் வீட்டுப் பெண்; நீயோ சக்கரவர்த்தி குமாரன்; உங்கள் இரண்டு பேருக்கும் இப்போது பிராயமும் ஆகிவிட்டது. ஆகையால் நந்தினியிடம் நீ பழகுவது உசிதமல்ல' என்று புத்திமதி கூறினார். அதுவரை பாட்டியைத் தெய்வமென மதித்து வந்த நான் அப்போது அவரிடம்கோபமும்அவருடையவார்த்தையில் அவமதிப்பும் கொண்டேன். அவருடைய புத்திமதியை மீறி





நந்தினியைத் தேடிப் பிடித்துப் பேசிப் பழகினேன். இது நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் நந்தினியும், அவளுடைய பெற்றோர்களும் பாண்டிய நாட்டில் அவர்களுடைய ஊருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள் என்று தெரிந்தது. அப்போது எனக்குத் துக்கம் பொங்கி வந்தது; கோபம் என்னை மீறி வந்தது. துக்கத்தை என் மனத்திற்குள் வைத்துக் கொண்டு கோபத்தை என் சகோதரியின் பேரில் காட்டினேன். நல்ல வேளையாகச் சில நாளைக்கெல்லாம் நான் வடக்கே பிரயாணப்பட நேர்ந்தது. திருமுனைப்பாடியையும் தொண்டை மண்டலத்தையும் ஆக்கிரமித்திருந்த இராஷ்டிர கூடப் படைகளை விரட்டுவதற்காகப் புறப்பட்ட சோழ சைன்யத்துடன் நானும் புறப்பட்டு வந்தேன். அப்போதுதான் நீயும் நானும் சந்தித்தோம். இணை பிரியா சிநேகிதர்களானோம்.

மலையமான் அரசருடைய உதவியுடன் நீயும் நானும் இராஷ்டிரகூடப் படைகளுடன் போரிட்டோம். பாலாற்றுக்கு

வடக்கே அவர்களைத் துரத்தி அடித்துக் காஞ்சி நகரையும் கைப்பற்றினோம். அச்சமயத்தில் இலங்கையிலிருந்து கெட்ட செய்தி வந்தது. நமது படை அங்கே முறியடிக்கப்பட்டதென்றும் கொடும்பாளூர் சிறிய வேளார் இறந்துவிட்டார் என்றும் தெரிந்தன. இதைக் கேட்டுவிட்டு, அதுவரையில் பாலைவனத்தின் மத்தியில் பாறைக் குகையில் ஒளிந்திருந்த வீர பாண்டியன், புற்றிலிருந்து பாம்பு புறப்படுவதுபோல் வெளிப்பட்டு வந்தான். மறுபடியும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு மதுரையைக் கைப்பற்றி மீனக் கொடியை ஏற்றினான். இதையெல்லாம் கேட்டபோது உனக்கும் எனக்கும் எப்படிப்பட்ட வீராவேசம் உண்டாயிற்று என்பது ஞாபகம் இருக்கிறதல்லவா? நாம் இருவரும் உடனே புறப்பட்டுப் பழையாறைக்குச் சென்றோம். என் தந்தை சக்கரவர்த்திக்கு அப்போதே உடல் நலம் கெடத் தொடங்கியிருந்தது. கால்களின் சுவாதீனம் குறைந்திருந்தது. ஆயினும் சக்கரவர்த்தி பாண்டிய நாட்டுப் போர்க்களம் புறப்படச் சித்தமாயிருந்தார். வேண்டாம் என்று நான் அவரைத் தடுத்தேன். பாண்டிய சைன்யத்தை முறியடித்து மதுரையை மீண்டும் கைப்பற்றி வீர பாண்டியனுடைய தலையையும் கொணராமல் சோழ நாட்டுக்குத் திரும்புவதில்லை என்றுஎன் தந்தைமுன்னால்பிரதிக்ஞை செய்தேன். அப்போது நீயும் என்னுடன் இருந்தாய். என் பிரதிக்ஞையை ஒப்புக் கொண்டு என் தந்தை நம்மைப் பாண்டிய நாட்டுப் போர்க்களத்துக்கு அனுப்பினார். ஏற்கெனவே படைத் தலைமை வகித்துச் சென்றிருந்த கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியின் தலைமையில் நாம் போர் செய்ய வேண்டும் என்று பணித்தார். அதற்குச் சம்மதித்து நாம் சென்றோம். வழியில் பெரிய பழுவேட்டரையரைச் சந்தித்தோம். அவரைப் படைத் தலைவராக்காமல் கொடும்பாளூர் வேந்தரை நியமித்ததில் பழுவேட்டரையருக்கு அதிருப்தி உண்டாகியிருந்தது என்பதை அறிந்தோம்.

"நம்முடைய போர் ஆவேசத்தைக் கண்டு சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி யுத்தம் நடத்தும் பொறுப்பை நம்மிடமே ஒப்புவித்துவிட்டார். நண்பா! அந்த யுத்தத்தில் நீயும் நானும் நம்ப முடியாத வீரச் செயல்களைப் புரிந்தோம் என்று பெருமை கொள்வதில் யாதொரு தவறும் இல்லை. பாண்டிய சைன்யத்தை முறியடித்து மதுரையைக் கைப்பற்றினோம். அத்துடன் நாம் திருப்தி அடைந்துவிடவில்லை. மறுபடியும் பாண்டிய சைன்யம் தலையெடுக்க முடியாதபடி அதை நிர்மூலம் செய்துவிட விரும்பினோம். சிதறி ஓடிய வீரர்களை நாலா பக்கத்திலும் துரத்திச் சென்று ஒருவர் மிச்சமில்லாமல் துவம்ஸம் செய்துவிடும்படி நம் படை வீரர்களுக்குக் கட்டளையிட்டோம். நாம் மட்டும் ஒரு வலிமையான படையுடன் பாண்டியனைத் துரத்திக் கொண்டு போனோம். உயரமாகப் பறந்த மீனக் கொடி பாண்டியன் எந்தத் திசையை நோக்கி ஓடுகிறான் என்பதை நமக்குக் காட்டியது. அந்தத் திசையை நோக்கி நாமும் சென்று அவனைப் பிடித்தோம். வீர பாண்டியனைச் சுற்றிலும் **ஆபத்துதவிகள்** மதில் சுவரைப் போல் பாதுகாத்து நின்றார்கள். சோழ நாட்டு வேளக்காரப் படையைக் காட்டிலும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் ஒருபடி மேலான வீரர்கள். பின்வாங்கி ஓடுவதில்லையென்றும் தங்கள் உயிரை அளித்தாவது பாண்டிய மன்னனைக் காப்பாற்றுவோம் என்றும் சபதம் செய்தவர்கள். அது சாத்தியப்படாமற்போய், பாண்டிய மன்னனுக்கு ஆபத்து வந்துவிட்டால், தங்கள் தலையைத் தாங்களே வெட்டிக் கொண்டு பலி கொடுப்போம் என்று சபதம் பூண்டவர்கள். அப்படிப்பட்ட வீரர்களோடு நாம் போர் புரிந்தோம். அவர்களும் தங்கள் கடனை நிறைவேற்றினார்கள். ஒருவர் மிச்சமின்றி அவர்களைக் கொன்று தீர்த்தோம். இறந்தவர்களின் சவங்கள் மலைமலையாய்க் குவிந்தன. ஆனால் அவர்களுக்கு நடுவில் வீர பாண்டியனை நாம் காணவில்லை. மீனக் கொடியைப் பார்த்து நாம் ஏமாந்து போனோம். மீனக் கொடியைத் தாங்கிக் கொண்டு யானை ஒன்று நின்றது. ஆனால் அதன்

பேரிலோ, பக்கத்திலோ பாண்டிய மன்னனைக் காணவில்லை! வீரபாண்டியன் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி ஒளிந்து கொள்ளுவதில் சமர்த்தன் அல்லவா? இப்போதும் அவன் ஓடியிருக்கலாம் என்று சந்தேகித்து,படைகளைப் பிரித்து நாலாபுறமும் அனுப்பினோம்.

வைகை நதியின் இரு கரைகளோடு நீங்கள் எல்லோரும் விரைந்து சென்றீர்கள். நானும் சும்மா இருக்கவில்லை. வைகை நதியில் இறங்கி மணலில் நடந்து தெற்கே சென்றேன். ஒரு தனிக் குதிரையின் குளம்படி மணலில் சில இடங்களில் பதிந்திருந்தது. குதிரை போன வழியில் மணலில் இரத்தக் கறையும் காணப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டு நான் போனேன். வைகையாற்றின் மத்தியில் ஒரு தீவு போல் அமைந்திருந்த சோலையை அடைந்தேன். அந்தச் சோலைக்குள்ளே திருமாலின் கோவில் ஒன்றிருந்தது. அதையொட்டி இரண்டொரு அர்ச்சகர் வீடுகள் இருந்தன. பெருமாள் பூஜைக்குரிய பூ மரங்கள் அச்சோலையில் ஏராளமாக இருந்தன. ஒரு சிறிய தாமரைக் குளம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. நண்பா! உனக்கு ஒரு வேளை ஞாபகம் இருக்கலாம். அந்தச் சோலையைச் சுட்டிக்காட்டி அதில் நம் வீரர்கள் யாரும் தப்பித் தவறிக் கூடப் பிரவேசிக்கக் கூடாது என்று நான் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தேன். இதற்குக் காரணம், அந்தப் பெருமாள் கோவிலின் பூஜைக்குப் பங்கம் எதுவும் வரக் கூடாது என்று நான் எண்ணியது மாத்திரம் அல்ல. அங்கே இருந்த பட்டரின் வீட்டில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் நெஞ்சில் கோவில் கொண்ட பெண்ணரசி இருந்ததுதான். ஒருநாள் அந்தச் சோலைக்குள் நான் புகுந்தபோது நந்தினியைப் பார்த்துவிட்டேன். அவளுடைய கோலம் இப்போது சிறிது மாறிப் போயிருந்தது. தலைக் கூந்தலை ஆண்டாள் விக்கிரகத்தைப் போல் முன்னால் மகுடமாகக் கட்டி அதில் பூமாலை சுற்றியிருந்தாள். கழுத்திலும் பூமாலை தரித்திருந்தாள். 'இது என்ன கோலம்?' என்று நான் கேட்டேன். அவள் என்னைப் பிரிந்து வந்த பிறகு மானிடர் யாரையும் மணப்பதில்லை என்றும் ஆண்டாளைப் போல் கண்ணனையே மணப்பது என்றும் சங்கல்பம் செய்து கொண்டதாகக் கூறினாள். இது வெறும் பைத்தியக்காரத்தனமாக எனக்குத் தோன்றியது. மானிடப் பெண்ணாவது, கடவுளை மணப்பதாவது? — ஆயினும் அதைப் பற்றி அச்சமயம் விவகாரம் செய்ய நான் விரும்பவில்லை. 'யுத்தம் முடியட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணினேன். அவளுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா என்று கேட்டேன்: 'உங்கள் போர் வீரர்கள் யாரும் இங்கு வராதபடி செய்யுங்கள். இங்கே என் வயதான தாய் தந்தையர் மட்டுந்தான் இருக்கிறார்கள். அவர்கள் கண் தெரியாதவர்கள். திடகாத்திரனான என் தமையன் ஒருவன் உண்டு; அவன் இப்போது திருப்பதி யாத்திரை போயிருக்கிறான்!' என்றாள். அவள் கேட்டபடி அங்கே நம் வீரர் யாரும் வராமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குறுதி கொடுத்துவிட்டுத் திரும்பினேன். அப்புறம் இரண்டு மூன்று தடவை அவளைப் போய்ப் பார்த்தேன். அவளிடத்தில் நான் கொண்ட பழைய மோகம் ஒன்றுக்குப் பத்து மடங்கு பெருகிக் கொழுந்துவிட்டெரிந்தது. எனினும் பொறுமையைக் கடைப்பிடித்தேன். வந்த காரியத்தை முதலில் முடிக்க வேண்டும். வீர பாண்டியனுடைய தலையுடன் பழையாறைக்குப் போக வேண்டும்; அதற்குப் பிரதியாக நந்தினியை மணந்து கொள்ளத் தந்தையிடம் அநுமதி கேட்பது என்று முடிவு செய்திருந்தேன்.

"இப்படி நான் தீர்மானித்திருந்த நிலையில், ஒற்றைக் குதிரையின் குளம்படி அந்தச் சோலைக்குள்ளே போயிருப்பதைக் கண்டதும் அளவிலாத வியப்பும் ஆத்திரமும் கொண்டேன். மேலும் சென்று பார்த்தபோது,



அடர்ந்த மரங்களின் மறைவில் குதிரை கட்டியிருப்பதைக் கண்டேன். எனவே, தப்பி வந்தவன் அந்தக் குடிசை வீடுகளில் ஒன்றில்தான் இருக்க வேண்டும். நந்தினியின் வீட்டுக்குச் சென்று பலகணி வழியாகப் பார்த்தேன். நண்பா! அங்கே நான் கண்ட காட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் என் நெஞ்சில் தீட்டியது போலப் பதிந்திருக்கிறது. ஒரு பழைய கயிற்றுக் கட்டிலில் வீரபாண்டியன் படுத்துக் கிடந்தான். நந்தினி அவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் செய்தாள். அவள் முகம் முன் எப்போதுமில்லாத காந்தியுடன் ஜொலித்தது. அவள் கண்களில் இரண்டு துளி கண்ணீர் ததும்பி நின்றது. என்னை மீறி வந்த ஆத்திரத்துடன் கதவைப் படார் என்று உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே போனேன். காயங்களைக் கட்டிக் கொண்டிருந்த நந்தினி என்னைக் கண்டதும் அதை நிறுத்திவிட்டு முன்னால் வந்தாள். சாஷ்டாங்கமாக என்னை நமஸ்கரித்து எழுந்தாள். கை கூப்பிய வண்ணம், 'ஐயா! நீங்கள் என் பேரில் ஒருநாள் வைத்திருந்த அன்பின் பேரில் ஆணையிட்டு வேண்டுகிறேன். இவரை ஒன்றும் செய்யாதீர்கள்! படுகாயப்பட்டுக் கிடக்கும் இவரை உங்கள் கையால் கொல்ல வேண்டாம்!' என்றாள்.

"நான் தட்டுத் தடுமாறி, 'உனக்கும் இந்த மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக அவன் உயிரைக் காப்பாற்றும்படி கேட்கிறாய்?' என்றேன்.


"'இவர் என் காதலன்; இவர் என் தெய்வம்; இவர் என்னை மணந்து கொள்ளச் சம்மதித்திருக்கும் தயாளன்!' என்றாள் நந்தினி.

"காயம் பட்டிருந்த வீரபாண்டியனைப் பார்த்துக் கொஞ்சம் உண்டாகியிருந்த இரக்கமும் என்னிடமிருந்து அகன்றுவிட்டது. இந்தப் பாதகன், சண்டாளன் — எப்படி என்னைப் பழி வாங்கிவிட்டான்! என் இராஜ்யத்தையே கைப்பற்றியிருந்தாலும் பாதகம் இல்லை; என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெண்ணரசியையல்லவா அபகரித்துவிட்டான்? இவனிடம் எப்படி இரக்கம் காட்ட முடியும்? முடியவே முடியாது!

"நந்தினியை உதைத்துத் தள்ளிவிட்டு அவளைத் தாண்டிக் கொண்டு சென்று வாளின் ஒரே வீச்சில் வீரபாண்டியனுடைய தலையை வெட்டி வீழ்த்தினேன். அந்த மூர்க்க பயங்கரச் செயலை இப்போது நினைத்துப் பார்த்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஆனால் அச்சமயம் யுத்த வெறியோடு கூடக் குரோத வெறியும் என்னைப் பீடித்திருந்தது. அந்த ஆவேசத்தில் வீரபாண்டியனைக் கொன்றுவிட்டு அந்த வீட்டின் வாசற்படியைத் தாண்டும்போது நந்தினியை ஒருமுறை திரும்பிப் பார்த்தேன். அவளும் என்னைக் கண்கொட்டாமல் பார்த்தாள். அதைப் போன்ற பார்வை இந்தப் பூவுலகில் நான் கண்டதில்லை. அதில் காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்னும் ஆறு வித உணர்ச்சிகளும் அத்தனை நெருப்பு ஜுவாலைகளாகக் கொழுந்துவிட்டு எரிந்தன. அதன் பொருள் என்னவென்று எத்தனையோ தடவை எண்ணி எண்ணிப் பார்த்தும் எனக்கு இன்று வரை தெரியவில்லை!

"அதற்குள் என்னைத் தேடிக் கொண்டு நீயும் இன்னும் பலரும் வந்துவிட்டீர்கள். வீரபாண்டியனுடைய தலையற்ற உடலையும் இரத்தம் சிந்திய தலையையும் பார்த்துவிட்டு எல்லோரும் ஜய கோஷம் செய்தீர்கள். ஆனால் என்னுடைய நெஞ்சில் விந்திய பர்வதத்தை வைத்ததுபோல் ஒரு பெரும் பாரம் அமுக்கிக் கொண்டிருந்தது...!"

(தொடரும்)


The Kumbakonam City Union Bank Limited
SAVINGS
PASS BOOK


தன் ஆலோசனையை டாக்டரே பின்பற்றுகிறார்!
Horlicks
The Great Nourisher
நிறைந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
HMM-8239 TAM

ராஜம் இளப்பமாகத்தான் பார்த்தாள்.

அவரது பரபரப்பை!

ஆர்வத்தை!

டைம் என்னாச்சு... பாரு.... என்ற அவசரத்தை.

டிபன் ரெடி பண்ணிடு. அம்மாவுக்குப் பசி தாங்காது எனும் உத்தரவை!

அம்மாவை அழைக்கப் போவது கேலிக்குரிய விஷயமா?

சட்டையை மாட்டிக் கொண்டு வாசலில் இறங்கியவரிடம், ''சீக்கிரம் வந்துடுங்க...'' என்றாள்.

''ம்....''

''எட்டு மணி ஆகுமா?''

''ஏழு இருபதுக்கு வண்டி. வீட்டுக்கு வர.... ம்ம்.... ஆகும்.''


''ஆபீஸுக்கு....?''

''வந்ததும் கிளம்பணும். ஆடிட் நடக்கிறப்ப லீவு எங்கே எடுக்கிறது?''

அவள் 'அப்பாடா' என்று பார்ப்பதைப் போல் இருந்தது. லீவு என்றால் வாடி இருப்பாளா?

''எங்க அண்ணன் வந்தப்ப ரெண்டு மணி நேரம் ஒதுக்க முடியலே. இப்ப உங்க அம்மா வரும்போது மட்டும்....

இருபது வருஷத் தாம்பத்தியத்திற்குப் பின்பும், என் சொந்தம் — உன் சொந்தம் — எல்லைக் கோடு விலகாதது ஆச்சரியம்தான்: மாமியாரை ஆகாத மனுஷியாக்கிய முதல்



நேற்றுதான் கடிதம் வந்தது.

ஆபீஸிலிருந்துதிரும்பி,கைகால் அலம்பி, காப்பி குடித்து, எஞ்சிய செய்திகளைப் படிக்கபேப்பரோடுதன் அறைக்குள்நுழைய— மேஜையில் அனுதையாகக் கிடந்தது — மடித்த உறை. கோணல் எழுத்து: 'சிரேஷ்ட புத்திரன் பத்துவுக்கு எனத் துவங்கும் வாச கங்கள். பிரியத்தைக் கொட்டி, பேரன் பேத்தி களை ஆசீர்வதித்து, மருமகளை விசாரித்து, பத்துவின் B.P.க்காகக் கவலைப்பட்டு, கடைசி யாய் எல்லாரையும் பார்க்க ஆசையா இருக்கு. புதன்கிழமை வர்றேம்ப்பா....

பத்மனுபன் எல்லாம் கண்டவர்தான்.

ராஜத்தின் ஸ்பரிசத்தை,

மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன் என்ற தகுதியை,

நடுத்தர ஆபீஸராய் அதிகாரத்தை.

எதிரில் வருகிறவர் இரண்டு அடி தள்ளி நிற்கிற மரியாதையை.

— எல்லாவற்றையும் பின்னே தள்ளி, அவரை அம்மணச் சிறுவனுக உணர்த்துகிற விஷயம் அம்மாவின் கடிதம் மட்டும்தான். விரல் சூப்பும் குழந்தையாக நினைத்துத்தான் இன்னும் எழுதுவாள்.

'உடம்பைப் பார்த்துக்கோப்பா. சனிக் கிழமை எண்ணெய் தேய்ச்சுக் குளி... இத்யாதி.

தன்னல் ஏன் இப்படிஎழுத முடியவில்லை? நேசிப்பு இல்லை. ஆழமாய் அவளது சுகத் தில் கவனத்தைப் பதிக்க முடியவில்லை. தவரு மல் மாதம் ஒன்ருக வரும் கடிதத்திற்கு எப் போதாவது இரண்டு வரிகளில் பதில் எழுதிப் போட்டால் அதிகம்.

காரணம் ராஜமா? குழந்தைகளா?

கலித்து, பெற்று, தனி மரமாய் வேர் ஊன்றிக் கொண்ட தென்பா?

பாசம் ஒரு வழிப்பாதை போலவே இருந் தது. பெற்றவன் (ள்) குழந்தை மீதும், குழந்தை தான் பெற்றவைகளின் மீதும்... தள்ளிக் கொண்டே போய்.....

எங்கு நிற்கும் இது?

''லெட்டர் எப்ப வந்தது?''

கைதி 1: ஆச்சர்யமாயிருக்கே! நீ அரசு அலுவலகத்துள் புகுந்து பைல்களைத் திருடினதுக்கு நீதிபதி உன்னைப் பாராட்டி னார்?

கைதி 2: ஆமாம். எப்படியோ பைல்கள் நகர நான் ஒரு காரணமாக இருந்துள் ளேனே. அதனால்தான்!

— இளை அ. கதிர்வேல்



பத்மனுபன் அறையை விட்டு வெளியே வந்தார்.

ஹாலில், குடும்பம் முழுக்க டீ.வி.யில் ஆழ்ந்திருந்தது.

''காலையில்.....'' என்ருள் ராஜம்.

''லஞ்சுக்கு வந்தப்ப ஏன் சொல்லலே?''

''மேஜைல இருந்ததைப் பார்க்கலேன்னு நான் என்ன பண்றது?'' ராஜம் அவர் பக்கம் திரும்பவில்லை.

''அம்மா நாளைக்கு வர்றதா எழுதி இருக்கா....''

அவளிடமோ குழந்தைகளிடமோ சலனம் எதுவும் தென்படவில்லை.

தனது ஸ்தானத்தில் ஏதோ குறைப்பட்ட மாதிரி இருந்தது அவருக்கு.

தமது உழைப்புத்தான் இவர்களை சௌகர்யமாய் வைத்திருக்கிறது. சோறும், துணியும் சந்தோஷம் தருகிற வாழ்க்கையு மாய். ஆனால் தன்னைப் பெற்ற மனுஷியோ, அவன் முக்கியம் என்று கருதிப் பேசுவதோ யாருக்கும் தேவையாயில்லை.

''முதல்ல இந்த டீ.வி.யை உடைச்சு எறிய ணும். அப்பத்தான் இந்த வீடு உருப்படும்'' என்ருர்.

''அப்பாவுக்கு என்ன கோபம்?'' என்ருள் மஞ்சு.

''உங்க பாட்டியின் கடிதாசைப் படிச் சிருக்கார். அதுல அப்படி எழுதி இருக்கோ என்னமோ....'' என்ருள் ராஜம்.

''என்னன்னு?''

''டீ.வி.யை உடைக்கணும்னு.....''

ஹாலில் எல்லோரும் சிரித்தார்கள்.

இவனுக்கு அம்மாவிடம் என்ன கோபம்?

உலகில் தொண்ணூறு சதம் மருமகள் களுக்கு என்ன கோபம்?

''உங்கம்மாவைப் பத்திப் பேசாதீங்க. கொஞ்சமாவா படுத்தினு.....? பெரியவன் வயித்துல இருந்தப்ப....

ஏதோ ஒரு அல்லது சில சம்பவங்களால் வெறுப்பேற்றிக் கொண்டவளாய், உள்ளே சிணுங்கி, உதட்டில் சிரிக்கிறவளாய், கட னுக்கு நடிக்கிறவளாய்.....'

அம்மாவைக் கண்டு பிடிப்பது சிரம மாயில்லை.

ரயில் நிற்பதற்கு முன்பாகவே, ஜன்ன லால் பார்த்துவிட்டுக் கூப்பிட்டாள்.

''பத்தூ.... பத்மனுபா.....''

அத்தனை இரைச்சல், சத்தத்திலும் துல்லிய மாகக் கேட்டது அவள் குரல்.

அம்மா!

முன்னைவிட இளைத்திருந்தாள். தோல் வெளுத்திருந்தது. நடையில் தளர்வு. தனி ஆளாய் இன்னும் எத்தனை நாட்கள் காலம் தள்ளுவாள்?


அம்மாவைத் தன்னோடு வைத்துக் கொள்ளுவதைப் பற்றி அவர் பேசியது உண்டு. ராஜம்தான் தடுக்கிறவள்: ''வேணும். இந்தச் சூழ்நிலை அந்தம்மாவுக்கு ஒத்து வராது. தன்னோட ஜனங்க, ஊர், வீடுன்னு தான் நினைப்பு இருக்கும். வயசானவங்

இவன்: ரெண்டாயிரம் படங்களில் பங்கு பெற்ற [illegible] புத்தகத்தில் போட்டிருக்காங்க [illegible]!

அவன்: யாராம் அந்த நடிகர்?

இவன்: மைசூர் பிருந்தாவனம்!

— [illegible]



களுக்குப் பழகின வாழ்க்கையை மாத்திக்கிறது அவ்வளவு சுலபம் இல்லே.'' காரணம் அதுவல்ல என்பது பத்மனாபனுக்குத் தெரியும்.

அம்மாவுக்கும் மருமகளின் ஜாடை புரிந்திருக்குமோ என்னவோ அவர் தயங்கித் தயங்கிக் கேட்பதை ஒற்றை வரியில் மறுத்து விடுவாள்.

''வேணும்ப்பா... நான் அங்கே நல்லாத் தான் இருக்கேன்'' ஆனாலும் அவளது வார்த்தைகளைத் தாண்டி உள்ளூர ஒரு சோகம் இருப்பது புரியும் — 'என் மகன், என் உறவுன்னு நெருங்கி இருக்க முடியலையேடா' என்கிற மாதிரி.

இந்தத் தடவையாவது ஓர் இரண்டு மாதம் சேர்ந்தாற்போல் வைத்துக் கொள்ள முடியுமா?

அம்மா தகரப் பெட்டியுடன் இறங்கினாள். கூடவே இரண்டு தூக்குக் கூடைகள், பித்தளை வாளி.

''என்னம்மா இதெல்லாம்?''

''பலகாரம்..... சும்மா எப்படி வர்றது?''

''இவ்வளவு எதுக்கும்மா?''

''குழந்தைகள் வச்சுத் திங்கட்டுமேப்பா.''

பத்மனாபனுக்கு உள்ளூர உதைத்தது. ராஜம் ஏதாவது சொல்வாளோ? போன தரம் எள்ளு மாவு இடித்துக் கொண்டு வந்தாள். ராஜமோ, குழந்தைகளோ அதைத் தொடவில்லை.

''இதெல்லாம் வேணும். வயிற்றுக்கு ஆகாது....''

ஒரு வாரம் கழித்து வேலைக்காரி கொண்டு போனாள்.

பத்மனாபன் போர்ட்டரைக் கூப்பிட்டார்.

வீடு வந்துவிட்டது.

''வாங்க அத்தை....'' என எழுந்து நின்றாள் ராஜம்.

''வர்றேம்மா.... எங்கே குழந்தைகள்?'' அம்மா வீட்டை அண்ணாந்து பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

''மஞ்சு இருக்கா.... பசங்க கிரிக்கெட் விளையாடப் போயிருக்கானுக...''

''ம்....?'' என்றாள் அம்மா.

''கிரிக்கெட்.... பந்து விளையாட்டு....''

மஞ்சு சல்வார் கம்மீஸில் வெளிப்பட, ''இதென்னம்மா கோலம்? தாவணி போடப்படாதோ....'' என்றபடி உட்கார்ந்தாள் அம்மா.

யாரும் பதில் சொல்லவில்லை.

''வெந்நீர் போடு. குளிச்சுட்டு ஒய்வு எடுக்கட்டும். டிபன் என்னன்னு கேட்டுச் செய்...:.''

ராஜம் தலையசைத்தாள்.

பத்மனாபன் ஆபீஸுக்குப் புறப்பட்டார்.

அம்மா வந்த ராசியோ என்னவோ. ஆபீஸில் நெட்டி முறித்தது. ஆடிட்டில் கேட்கும் ஒவ்வொரு தகவலுக்கும் இரவு பகலாக வேலை பார்க்க வேண்டியிருந்தது.

அம்மாவுடன் மனம் விட்டுப் பேச நேரம் இல்லை.

இரவு நேரம் கழித்து வரும்போது சில சமயம், அவள் தூங்கி இருப்பாள். விழித்திருந்தால் அசதியில் ஒன்றிரண்டு வார்த்தைகள்.

''எல்லாம் வசதியா இருக்காம்மா....''

''இருக்குப்பா....''

சில வேளைகளில் குழந்தைகளோடு, குறிப்பாக கடைசி வாண்டு ரமேஷுடன் பேசிக் கொண்டிருப்பதைக் காண முடியும். விசித்திரமான கதைகள் சொல்வாள். அல்லது டி.வி.யில் படம் பார்த்து, 'இது என்ன... அது என்ன....' என்ற விசாரிப்பு....

ராஜம்கூட அம்மாவின் இருப்பில் அசௌகரியம் எதுவும் அடையாதவள் போலத்தான் தோன்றினாள்.

சாப்பாடு, டிபன் வேளைகளில், ''பாட்டியைக் கூப்பிடு....'' எனக் குழந்தைகளிடமோ, ''ஏம்மா.... ஆறிப் போயிடும். வாங்க....'' என்று அவளே அழைப்பதையும் கூடப் பார்க்க முடிந்தது.

அம்மா, ''ஊருக்குப் புறப்படறேம்ப்பா...'' என தகரப் பெட்டியை எடுத்துக் கொள்வது இவள் வெளிப்படுத்தும் குறியீடுகளைச் சார்ந்தது.

அம்மாவும் இங்கேயே இருந்து, இவர்களும் இப்படி இணைந்து பழகினால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ஆசை முளைவிட்ட இரண்டாம் நாளே முதல் சம்பவம் நடந்துவிட்டது.

அன்றைக்கும் பத்மனாபன் வீடு திரும்ப நேரமாகிவிட்டது. டி.வி.யில் ஒளியும் ஒலியும்.

வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தும் சப்தம் கேட்டு அம்மாதான் முதலில் எழுந்தாள். மருமகளைக் கவனப்படுத்துகிற அக்கறையுடன், ''ராஜம்.... தம்பி வந்திருச்சு'' என்றாள்.

''வரட்டும் ஃப்ளாஸ்கில் காப்பி இருக்கு. ஊத்திக் குடிக்கச் சொல்லுங்க....''

''என்னம்மா.... களைச்சு வர்ற பிள்ளைக்குக் காப்பி கூட போட முடியாமா...''

ராஜம் அதைப் பொருட்படுத்தவில்லை.

"எல்லாம் அவரே எடுத்துப்பார்" என்றாள்.

"ரொம்ப நல்லா இருக்கு குடும்பம் நடத்தற லட்சணம்...." அம்மா பொருமிக் கொண்டே எழுந்து வந்தாள். "அந்த நாள்லே அவங்க அப்பா கூப்பிட்டதுக்கு உடனே வரலேன்னு எச்சில் தட்டை விட்டெறிந்தார். அந்தத் தழும்பு நெத்தியிலே இன்னும் இருக்கு.... இங்கே நிலைமை இப்படி.... ம்....

தான் இதைச் சொல்லி இருக்கக் கூடாது என்பது அவளுக்குப் புரியவில்லை.

பத்மனாபன், "சும்மா இரும்மா...." என்றார்.

"இருக்கேம்ப்பா.... இதெல்லாம் பார்க்கத் தானே வந்திருக்கேன்...."

"உங்க பிள்ளையையும் விட்டெறியச் சொல்லி அதையும் பார்த்திடுங்கோ...."

"ரா ஜ ம்...." என அதட்டல் போட்டார் பத்மனாபன்.

"செஞ்சிடுங்கோ.... அதான் சொல்லித் தர அம்மா வந்தாச்சே?"

"நான் என்னம்மா இப்ப சொல்லிட்டேன்?" அம்மா தழுதழுத்த குரலில் கேட்க, ராஜம் முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

"அவ புத்தி தெரியாதா... நீ போய்ப் படும்மா" என்றார் பத்மனாபன்.

அன்றைக்கு அவள் ரொம்ப நேரம் தூங்கவில்லை என்பது, இடையிடையே புரண்டு படுப்பதிலிருந்து தெரிந்தது.

மறுநாள் அவர் ஆபீஸுக்குக் கிளம்புகிற வரை அம்மா கண்ணில் படவே இல்லை.

புறப்படுகிற அவசரத்தில், "அம்மா சாப்டாச்சா?" எனக் கேட்டார். யாரும் பதில் சொல்லவில்லை. "ஏண்டி.... உன்னைத் தான்...." என ராஜத்தை குறிப்பாகக் கேட்க, "தெரியாது.... என்றாள்.

"மணி என்னாச்சு? கூப்பிடலையா?"

"பசி இல்லேன்னு என்ன பண்றது... ஊட்டியா விட முடியும்?" வார்த்தைகள் வெடுக்கென்று வந்தன.

வாசல்வரை வந்தவர் திரும்பவும் உள்ளே போனார்.

அம்மா புழக்கடைத் தாழ்வாரத்தில் பாய் போட்டு உட்கார்ந்திருந்தாள்.

"பசிக்கலேப்பா...." என்றுதான் அவருக்கும் சொன்னாள்.

"கொஞ்சமாச்சும் சாப்டும்மா...." என வற்புறுத்த, "சரி.... நீ போ" என்றாள்.

பனிப் போர் துவங்கிவிட்டது என்பது பத்மனாபனுக்குப் புரிந்தது.

ஆபீஸில் அம்மாவின் முகம்தான் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்தது. மனத்தில் கஷ்டத்தை ஏற்படுத்தியது.

வருஷத்திற்கு ஒருதரம் வருகிறாள். கொஞ்ச நாளாவது நிம்மதியாகத் தங்க முடிகிறதா? அன்னியமாய், வரும்போதே புறப்படுவது தீர்மானம் ஆனவளாய்....

இரவு அப்பாவின் ஞாபகத்தில் ஏதோ சொன்னாள். ராஜத்திற்கு ஏன் கோபம் வர வேண்டும்? அம்மாவுக்கும் அப்பாவின் முரட்டுத்தனத்தை அந்த நேரத்தில் சொல்ல வேண்டும் என்று ஏன் தோன்றியது?

யார் ஆரம்பித்து வைத்த சண்டை இது? மருமகள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். மாமியார் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று?

முகம் தெரியாத எத்தனையோ மனுஷிகளின் கதைகள் நினைவுக்கு வந்தன. அம்மாவிற்குக் கூடத் தனது மாமியாரிடத்தில் மதிப்பு இருந்ததில்லை. எப்போதாவது சொல்ல நேரும்போது கஷ்டப்படுத்திய கெட்ட மனுஷியாகத்தான் சித்திரிப்பாள்.

ராஜம் கூடத் தனது சந்ததியினால் இப்படி அனுபவப்படக் கூடும். அப்போதும் இதே குணம் இருக்குமா?

இருக்கலாம். எல்லோருக்கும் தங்கள் முகம் மட்டுமே நல்ல முகமாகத் தெரிகிறது. சிநேகிதமாகிறது.

மற்றவர்களையும் நேசிக்க இந்த மண் என்று கற்றுக் கொள்ளும்?

ராஜமும் அம்மாவும் பேசிக் கொள்வது இல்லை என்று இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது பத்மனாபனுக்கு.

வீட்டு எஜமானி அவள். குழந்தைகள் அவளை மீறி எவ்விதம் சிநேகிதம் கொள்ளும்? தவிர ஸ்கூல், விளையாட்டு என்று திரியும் அதுகளைப் பாட்டியின் எதிரிலேயே இரு என்று எப்படிக் கட்டாயப் படுத்த முடியும்?

அம்மா சங்கடத்தை உணர ஆரம்பித்து விட்டாள்.

மகன் இருக்கும்போது பிரச்னை இல்லை.

மற்ற வேளைகளில் வாய் பேசாமல் தன் எதிரே 'ணங்'கென்று வைக்கப்படும் தட்டிலிருந்து எடுத்துச் சாப்பிடக் கூசிற்று அவளுக்கு.

எல்லோரும் போனதும், சமைத்து வைத்து விட்டு ராஜம் பக்கத்து வீட்டுப் பெண்களிடம் பேசப் போனாள். பின்னல், தையல் என்று உட்கார்ந்தாள்.

அம்மா உத்திரத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டும், வெளி வாசலில் உட்கார்ந்து வீதியைப் பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டியதாயிற்று.

பளிச்சென்ற வீதி, விர்விர்ரென்று ஓடும் வாகனங்கள், பெரிய பெரிய வீடுகள், பூத்து நிறையும் பெயர் தெரியாத பூக்கள், செடிகள்.....

மனிதர்கள் சிநேகிதமாகாத நிலையில், இதனாலெல்லாம் அவள் பரவசமா அடைய முடியும்? ஏதோ அன்னிய தேசம் போல இருந்தது. தன் சொந்தக் கூட்டை நினைக்கும் குருவியாகச் சோர்ந்து போனாள். அவளுக்கு அங்குதான் சொந்தம். வயிற்றில் உதிக்கா விட்டால் என்ன? நெருங்கிய மனிதர்கள், பழகிய வாசனை, பறவைகள், மிருகங்களின் ஒலி, தெருப் புழுதி, சாணித் தெளிப்பு, கோவில் மணி ஓசை.....

சீக்கிரம் ஊருக்குப் புறப்பட்டு விடுவாள்

என்று தோன்றியது.

இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு சமையல் அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த ராஜத்திடம் மெதுவாக வந்தார். குழந்தைகள் தூங்கி இருந்தன. வீடு அமைதியாக இருந்தது.

"ஏண்டி..... நீ செய்யறது உனக்கே நல்லா இருக்கா?"

அவள் புரியாமல் விழிக்க, "என்ன வீம்பு இது.... ரெண்டு வார்த்தை பேசினா என்ன குறைஞ்சா போயிடுவே....?" என்று கேட்டார்.

ராஜம் புரிந்து கொண்டாள். "எனக்குத்தான் வீம்பு. உங்கம்மாவுக்கு ஒண்ணுமில்லே... அதானே...." என்றாள்.

"வயசாயிடுச்சு. நாமதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்...."

"முதல்ல வயசானவங்களைப் பொறுத்துப் போகச் சொல்லுங்க...."

"இதான் வேணாங்கறது... குடும்ப அமைதி உன்னால கெட்டுப் போகுது...."

"இத்தனை வருஷத்துக்கு அப்புறம் கண்டு பிடிச்சாச்சு... வேறே ஏற்பாடு பண்ணிக்குங்க.... உங்கம்மாகிட்டச் சொல்லி...."

"வாயை மூடு நாயே...."

தமது குரலும் கையும் ஓங்கியது அவருக்கே அவமானமாக இருந்தது.

"உன்னையெல்லாம் திருத்த முடியாதுடி..." தம் அறைக்குத் திரும்பினார்.

பின்னால் ராஜத்தின் அழுகைச் சத்தம் கேட்டது.

அம்மா அதிகாலையே எழுந்துவிட்டாள். குளித்தாள். உடை மாற்றி, நெற்றியில் விரல் தடிப்பில் திருநீறு இட்டு.....

தகரப் பெட்டியும், துணிப் பையும் ஹாலுக்கு வந்தன.

'தம்பி எந்திரிச்சுட்டானா....' என அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

புறப்பட்டு விட்டாளா?

ராத்திரிக்குப் பிறகு நிலைமை ரொம்பவும் மோசமாகிவிட்டது. அவள் போய்விடுவது கூட நல்லதுதான்.

வலித்தது.

பத்மனாபன் வெளியே வந்தார். "என்னம்மா....?"

"வந்து நாளாச்சு.... ஊருக்குப் போறேம்ப்பா.... ரயில் ஏத்தி விட்டுடு..."

"இரும்மா.... அதுக்குள்ளே என்ன அவசரம்?"

எதற்கு இந்த வேஷம் என்பது போல அவரை நிமிர்ந்து பார்த்தாள். "இல்லேப்பா, அங்க மாடு, கன்னுன்னு விட்டுட்டு எவ்வளவு நாள் இருக்கிறது...."

அவர் பேச எதுவும் இல்லை. "இரும்மா..." எனப் பின்பக்கம் போனார். அவருக்குத் தோன்றியது, அம்மாவின் கோப விலகல் தான் இது! ஆனால் நிரந்தரமாக அல்ல. மறுபடியும் நெருங்கி வருவாள். மீண்டும் விலகுவதற்காக. வருஷா வருஷம் இது நடக்கும்— அவள் உயிரோடு உள்ளவரை.

உபநயனம் ஏன் 8 முதல் 16 வயதுக்குள் செய்ய வேண்டும்?

உள்ளம் வளர்ந்து வந்து கருத்தைக் கிரஹிக்கும் சக்தியைப் பெறுகின்ற பொழுதுதான் உபநயனம் என்னும் தீட்சையைச் செய்விக்க வேண்டும். எட்டு வயதிலிருந்து பதினாறு வயதுக்குள் உபநயன தீட்சை தந்துவிட வேண்டும். உள்ளம் வளர்ச்சி அடையும்பொழுது, அதில் காம உணர்ச்சி தலை எடுக்கிறது. காம உணர்ச்சி, உள்ளத்தில் புகுவதற்கு முன்பு உபநயன தீட்சை செய்துவிட வேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்வதின் அவசியம் என்ன? ஸந்தியா வேளை எத்தனை

இரண்டு வேளைகள் சந்திக்கும் நேரத்தை ஸந்தியா வேளை என்கிறோம்.

1. இரவு முடிந்து பகல் வரும்பொழுது பகலும் இரவும் சந்திக்கின்றன. அந்த காலை நேரம் ஒரு ஸந்தியா நேரமாகும்.
2. நண்பகலில் முற்பகலும் பிற்பகலும் சந்திக்கின்றன. அது ஒரு ஸந்தியா வேளை.
3. பகல் முடிந்து இரவு வருகின்ற மாலை வேளையும் ஒரு ஸந்தியா வேளை. அதில் இரவும் பகலும் சந்திக்கின்றன.
4. நள்ளிரவில் முன் இரவும் பின் இரவும் சந்திக்கின்றன. எனவே அதுவும் ஒரு ஸந்தியா வேளை.

இச்சந்தியா வேளைகளில் இயற்கையில் சத்துவ குணம் ஓங்கியிருக்கின்றது.

— எனவே, அவ்வேளைகள் வழிபாட்டுக்குப் பொருத்தமானவைகளாக இருக்கின்றன. அவ்வேளைகளில் நாம் செய்கின்ற வழிபாட்டுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

காலை நேரத்தையும், மாலை நேரத்தையும் நாம் வழிபாட்டுக்கு நன்கு பயன்படுத்தலாம். காலையிலும் மாலையிலும் நாம் செய்கின்ற வழிபாட்டுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

உள்ளத்தில் அன்பையும் அறிவையும் வளர்ப்பதற்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளைகளாவது ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

ஸந்தியாவத்தனம் செய்பவர் உடல் பிறப்புக்கும் மேலான ஞானப் பிறப்பைப் பெறுகின்றார். ஞானப் பிறப்பை எடுத்ததற்குப் புறச் சின்னமாக பூணூலையும் தலையின் உச்சியில் சிகையையும் வைத்துக் கொள்கின்றார். நூல் வேத மந்திரத்துச் சின்னமாகும். எனவேதான், ''நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்'' என்று கோட்பாடு வந்துள்ளது.

மந்திர உபதேசம் செய்வித்து மந்திரத்தை உச்சரிக்க கற்றுக் கொடுக்கும் செயலுக்கு உபநயனம் என்று பெயர். ''உப'' என்றால் பிரம்மத்துக்குச் சமீபத்தில் என்பது பொருள். ''நயனம்'' என்றால் ஆச்சாரியன் சிஷ்யனைப் பிரம்மத்துக்குச் சமீபத்தில் அழைத்துச் செல்கின்ற செயலுக்கு ''உபநயனம்'' என்று பெயர்.

ஸந்தியாவந்தனம் செய்வதின் மூலம் நம் உள்ளத்தைத் தூய தாக்கி உள்ளிருக்கும் ஆன்ம ஒளியை காண்கின்ற ஞானக் கண் பெறுகின்றோம். உயிர் வாழ்க்கைக்குச் சுவாசிப்பது எவ்வளவு அவசியமோ, மனத் தெளிவுக்கு ஸந்தியாவந்தனம் அவ்வளவு அவசியமாகும்.

ஸந்தியாவந்தன வழிபாட்டில் கீழ் வரும் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

அச்சுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:

பொருள்:

பெருநிலையிலிருக்கின்ற பேரறிவு வாய்ந்த அழிவில்லாத பொருளுக்கு வணக்கம் செலுத்துகின்றேன் என்பது மேற்கூறிய வணக்கத்துக்குப் பொருள்.

கேசவ நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர.

— என்று உம்மைப் பன்னிரு திருநாமங்களால் போற்றி என் இந்த்ரியங்களையும் மனத்தையும் உம்மிடம் ஒப்படைப்பேனாக.

அடுத்து கணபதியைத் தியானிக்க வேண்டும். கணபதியை தியானிப்பதற்குரிய மந்திரம் வருமாறு:

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே

— இதன் பொருள், வெண்மையான ஆடை உடுத்தவரும், நிலவு போன்ற ஒளியுள்ளவரும், நான்கு கையுள்ளவரும், ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தையுடையவரும் ஆகிய கணபதி எல்லா இடையூறுகளையும் விலக்கிச் சாந்தியை உண்டாக்குவாராக.

அடுத்துப் பிரம்ம காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். காயத்ரீ மந்திரம் வருமாறு:

ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத்

— இதன் பொருள், யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் மேலாம் ஒளியைத் தியானிப்போமாக.

இம்முறையில் ஸந்தியாவந்தனம் தினந்தோறும் ஸந்தியா வேளைகளில் செய்துவந்தால், நம்மிடமுள்ள தெய்வத்தன்மை வெளிப்பட்டு, நாம் பரிபூரணர்களாவது திண்ணம். ஆற்றலை வளர்ப்பதும், அறிவைத் திட்டுவதும், அன்பைப் பெருக்குவதும், மானுட வாழ்வின் லக்ஷியமாகும். ஸந்தியாவந்தனம் செய்வதன் மூலம் மனிதன் அப்பெருநிலையை அடையலாம். எனவே நாம் பெருநிலை அடைவதற்கு ஸந்தியாவந்தனம் அவசியமாகிறது.

ஆதாரம்: தர்ம சக்கரம் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்

முடிவாக என் தீர்மானத்தைச் சொன்னேனே இல்லையோ, வீட்டில் அத்தனை பேரும் அரண்டு போய் விட்டார்கள்.

என் சித்தி மகன் ராஜா 'மொபெட்' ஓட்டக் கற்றுத் தருகிறேன் என்று போன வாரமே, பூரி மசாலா தின்று முடித்த கையோடு, என் கையில் அடித்துச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருந்தான்.....

ஞாயிற்றுக்கிழமை பகல் பதினொரு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன் என்று சொல்லியிருந்தான்.

ஏங்க? இங்கே பாருங்க? ராஜா வரேன்னு சொல்லியிருக்கான். எல்லாரும் மத்தியானச் சாப்பாட்டைக் கொஞ்சம் நீங்களே எடுத்துப் போட்டுக்கிட்டுச் சாப்பிடுங்க.... சி.பி.டி. ரோடு பக்கமாகப் போய் அவன்கிட்டே 'மொபெட்' கத்துக்கப் போறேன்...."

ஷீலாவும், மீனுவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்! பிறகு இருவருமாகச் சேர்ந்து, அப்பாவை ஒரு பார்வை பார்த்தார்கள்.

அவர் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார். "இனிமேல் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இந்த வேலைதானா?"

"ப்ச்! ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் என்ன வேண்டிக் கிடக்குது? ஒரு மணி நேரத்துலே ஈஸியாக் கத்துக்கலாமாம்..."

"அப்படின்னா, திரும்பி வர்றப்போ நீயே கூட, ஓட்டிக்கிட்டு வருவே! என் சாருமதி?"

ஏதோ நான் போர்க்களத்திற்குப் போவதைப் போல மீனுவும், ஷீலாவும் சங்கடப்பட்டார்கள். துக்கம் தொண்டையை அடைக்க, "அம்மா! ஜாக்கிரதைம்மா! மாமா! அம்மா ஜாக்கிரதை!" என்றபோது எனக்கும் ஓர் இதுவாகத்தான் இருந்தது.

குழந்தைகளுக்குத்தான் என் மீது எவ்வளவு பாசம்?

"அதெல்லாம் நான் ஜாக்கிரதையாத்தான் இருப்பேன் ஷீலா! மீனு!"

"ஐயோ! நீ ஒண்ணும்மா! ஒன்னைச் சொல்லலேம்மா! ராஜா மாமா மொபெட் வாங்கி ரெண்டு மாசம் கூட ஆகலே! புது வண்டி.... வண்டி ஜாக்கிரதைம்மா! மாமா! பை!"

நான் 'மொபெட்'டில் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். மவுண்ட் ரோட் அருகில் ஒரு ரவுடி ஓரமாகப் போய்க் கொண்டிருக்கிற பெண்மணியின் செயினைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறான்.... அவன் கூட்டாளியின் மோட்டார் பைக் போலிருக்கிறது!

ஓடிப் போய்ப் பின்னால் ஏறிக் கொள்கிறான். 'பைக்' பறக்கிறது....

நான் விடுவேனா? என்றால் அப்படி விடத்தான் முடியுமா? என் மொபெட்டில் பின்னாலேயே விரட்டிக் கொண்டு போகிறேன். அவன் பிசாசு வேகத்தில் பறக்கிறான்! நானும் வேகத்தைக் கூட்டுகிறேன்....

இந்த ராஜா ரொம்ப மோசம்...

அரசு மணிமேகலை

"சொல்றதுக்கில்லே.... நானே ஓட்டிக்கிட்டு வந்தாலும் வருவேன்! ஒரு மணி நேரத்துலே ஈஸியாக் கத்துக்கலாமாம். நான் விட்டு விட்டு மூணு ஹாரன் அடிக்கிறேன். வாசலுக்கு வந்து பாருங்க எல்லாரும்."

கண்ணாடியைப் பார்த்துப் பொட்டைச் சரி செய்து கொண்டேன். என்னவோ அலாதியாய் ஒரு தேஜஸ் வந்துவிட்டாற் போலத் தெரிந்தது.

"வா வா ராஜா! ஒங்க அக்கா உனக்காக ரெடியாயிக்கிட்டே இருக்காப்பா..."

ஓ! ராஜா வந்துவிட்டான் போலிருக்கிறது....

"போய்ட்டு வரேன்...." கிளம்பினேன். அப்பாவும், பெண்களும் ஏகத்திற்கு – 'திரு திரு'வென்று விழித்தார்கள்.

அவனைப் பிடித்துக் கீழே தள்ளி, கராத்தே ஸ்டைலில்.... சுற்றி இருப்பவர்கள் மரியாதை கலந்த பயத்துடன் என்னைப் பார்க்கிறார்கள். ஒன்றிரண்டு பேர் கிட்டே வந்து பாராட்டுத் தெரிவிக்கிறார்கள்....


பாராட்டு விழாவில் போலீஸ் கமிஷனர் வால்டேர் தேவாரம் வெள்ளிக் கோப்பையைத் தருகி.....

"அக்கா! இறங்கு.... என்ன அப்படியே ஒக்காந்துக்கிட்டிருக்கே?"

ஓ! பகல் கனவா?

"என்டா ராஜா? இதுதான் சி.பி.டி. ரோடா?"

"இது தரமணி ஸைடு... ஆள் நடமாட்டமே ரொம்ப இருக்காது. இதுதான் கத்துக்கச் சரியான இடம்.... இதோ பார், இது தான் பிரேக்கு....."



"அட! அது ஸ்டிக்கர்னு இல்லே நினைச்சேன் இத்தனூண்டு.... இதுவா பிரேக்கு?"

"ஐயோ! அது ஸ்டிக்கர்தான்! இது! இது! வண்டியை நிறுத்தணும்னு நினைச்சே! உடனே பிரேக்கு போட்டுடுக்கா! இதுதான் பிரேக்கு!"

"அதெல்லாம் கரெக்டாப் போட்டுடு வேண்டா! ஆமாம். இதை எடுத்து எங்கே போட்றது ராஜா?"

"ஒன் தலையிலே! என்னக்கா நீ? எங்கியும் போட்டு ஒழிக்க வேணும்! இதோ பாரு... இப்படி இந்த ரெண்டையும் இறுக்கிப் பிடிச்சியானல் வண்டி நின்னுடும்.... இதோ பார்!"

அவன் காட்டியது போலவே, நானும் ஒரு முறை பிரேக்கைப் பிடித்து அழுத்தினேன்.

பெருச்சாளி அடிபட்டால் விநோதமான அடிக் குரலில் அலறுமே, அதைப் போல ராஜா கத்தினன்....

"என்னடா.... என்ன ஆச்சி?"

"ஸ்ஸா! நீ பிரேக்கை விடு.... ஸ்ஸா! என் விரலையும் சேர்த்தா ஒன்னைப் பிரேக் போடச் சொன்னேன்?"

பிரேக்கிலிருந்து வெகு சிரமத்தின் பேரில் அவன் தன் விரல்களை விடுவித்துக் கொண்டான்.

"இதோ பாரு! அக்கா! வலது பக்கம் இதோ பாரு! இதை இப்படி மெள்ளத் திருப்பினியானு, வண்டி ஓடத் தொடங்கும். ஸ்ட்ரெய்ட்டா ஓட்டு. ஆடாதே! மெள்ளமா ஓட்டு..... இரு. வண்டியை ஸ்டார்ட் பண்ணித் தரேன். நீ ஒக்காரு.... ம்!"

ஏக அட்டகாசமாக உட்கார்ந்தேன். சினிமாவில்கதாநாயகிகள்பாடிக்கொண்டே ஸ்டைலாக ஓட்டி வருவார்களே.... அந்தக் காட்சிகள் நினைவுக்கு வந்தன....

"ஒன் மினிட் ராஜா! இரு! பட்டை போட்டுக்கறேன்."

"வாட்! பட்டை போட்டுக்கறயா?" என்னவோ தகாத செயல் போல அப்படி அதிர்ந்து போய்விட்டான் ராஜா.

"அப்பத்தாண்டா ஒக்கார்ரப்போ, புடைவையோட பார்டர் பட்டையா, ஸ்டைலாத் தெரியும்...."

"அதைச் சொல்றியா? ஐயோ சாமி! ஒண்ணும் வேணும். இழுத்து இடுப்பிலே செருகிக்கோ...."

அரைகுறை மனத்தோடு செருகிக் கொண்டேன்.

"ரெண்டு காலையும் என்னடா பண்றது?"

"இது என்னக்கா கேள்வி? பெடல்லே வைய்யி...."

சொன்னபடியே வைத்தேன். இருக்கட்டும். இருக்கட்டும். காரியம் ஆக வேண்டும். இப்போது ஒன்றும் சொல்லக் கூடாது. சாதாரணமாய்க் கேட்டால், பொறுமையில்லாம பதில் சொல்கிறன்! இருந்தாலும் அவரைப் போல ஆகுமா? கல்யாணமான இத்தனை வருஷங்களில் இப்படி ஒரு வார்த்தை பதற்றமாய்ச் சொல்லியிருப்பாரா? இவன் 'படக்கு படக்கு' என்று எப்படி சொல்லுகிறன்?

"என்னக்கா நீ? பெரிய ஞானி மாதிரி அப்பப்ப சிந்திக்க ஆரம்பிச்சுடறே? ஸ்டார்ட் பண்ணு...."

அவன் சொன்னபடியே மெல்லத் திருகி



''இன்னொரு அட்டாக் வந்தா நான் பிழைக்க மாட்டேன்னு டாக்டர் உறுதியாச் சொல்றார்!''

''அதனால?''

''உங்க வியாபாரம் வெற்றிகரமா நடக்கிற விஷயத்தை விலாவாரியாச் சொல்றதை இனிமே நிறுத்திடுங்க!''

— மணியன் தர்மலிங்கம்

னேன்.

ஏகமாய்ச் சீறிப் பாய்ந்தது.... ஏன் இந்தச் சனியன் ஒரு பக்கமே வளைகிறது? திடும்மென்று ஒரு பயம்.... எதையோ அழுத்தினால் நிற்கும் என்றானே படுபாவி. அழுத்தினேன். அழுத்தி இறுக்கி.... ம்கூம்!

தத்தக்கா புத்தக்கா என்று ஜதிகள் சொல்லியபடி எகிறிப் பாய்ந்தது வண்டி. வளைந்து, திரும்பி, சாலையை விட்டுக் கீழே இறங்கி, பள்ளத்தில் இருந்த பாறாங்கல்லில் முட்டிக் கொண்டதில் நானும், மொபெட்டும் பொதேர் என்று விழுந்தோம்.

''என்னடா நீ? கூடவே வருவேன்னு நினைச்சா, அங்கேயே நின்னுட்டே?''

''நீதான் ஜெட் வேகத்தில் பறக்கறியே...''

மகிழ்ந்தேன். ''நிஜம்மாவா? ஜெட் வேகத்திலியா?''

''ஆமா! சைடுலியே ஜெட் வேகம் எடுக்கிறே! நல்லா நிமிர்ந்து ஒக்காரு! ஆம்மா! நீ சைக்கிள் கத்துக்கலே?''

''எங்கடா நானு சைக்கிளு கத்துக்கிட்டேன்? ஒங்கம்மாவும், எங்கம்மாவும் எங்க விட்டாங்க?''

''அடடே! ஒனக்குச் 'சைக்ளிங்' தெரியும்னு இல்லே நினைச்சேன்?''

தூரத்தில் சாணி பொறுக்கிக் கொண்டிருந்த சிறுமி கிட்டத்தில் வந்தாள். இரண்டு மூன்று தலைகள் சாலையின் கோடியில் தெரிய ஆரம்பித்தன.

''ம்! சரி! நீ ஸ்ட்ரெய்டா ஒக்காரு! என்னுக்கா?''

''அவங்க போவட்டும்டா ராஜா!''

அவர்கள் போகிறவரையில் ராஜா எதிர்த்திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். கழுத்துமுகவாய், நரம்புகள் அசைவதனுலும் ''போறாத வேளை — சனியன் — வெயிலு'' என்பவை துண்டு துண்டாகக் கேட்டதனுலும் ஏதோ முணுமுணுக்கிறான் என்பது புரிந்தது.

''ம்! இப்ப நான் ரெடிடா! நீ கூடவே வண்டியைப் பிடிச்சுக்கிட்டு வாடா....''

''இதோ பாரு! பிரேக்கை அழுத்தறப்போ இந்த ரெண்டையும் சேர்த்து இல்லே அழுத்தணும்? நீ வெறுமனே ஹாண்டிலே மட்டும் அழுத்தறியே?

ஸ்ஸ்! அதுதான்.... பிரேக்கே விழலே! நானும் மொபெட்டும் மட்டும்தான் விழுந்தோம்....''

அவன் அனுதாபமாக, பாசங் கொப்பளிக்க ஒரு பார்வை பார்த்தபடி, ''புவர் திங்'' என்று தட்டிக் கொடுத்தான் — மொபெட்டை!

'உடன் பிறப்பு' என்பதோ, 'ரத்தத்தின் ரத்தம்' என்பதோ சுத்தமாய் இந்தப் படுபாவிக்கு நினைவில்லையே!

திரும்பவும் மொபெட்டில் உட்கார்ந்தேன்... கறுப்புக் கண்ணாடியும், ஸ்கார்ப்பும் கொண்டு வந்திருக்க வேண்டும். அது இரண்டும் இருந்தால் இன்னும் அம்சமாக இருக்கும்....

''மெள்ள ஓட்டு.... ரெண்டடி தூரம்! மூணடி தூரம்....'' ராஜா முகத்தில் களையே இல்லை....

தவளையைப் போல, வண்டியை எகிறி எகிறிப் பாய விட்டேன். கொஞ்ச தூரம் கூட நேராக அது ஓடவில்லை.

ஓட ஆரம்பித்தவுடனேயே, ''ஐயோ! ஓடுதுடா! ஓடுதுடா'' என்று நான் அலற...

''ஆடாமே ஒக்காந்திருக்கா! எப்படியும் விழமாட்டே! பயப்படாதே! பாலன்ஸ் பண்ணிக்கலாம்.....''

அறிவு கெட்டவன். சற்று நேரத்திற்கு முன் விழுந்ததைத் தன் ஆந்தைக் கண்களால் பார்த்த பிறகும் இப்படிச் சொல்கிறான்!

வண்டி 'சர்'ரென்று பக்கவாட்டில் போய், மதில் சுவரை இடித்துக் கொண்டு நின்றது.....

திரும்பிப் பார்த்தேன். ஸ்ரீதேவி, ஜித்தேந்திரா ஷூட்டிங் போல ஜேஜே என்று கூட்டம்!

தரமணியில் இவ்வளவு ஜனம் இருக்கிறதா? ஆச்சரியப்பட்டு முடிப்பதற்குள் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு, விர்ரென்று அடுத்த ரோடுக்குப் போய்ச் சேர்ந்தான் ராஜா.

திரும்பவும் முழுக்க விவரித்தான்.

''அந்த ரோட்லியும் அதைத்தானே சொன்னே? அப்புறம் என்ன? ஒரு ரோடு தாண்டின உடனே பிரேக்கு அந்தப் பக்கமும் ஸ்டார்டர் இந்தப் பக்கமுமா வந்துடும்? சரியான இவன்டா நீ! எல்லாம் எனக்குத் தெரியும்!''

''அந்த ரோட்டை முடிச்சிட்டீங்க! இப்ப இந்த ரோட்டுக்கு வந்திருக்கீங்களா?''

ஒரு ஜிப்பாக்காரர் புன்முறுவலுடன் கேட்டுவிட்டுப் போனார்.

எனக்கென்னமோ அவனைப் பார்த்தால் ஆங்கிலேய ஆட்சியின் கைக்கூலி போலத்தான் தோன்றியது. நான் ஜான்சி ராணி

லட்சுமி பாய்.... அதோ! அவன் ஓடுகிருன்! போ! போய்த் துரத்திப் பிடி....

என்ன செய்தேனே? எப்படி வண்டி நேராகப் பறந்ததோ? ஜீப்பாக்காரர் அவசர அவசரமாக ஒரு மரத்தின் மேல் ஏறிக்கொண்டார்....

அதற்குப் பிறகு.... என் பழைய பயம் கட்டி அணைத்துக் கொண்டது.... கண்களை மூடிக் கொண்டேன்... எதிரில் மூன்று நான்கு பேர் வருகிருர்கள்.... ஐயோ!

ரோட்டை விட்டு வானத்தில் மொபெட் எம்பிப் பறந்தது உண்மையில் பெரிய திரில்லிங்.... அவர்கள் விலகி ஓடினர்கள்.

ஒரு டீ.வி. கம்பெனியின் மதில் சுவரில் போய் முட்டிக் கொள்ள வேக வேகமாகப் பயணப்பட்டுக் கொண்டிருந்தேன்.... ஓ!

காலில் என்னவோ நெருப்பு.... படுபாவி! ராஜா! இது என்னடா? நெருப்பு எங்கிருந்துடா வந்தது? காலுக்கு மேலே சதை 'கரு கரு'வென்று பொசுங்கிற்று. ஐயோ! ஐயோ! இது என்னடா நீளமாய் ஒரு குழல் போல! என்ன சூடு இதில்! ஒருமுறையாவது இதைச் சொன்னயா? உனக்குச் சாமர்த்தியமே அவ்வளவாகப் போருதுடா பாவி....!

டமார்.... வழக்கப்படி இடித்து நிறுத்தினேன். வழக்கப்படி பொதேர் என்று நானும் மொபெட்டும் விழுந்தோம்.

இத்துடன் முடிந்திருந்தால் ஒன்றுமே இல்லே! ஒரு சோம்பேறி எருமை மாடு சாலே ஓரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்தது. அதற்கு என்ன ஆயிற்ருே? என் வீர தீர சாகசத்தைப் பார்த்ததும் 'அது அரண்டு மிரண்டு போனதில் மாரத்தான் ஓட்டம் போல ஓடி வர ஆரம்பித்தது....

நான் செய்த ஒரே புண்ணியம் — என் வீர புருஷர் பண்ணிய புண்ணியம் — நல்ல காலமாக அதற்கு 'மொபெட்' ஆங்கிலேயக் கைக்கூலி போலவும், தான் ஜான்சி ராணி, லட்சுமிபாய் போலவும் தோன்றியிருக்கிறது....

நான்கு கால் பாய்ச்சலில் ஓடி வந்த அது கீழே பரிதாபமாகக் கிடந்த 'ஆங்கிலேயக் கைக்கூலி'யைக் கொம்புகளால் புரட்டி புரட்டிக் காலால் நெம்பி ஆக்ஷன் ரீப்ளே செய்து கொண்டிருந்தது.


இந்தப் படு பாவி ராஜாவுக்குக் கொஞ்சமாவது ஒரு பாசம் இருக்க வேண்டாம்! குரோதமாக எருமையை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

மூட்டை விழிகளில் கோபக் கனல் தெறிக்க ராஜா முன் சீட்டில் உட்கார்ந்திருந்தான்.

டிக்கியில் போஸ்ட் மார்ட்டம் பண்ணப்பட்ட உடம்பைப் போல, 'மொபெட்' கிடந்தது.

பின் சீட்டில் நான் திருதிருவென்று விழித்தவாறு அமர்ந்திருந்தேன்.

சொல்லி வைத்தாற்போல, டாக்ஸி டிரைவர் எங்கள் வீட்டு வாசலே அடைந்ததுமே மூன்று முறை ஹாரன் அடித்தார்....



எங்க சின்ன ராசா

காதில் கடுக்கன். நாலாயிரத்துக்கு நாலு சைபர் போட வேண்டு மென்று செக்கில் 40000 ற்கு ஏமாற்றிக் கையெழுத்து வாங்கும் மாமா, ஆயிரம் ரூபாய்க்குக் கையெழுத்துக் கேட்கும்போது, நாலாயிரத்திற்கு நாலு சைபர்னு ஓராயிரத்திற்கு ஒரு சைபர் தானே, யாரை ஏமாத்தப் பாக்கறீங்க?' என்று அடம் பிடிக்கும் 'புத்திசாலித் தனம்.' இறந்து போன அம்மாதான் அப்பாவின் இரண்டாம்மனைவியாகவந்திருக்கிறாள் என்று கேள்வி கேட்காமல் நம்பி, 'ஆத்தா, ஆத்தா' என்று சுற்றி வரும் அப்பாவித்தனம். இவை — சின்னராசா... வேறு யார்? பாக்யராசாதான்!

அணில் கலைத்த கூடு போல ஹேர் ஸ்டைல். யாரோ திருடிப் போனது போல் அரை மீசை. விக்கிரமாதித்தபாக்யராஜின் 'அதி புத்திசாலி' பட்டி — மண்ணுங்கட்டியாக வரும் சுப்ரமணியம் கனஜோர்!

இந்த இரண்டு பேரும் சேர்ந்தாலே கச்சேரி களை கட்டிவிடுகிறது..

ராதாவின் மனத்தைக் கவர்வதற்காக, அவர் வீட்டு வாசலில் சின்ன ராசாவும் மண்ணுங்கட்டியும் போடும் பாசாங்குச் சிலம்பச் சண்டை; சாப்பாட்டின் போது 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' பாணியில் வெளியில் வந்து விழும் செங்கல்; நவீன குசேலரின் வரவு — என்று அங்கங்கே மனதாரச் சிரிக்க வைத்துவிடுகிறார் பாக்யராஜ்.

என்னதான் கு.க. பிரசாரத்தையும் சேர்த்துச் சரிக்கட்டிவிட்டாலும் அந்த 'நிரோத்' ஜோக் கொஞ்சம் ஓவர்!

பாக்யராஜ் படத்தில் பாடல்கள் என்றாலே 'முக்கலும் முனகலுமாய்' கொஞ்சம் ஏடாகூடமாய் இருப்பதுதான் வழக்கம். அதுவும் கதாநாயகியாகத் துணிச்சலான ராதா. ஒட்டலும், உரசலும்கேட்கவேண்டுமா என்ன? பாட்டும் டான்ஸும்சேர்ந்து இளமையோ இளமை விருந்துதான்!

கணவனின் அப்பாவித்தனத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு மாமியார் (யாரோ சரஸ்வதியாமே. தேர்வு கச்சிதம்; நடிப்பு கனகச்சிதம்!) டபாய்க்கிறார் என்று தெரிந்ததும், ராதா எதிர்போர் தொடங்குவதும் மாமியார் அதை ஒவ்வொரு கட்டத்திலும் முறியடிப்பதும், அதற்குப் பதில் சொல்வதுபோல் ராதா இரண்டாவது அட்டாக் ஆரம்பிப்பதும், ரசிக்கக்கூடிய சதுரங்க விளையாட்டு. அதாவது ராஜா காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிற சதுரங்க விளையாட்டு.

இடிச்ச புளி செல்வராஜுக்கு வித்தியாசமான பாத்திரம். வைத்தியர் பயில்வான் ரங்கனுக்கு வித்தியாசமான மேக்கப். காமிராக்கார ராஜ்ப்ரீத்திற்கு வித்தியாசமான காமிரா கண்கள்.

'என்னைத் தீர்த்துக் கட்ட உர்ர்காத்தா பாலில் விஷம் கலந்திருக்கிறு' என்று பெண்டாட்டி குமுற, 'என் ஆத்தா ஒருநாளும் அப்படி செய்யாது' என்று பாக்யராஜ்தீவிரமாகநம்பி, பெண்டாட்டியையும் நம்ப வைப்பதற்காக அந்தப் பாலைத் தானே குடித்துவிட்டு, 'உன் திருப்திக்கு வேண்டுமானால் வைத்தியரைக் கூட்டி வா' என்று அனுப்பிவிட்டு, 'உன்னைப் போய்ச் சந்தேகப் படறு ஆத்தா' என்று ஆத்தாவிடம் புலம்பிக் கொண்டே இருக்கும்போது, குப்பென்று நெஞ்சை அடைத்து வாயோரம் ரத்தம் வழிய, நம்ப முடியாமல் 'நீயா ஆத்தா இப்படி செய்ஞ்சே' என்று ஒருபார்வை பார்த்துவிட்டு அறைக்குள் ஓடிக் கீழே விழ,

இங்கே சொத்துக்காக ஒரு க்ரூப் சண்டையைத் தொடங்க,

அடடா, அந்தக் கடைசி அரை மணி நேரம் நாற்காலி முனையில் உட்கார வைத்துத் துடிக்கும் நெஞ்சுடன் பார்க்க வைக்கும் சாமர்த்தியம்....!

— ஜெயமன்மதன்

பணத்துக்குப் பணம்;

முன்னுரையாக........

சென்ற வாரம் பம்பாய் பங்கு மார்க்கெட்டில் மிகவும் விசித்திரமான காரியங்கள் நடந்திருக்கின்றன. காங்கிரஸ் பிளவுபடப் போகிறது என்றும் அதைத் தவிர்ப்பதற்காக வி. பி. சிங்கைப் பிரதமர் மீண்டும் நிதி அமைச்சராக்கப் போகிறார் என்றும் ஒரு வதந்தி பரவ, பங்குகளின் விலைகள் சரிந்தன! பின்னர் என். டி. திவாரி நிதி அமைச்சராக நியமிக்கப்படுகிறார் என்று மற்றொரு வதந்தி பரவ, பங்கு விலைகள் மீண்டும் உயர்ந்தன!

இதிலிருந்து அரசியல்வாதிகளால் பங்கு மார்க்கெட் பாதிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல; வெவ்வேறு அரசியல்வாதிகளுடைய செயல்பாடுகளைப் பங்குதாரர்கள் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள் என்பதையும் உணர முடியும். இது ஒருபுறமிருக்க, பங்கு மார்க்கெட் என்பது ஒரு சில பெரிய புள்ளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்றும் அதனை அவர்கள் இஷ்டப்படி ஆட்டிப் படைக்கிறார்கள் என்றும் நம்பப்படுவதற்கு மேற்படி நிகழ்ச்சி பக்கபலம் சேர்க்கிறது.

பங்கு மார்க்கெட்டை ஆட்டிப் படைப்பவர், முதலில் ஒரு வதந்தியைப் பரப்பி, விலைகளைச் சரியச் செய்கிறார். இதற்கு இன்றுள்ள நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலை பெரிதும் உதவுகிறது. விலைகள் சரிய ஆரம்பித்ததும், ஆட்டுவிக்கிறவர் பல்வேறு பங்குகளை வாங்குகிறார். மறுநாளே வேறு ஒரு வதந்தியைப் பரப்பி, பங்கு விலைகளை உயரச் செய்கிறார். இப்போது தாம் வாங்கிய பங்குகளை விற்று விடுகிறார். இவ்வாறு மிகக் குறுகிய காலத்தில் பல லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார்.

— இது இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் சமீபத்தில் வெளியான ஒரு தலையங்கத்தின் பகுதி. இனி ஜெஃப்ரி ஆர்ச்சர் எழுதிய கதையின் தமிழ் வடிவம். "Not a Penny more; Not a Penny less" என்ற நாவலின் சுருக்கம்:

அத்தியாயம் — 1

"அன்புள்ள டாக்டர் ராபின்,

வருகிற வியாழக்கிழமை இரவு எட்டு மணிக்கு எனது இல்லத்தில் ஒரு சிறிய விருந்து. மிக முக்கியமான சில நபர்கள் மட்டுமே அழைக்கப்படுகிறார்கள். நீங்கள் வர முடியுமானால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இந்த விருந்தில் பங்கேற்பது தங்களுக்கு ஆதாயமாகவே அமையும் என்று எண்ணுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
ஸ்டீஃபன் பிராட்லி."

இதை எழுதிவிட்டு ஸ்டீஃபன் சற்று யோசித்தான். இந்தக் கடிதம் டாக்டர் ராபினை இங்கு வருமாறு ஈர்க்குமா? இதற்கு அதிகமாக எந்த விஷயத்தையும் எழுதுவது உசிதமல்ல; நேரில்தான் பேச வேண்டும். சற்று யோசித்துக் கடிதத்தில் பின் வரும் வரியைச் சேர்த்தான் ஸ்டீஃபன்:

"பி.கு.: டேவிட் கெஸ்லர் நம்முடன் இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன்."

இதுபோதும், டேவிட் கெஸ்லர் என்ற பெயர் நிச்சயம் டாக்டர் ராபினை இங்கே இழுத்து வந்துவிடும்.

இதேபோல் வேறு இரு கடிதங்களும் எழுதினான் ஸ்டீஃபன். பிரிட்டனில் குடியேறியுள்ள ஃபிரெஞ்சுக்காரரான பியர்ரி என்பவருக்கு ஒன்று. மற்றொரு கடிதம், அரச குடும்பத்துடன் ஏதோ ஒரு வகையில் சுற்றி வளைத்துச் சொந்தம் கொண்டாடும் பிரபுவான ஜேம்ஸ் என்பவரின் விலாசத்தைத் தாங்கித் தபால் பெட்டியில் சேர்ந்தது.

கடிதங்களை எழுதிய ஸ்டீஃபன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியர். பல்கலைக்கழக வளாகத்திலேயே அவருக்குச் சிறு குடியிருப்பு ஒதுக்கப்பட்டிருந்தது. அளவான ஆனால் அருமையான விருந்தை ஹாஸ்டலிலிருந்து வரவழைத்தார். 'பரிமாறுவதற்கு யாரும் வேண்டாம்; நாங்களே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறோம்' என்று ஹாஸ்டல் ஊழியரைத் திருப்பி அனுப்பிவிட்டு அவர் ஒருவர் மட்டுமே தனிமையில் காத்திருந்தார்.

அவன் எதிர்பார்த்தபடியே மூவரும் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். ஒருவருக்கொருவர் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். ஸ்டீஃபன் முதலில் மது மேஜையையும் பிறகு விருந்து பரப்பப்பட்டிருந்த டைனிங் டேபிளையும் சுட்டிக்காட்டி உபசரித்தான். அவரவரும் தத்தமக்குப் பிரியமான மது பானத்தை அருந்தியபோதோ அல்லது முதல்தரமான சமையலை ருசித்தபோதோ, அரசியல், கலை, இலக்கியம், விஞ்ஞானம் என்று பலரகப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். அப்படி உரையாடும்போதே ஒருவரை ஒருவர் எடை போட்டார்கள். ஒவ்வொரு

பழிக்குப் பழி!

ஜெஃப்ரி ஆர்ச்சர்

வருக்கும் மற்றவர் மீது மதிப்பு மிகும்படியாகவே அந்தச் சல்லாபங்கள் அமைந்தன.

உண்டு முடிந்ததும் அனைவரும் வரவேற்பு அறை சோபாக்களில் வந்து அமர்ந்தார்கள். இருவர் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார்கள். டிகாக்ஷன் கெட்டில், பால் கோப்பை, சர்க்கரைக் கிண்ணம், கப்—ஸாஸர்கள் அனைத்தும் அடங்கிய டிரேயுடன் வந்த ஸ்டீஃபன் அதனை முக்காலி மீது வைத்தான். அவரவரும் காப்பிக் கோப்பையில் சர்க்கரையை ஓசை எழுப்பாமல் ஸ்பூனினால் கலக்கிக் கரைத்தபடியே ஸ்டீஃபனை ஓர் எதிர்பார்ப்புடன் நோக்கினார்கள்.

அங்கு நிலவிய ஆழ்ந்த மௌனத்தை முதலில் டாக்டர் ராபின்தான் கலைத்தார்:

''ஸ்டீஃபன்! நாங்கள் எதற்காக இங்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்? அதைத் தெரிந்து கொள்ளலாமா?''


ஆறு கண்கள் ஸ்டீஃபனைக் கூர்ந்து நோக்கின.

ஸ்டீஃபன் காப்பிக் கோப்பையை வைத்து விட்டு எழுந்தான். கல்லூரியில் விரிவுரையாற்றுவது என்றால் நின்ற நிலையில் அவனது ஒரு கை பாண்ட் பாக்கெட்டுக்குள் போய் விடும். அங்குள்ள சாவிக் கொத்தைக் கசக்கியபடியேதான் பேச வரும் அவனுக்கு!

''தோழர்களே!'' என்று ஆரம்பித்தான் ஸ்டீஃபன். ''நம் நால்வரிடையிலும் ஒரு பெரிய ஒற்றுமை இருக்கிறது. நாம் அனைவருமே ஒரு கயவனால் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்....!''

மற்ற மூவரும் ஏதோ குறுக்கிட்டுப் பேச வாயெடுத்தார்கள்.

ஸ்டீஃபன் அவர்களைக் கையமர்த்தினான். ''நான் கூற விரும்புவதைத் தயவு செய்து முழுவதும் கேட்டு விடுங்கள். பிறகு உங்கள் கருத்



தைச் சொல்லலாம்; மறுத்தும் பேசலாம். நீங்கள் ஏமாற்றப்பட்டிருப்பது உண்மையென்றாலும் அதை என்னிடம் ஒப்புக்கொள்ள உங்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் ஒன்று, நான் உங்களுக்கு அழைப்பு அனுப்புவதற்குமுன் உங்களைப் பற்றியும் நம் அனைவரையும் ஏமாற்றியவனைப் பற்றியும் நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எனவே நான் கூறுவதில் தவறுகள் நேர்வதற்கான சாத்தியக்கூறு கால் சதவீதத்துக்கு மேல் இருக்க முடியாது!''

குறுக்கே பேச எண்ணியவர்கள் அடங்கி அமர்ந்தார்கள். வியப்பும் ஆர்வமும் புதிரும் கலந்த பார்வைகளை ஸ்டீஃபன் மீது செலுத்தி, அவன் தொடர்ந்து பேச அனுமதித்தார்கள். ஸ்டீஃபன் கூறினான்:

''நம்மை ஏமாற்றிய ஆள் டேவிட் கெஸ்லர் என்று நீங்கள் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் அவன் அம்புதான். அம்பை எய்தவன் ஹார்வி. ஹார்வியால் ஏமாற்றப்பட்டவர்கள் நாம் நால்வர் மட்டுமல்ல; இன்னும் நானூறு பேர் இருக்கலாம்; நாலாயிரம் பேர்கூட இருக்கலாம். ஆனால் மிக அதிகமான தொகைகளை இழந்திருப்பவர்கள் நாம் நால்வர் என்பதால் இந்தக் கூட்டத்தில் நமக்கு மட்டும் இடம் தந்தேன். ஏன், ஹார்வி எய்த அம்பாக விளங்கிய டேவிட் கூட ஹார்வியால் ஏமாற்றப்பட்டிருக்கிறான். ஆனால் அவனது இழப்பு அற்ப சொற்பம்தான். எனக்கோ எனது சம்பாத்தியத்தில் நான் கஷ்டப்பட்டு இதுநாள்வரை சேமித்திருந்த தொகை முழுவதும் பறி போய்விட்டது!''

''உன் பாடு தேவலாம்'' என்றான் ஜேம்ஸ். ''என் நிலைமை அதைவிட மோசம். எனக்குப் பிரபு என்ற பிரமாதப் பட்டம்தான் இருக்கிறதேயொழிய, சொத்து ஏதும் கிடையாது. எல்லாம் போன தலைமுறையோடு ஒழிந்துக் கட்டியாகி விட்டது. நான் ஏராளமான தொகையை பாங்கு வட்டிக்கு மேலே இரண்டு சதவீதம் வட்டிக்கு ஒப்புக்கொண்டு கடனாக வாங்கி அத்தனையையும் இப்போது இழந்து விட்டு நிற்கிறேன். ஆனால் எனக்கென்ன அதிசயம் என்றால் ஹார்வி பற்றிய விவரங்களை நீ எப்படித் தெரிந்து கொண்டாய் என்பதுதான்!''

புன்னகையுடன் ஸ்டீஃபன் தொடர்ந்து பேசினான்:

''ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் விசாரித்தேன்; ஷேர் ரிஜிஸ்தர்களைப் புரட்டினேன்; போலீஸில் கூட ஒரு நண்பரிடம் பேசினேன். ஹார்வியின் செயல்முறை — மோசடித் திட்டம் என்னவென்று தெரிய வந்தது. ஆனால் ஓர் எச்சரிக்கை! ஹார்வி மகா கெட்டிக்காரன். அவன் மீது போலீஸோ அல்லது வேறு யாருமோ மோசடிக் குற்றம் சாட்டி ஒரு சுண்டு விரலைக் கூடப் பதிக்க முடியாது. அவ்வளவு சாமர்த்தியமாக அப்பழுக்கின்றியும் பிசிறு தட்டாமலும் செயல்பட்டிருக்கிறான். நண்பர்களே! நமது எதிரி ஒரு மோசடி மன்னன்! இல்லை... இல்லை! மோசடி சக்கரவர்த்தி!''

''அப்படிப்பட்டவனுடனா மோதிப் பார்க்க வேண்டும் என்கிறாய்?'' என்று சந்தேகக் குரல் எழுப்பினான் பியர்ரி — பிரெஞ்சுக்காரன்.

''அவன் மோசடியில் நிபுணன் என்றால் நாம் ஒவ்வொருவரும் அவரவர் துறையில் நிபுணர்கள். எனவே அவனுடைய ஆற்றலுக்கு எதிராக நாம் நமது திறமைகளைப் பயன்படுத்தி அவனைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும். கூடவே அவன் நம்மிடமிருந்து பறித்துக் கொண்ட ஒவ்வொரு பென்னி காசையும் திரும்பக் கறந்துவிட வேண்டும். அதற்காகத்தான் இந்தக் கூட்டம். ஆனால் நம்மில் யாரேனும் கோழையாக இருந்தால் அவன் இப்போதே விலகிக் கொள்ளலாம்.''

''நியாயமான அளவு கவலைப்படுவது கோழைத்தனம் ஆகாது'' என்றான் பியர்ரி. ''நன்கு யோசித்துச் செவ்வனே திட்டமிட வேண்டும். அதை இம்மியும் பிசகாமல் நிறைவேற்றவும் வேண்டும். அல்லவா?''

''ரொம்ப சரி'' என்று ஒப்புக் கொண்டான் ஸ்டீஃபன். ''இந்தக் கூட்டத்தில் பழி வாங்குவது என்ற அளவுக்கு முடிவெடுத்து விட்டால் பிறகு அவரவரும் யோசித்துத் தத்தமது அறிவாற்றலுக்கு ஏற்ப ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண்டு வாருங்கள். நமது அடுத்த கூட்டத்தில் அந்தத் திட்டங்களை அலசலாம்.''

அருள்வாக்கு

பக்தியில் இரண்டு வகை இருக்கிறது. ஒரு வகை பூனைக் குட்டி முறை. பக்தர்களில் ஒரு வகையினர் பூனைக் குட்டி, தன் முயற்சி இன்றி, தாய்விட்ட வழி என்று இருப்பது போலவே பகவானை சரண் அடைந்து இருப்பர். பகவானுடைய பொற்பாத கமலங்களில் தங்களது உள்ளத்தை கிடத்துமாறு செய்து, தம்மை ஆட்கொள்வது பகவானது பொறுப்பே என்று கருதி, பூனைக் குட்டி சுய முயற்சி இன்றித் தாயை நம்பி இருப்பது போல் இருப்பார்கள். இவ்வித பக்திக்கு மார்ஜார கிசோர நியாயம் என்று பெயர்.

பூனைக்குட்டிக்கு நேர்மாறு குரங்குக் குட்டி. குரங்குக் குட்டியானது, அதன் தாய் வயிற்றை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். அதன் தாய் மரத்துக்கு மரம் தாவும் போது தன் குட்டி பற்றி யாதொரு கவலையும் கொள்ளாது. குட்டிதான் தன்னைக் காத்துக் கொள்ள இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். குட்டிக்கு பகவான் அப்படிப்பட்ட பிடிக்கும் சக்தியைக் கொடுத்து இருக்கிறார். 'கடித்ததெல்லாம் கரும்பு; பிடித்ததெல்லாம் இரும்பு' என்று பகவான் அதற்கு வரம் கொடுத்திருக்கிறார்.



இதற்கு மர்க்கட இசோர நியாயம் என்று பெயர். இவ்வகை பக்தர்கள் பகவானை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வார்கள். பகவானே அருள் செய்யட்டும் என்று காத்திராமல், அவன் உதறித் தள்ளினாலும் விடுவதில்லை என்று அவனைப் பிடித்துக்கொள்வார்கள்.

வைஷ்ணவர்களில் வடகலை, தென்கலை என்று இரண்டாகப் பிரித்து இருப்பது இந்த இரண்டு வித சரணாகதி வித்தியாசத்தினால்தான். ஸ்ரீ வேதாந்த தேசிகரைப் பின்பற்றும் வடகலைக்காரர்கள் மர்க்கட இசோர நியாயத்தை அநுசரித்து நாம்தான் விடாமுயற்சியுடன் ஸ்வாமியை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார்கள். ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார் ஆகியவர்களைப் பின்பற்றும் தென்கலைக்காரர்கள், மார்ஜார இசோர நியாயப்படி நாம் எந்த முயற்சியும் இல்லாமல் கிடந்தால் போதும், ஸ்வாமியே நம்மை ஆட்கொண்டு விடுவார் என்கிறார்கள். இப்போது வடகலை, தென்கலை என்றால் நாமம் போட்டுக் கொள்வதில் இருக்கிற வித்தியாசத்தைத்தான் நினைத்துக் கொள்கிறோம். இங்கிலீஷ் 'U' மாதிரி நாமம் போட்டுக் கொண்டால் வடகலை, 'Y' மாதிரி அடியிலேயே பாதம் வைத்துப் போட்டுக் கொண்டால் தென்கலை என்று புரிந்து கொள்கிறோம். வாஸ்தவத்தில் அவர்களுக்குள்ளே வித்தியாஸம் சரணாகதியில் இருவிதமான தத்வங்களை அநுசரிப்பவர்கள் என்பதே.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''பழி வாங்குவதாக முடிவு எடுப்பதற்கு முன், டேவிட் நம்மை எப்படி ஏமாற்றினான்; ஹார்வி அவனை எவ்வாறு அம்பாகப் பயன்படுத்திக் கொண்டான் என்பதெல்லாம் புரியவேண்டும். அதுமட்டுமல்ல; நாம் பழிவாங்க உத்தேசித்துள்ள மோசடி மன்னனாகிய ஹார்வி எப்படிப்பட்டவன். அவனுடைய பழக்க வழக்கங்கள் என்ன? அவனது பலங்கள், பலவீனங்கள் எவை— முதலிய பல விஷயங்கள் ஆராயப்பட வேண்டும்'' என்றான் ராபின். ''அப்போதுதான் பணத்தைத் திரும்பப் பெற மாற்றுத் திட்டங்களை நாம் யோசிக்க முடியும்.''

''சரியாகச் சொன்னீர்கள், டாக்டர்!'' என்று ஆமோதித்த ஸ்டீபன். ''அதையெல்லாம் ஆராய்ந்து பல தகவல்களைச் சேகரித்த பிறகுதான் உங்களுக்கு அழைப்பு அனுப்பினேன்,'' என்று கூறியபடியே, ஆளுக்கொரு நீல நிற ஃபைலை விநியோகித்தான். ''இதில் எல்லாம் இருக்கின்றன. பரீட்சைக்குப் படிப்பது போல் கரைத்துக் குடியுங்கள்! ஆனால் வேறு யார் கண்ணிலும் படக்கூடாது!''

பெற்றுக் கொண்டவர்கள், மீண்டும் லண்டனில் குறிப்பிட்ட ஓர் உணவு விடுதியில் சந்திப்பதென்று நிர்ணயித்துத் தேதியும் நேரமும் தீர்மானித்தார்கள். கைகுலுக்கிப் பிரிந்தார்கள்.

டாக்டர் ராபின் தனது காரில் ஏறினான். பியர்ரி ஆக்ஸ்ஃபோர்ட் நகரிலேயே அன்று இரவு தங்கத் தீர்மானித்து ஓர் ஓட்டலில் அறை ரிசர்வ் செய்திருந்தான்.

ஜேம்ஸ் ஆக்ஸ்ஃபோர்டிலிருந்து புறப்படும் கடைசி ரயிலில் ஏற நினைத்து ஸ்டேஷனை அடைந்தான். கூட்டம் அதிகமாக இல்லாத பெட்டியாக இருந்தால் லண்டன் திரும்பும்போதே கையில் உள்ள ஃபைலைப் புரட்டிப் பார்க்கலாம் என்று எண்ணினான். ஆனால் எல்லாப் பெட்டிகளிலுமே கணிசமான கூட்டம் இருக்கத்தான் செய்தது.

காலியான பெட்டி ஏதும் இல்லையெனில் அழகிய பெண் பயணி ஒருத்தி ஏறியுள்ள பெட்டியாக இருந்தாலும் தேவலாம் என்று கருதிய அவன், கண்களை அலைய விட்டான். அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது!

செவிட்டில் அறைந்து பிரமிக்கச் செய்வது போலிருந்தது அவள் அழகு. மேலும் அவள் தனியாகப் பயணம் செய்வது போலவும் தோன்றியது. அந்தப் பெட்டியில் இருந்த மற்றொரு பெண்மணி, நடுத்தர வயதினள். ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். அவளுக்கும் இந்த அழகிக்கும் சம்பந்தம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ரயில் நகர்ந்தது. ஜேம்ஸ் தன் கையிலிருந்த நீலநிற ஃபைலை ஆராய்வதற்குப் பதிலாகத் தன் அருகே அமர்ந்திருந்த அணங்கின் பக்கவாட்டுத் தோற்றத்தை ஆராய ஆரம்பித்தான்!

(தொடரும்)

அறிஞர் அண்ணாவின் ஆசையை நிறைவேற்றியவர்

அந்தப் பல்கலைக்கழகத்தில் ஒரு விவாத அரங்கு. "தமிழ் தமிழ் என்று பரவசப்பட்டுப் பெருமையடித்துக் கொண்டிருந்தால் ஆயிற்றா? தமிழில் விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறவே முடியாது! பழம் பெருமை பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அது ஓர் இலக்கிய மொழியாக முடியுமே தவிர, விஞ்ஞான மொழியாகவே முடியாது!" என்று பல பேச்சாளர்கள் கூறி, ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஓர் இளம் விரிவுரையாளருக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்தது. அவர் தலைவரின் அனுமதி பெற்று மைக் முன் வந்து நின்றார். "தமிழ் இன்னும் நிறைய வளர்ச்சி பெற வேண்டும் என்று சொல்லுங்கள். ஒப்புக் கொள்கிறேன். தமிழுக்கு வளம் சேர்க்கப் பாடுபடுவோம். ஆனால் 'தமிழால் முடியாது' என்று சொல்லாதீர்கள்! அக்கூற்றை என் தலையைக் கொடுத்தாவது எதிர்ப்பேன்! தமிழில் எதையும் சொல்ல முடியும், எப்பேற்பட்ட நவீன விஞ்ஞானக் கருத்தையும் எழுத முடியும்! தமிழ் இலக்கிய மொழி, விஞ்ஞான மொழி, நிகழ்கால மொழி, எதிர்கால மொழி!" என்று ஆவேசமாகப் பேசினார்.

பேசியதோடு நிற்கவில்லை. செயலிலும் இறங்கத் துணிந்தார். அந்த மேடையிலேயே சவால் தொடுத்தார்: "இன்று முதல் தமிழில் எதையும் கூற முடியும், எழுத முடியும் என்பதை நிரூபிப்பதே என் வாழ்க்கை இலட்சியம்! அதற்காக இப்போதைய என் உத்யோகத்தை ராஜினாமா செய்கிறேன்!"

பார்வையாளர்களும் சரி, அந்த விரிவுரையாளரின் நண்பர்கள், உறவினர்களும் சரி, பிரமித்துப் போனார்கள். பிரமிப்பு நீங்கியதும் 'உத்யோகத்தை விட வேண்டாம்' என்று அறிவுரை வழங்கினார்கள்.

அந்த நபர் ஓர் அங்குலம் கூடப் பின் வாங்கவில்லை. 'சொன்னது சொன்னது தான்' என்று பிடிவாதமாக இருந்துவிட்டார். அவர் — மணவை முஸ்தபா.

இந்தப் பிடிவாதத்தினால் முஸ்தபா பொருளாதார ரீதியில் பெரு நஷ்டமடைந்தார். அவர் குடும்பம் நலிந்தது. அவரது சகோதரருக்கு இவரால் பொறுப்புக்கள் அதிகமாயின. ஆனால் இதையெல்லாம் ஈடு கட்டுவது போல் அவருக்கு மனத்தளவில் ஒரு நிறைவு ஏற்பட்டது. அதுவும் எதிர்பாராத விதமாகத்தான்!

அச்சமயம் தென் இந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட் என்ற அமைப்பில் வேலைக்கு ஆட்கள் தேடுவதாக அறிந்து சென்றார். "ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்து தருகிறேன்; புரூப் பார்த்து, அச்சிட்டு முடித்துத் தருகிறேன். ஒரு காலக் கெடு வைத்தால் அதற்குள் செய்து காட்டுகிறேன்" என்றார்.

இப்படி பல பேர் இங்கே கூறிவிட்டுப் பிறகு இணைறி, இண்ட ஓடியிருக்கிறார்கள்" என்று நிர்வாகம் கூறியது. முஸ்தபா சவாலை ஏற்றார். மூன்று மாதங்களில் நான்கு புத்தகங்களை வெளியிட்டார். நிர்வாகம் அதிசயித்தது மட்டுமல்ல, ஒரு சிக்கலான தொல்பொருள் ஆய்வு நூலை எழுதியிருந்த ஒரு பெரிய மனிதர், முஸ்தபாவைத் தட்டிக் கொடுத்து, "எனது ஆங்கில மூல நூல்களை விடத் தமிழாக்கம் படிக்க சுவாரஸ்யமாகவும் சிறப்பாகவும் இருக்கிறது" என்று மனம் விட்டுப் பாராட்டினார்!

இந்தச் சூழலில் 'கூரியர்' என்ற 'யுனெஸ்கோ' பத்திரிகையைத் தமிழில் வெளியிட உத்தேசிக்கப்பட்டபோது, முஸ்தபா அதன் ஆசிரியராக வேண்டும் என்று ஒருமனதாக சம்பந்தப்பட்டவர்கள் தீர்மானித்ததில் வியப்பில்லை.

இந்த மாதப் பத்திரிகை அரசியல், சினிமா, கதைகள் என்று பொழுதுபோக்கு கிற சமாசாரங்கள் எதுவுமே இல்லாமல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஐ.நா. சபையின் கல்வி, விஞ்ஞானக் கலாசார நிறுவனமாகிய யுனெஸ்கோ என்ற அமைப்பு, இந்த இதழைப் பல ஆண்டுகளாக நடத்தி வருகிறது. முப்பத்து மூன்று உலக மொழிகளில் 'கூரியர்' வெளியாகிறது. இந்தியாவில் இந்தியிலும் தமிழிலும் மட்டும் தான்.

இதிலென்ன சிறப்பு என்கிறீர்களா? அமைப்பு, அச்சு, உள்ளடக்க நேர்த்தி எல்லாவற்றிலும் கூரியர் இதழ்களுக்குச் சர்வதேச மதிப்பீடு உண்டு. அந்த மதிப்பீட்டின்படி தமிழ்க் கூரியர் உலக அரங்கில் நான்காவது இடத்தில் உள்ளது! கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பெருமையைக் காப்பாற்றியும் வருகிறது!

யுனெஸ்கோ தலைமையகமான பாரீஸ் நகரத்திலிருந்தே வெளியாகும் ஆங்கில, ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்சு மொழி பதிப்புக்கள் மட்டுமே முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்டன. முப்பத்து மூன்று மொழிகளில், தமிழ் நாலாவது இடம் பெறுவது என்பது மிகப் பெரிய கௌரவம்தான்.

• மணவை முஸ்தபா



தமிழில் கூரியர் இதழ் வெளிவந்ததே ஒரு சுவையான நிகழ்ச்சி. அறிஞர் அண்ணா ஆங்கில கூரியர் இதழ்களை விரும்பிப் படிப்பவர். அவர் முதலமைச்சராக இருந்தபோது, கூரியர் தமிழிலும் வெளிவர வேண்டும் என்று விரும்பினார். அப்போது யுனெஸ்கோ அமைப்பின் துணை டைரக்டர் ஜெனரலாக இருந்த டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா, அண்ணாவின் ஆர்வத்திற்குத் துணையாக இருந்தார்.

யுனெஸ்கோ அமைப்பின் நிதி உதவி, பாரத அரசின் நிதி உதவி, தவிர ஓரளவு தமிழக அரசின் மானியம் இவற்றுடன் கூரியர் தமிழ்ப் பதிப்பு வெளிவரத் தொடங்கியது.

இந்தியாவில் கூரியரை வெளியிட யுனெஸ்கோ முடிவு செய்தபோது ஆட்சி மொழி என்கிற அளவில் முதலில் ஹிந்தியில் மட்டும் வெளியிட்டார்கள். 1958–இல்



• கூரியர்: ஒளிப்படக்கலைக்கு முக்கியத்துவம்

வெளிவரத் தொடங்கிய ஹிந்திப் பதிப்பு இன்றளவும் சிறப்பான முறையிலும் வெளி வர முடியவில்லை; குறித்த கால அளவிலும் வெளிவருவதில்லை. இத்தனைக்கும் அது மத்திய அரசின் ஹிந்தி மொழி இயக்ககம் மூலமாகவே வெளியிடப்பட்டு வருகிறது.

"தமிழ்ப் பதிப்பைத் தரமாக வெளியிடவும் குறித்த காலக் கெடுவுக்குள் கொண்டு வரவும் நீங்கள் என்னென்ன செய்கிறீர்கள். எப்படித் திட்டமிடுகிறீர்கள்..." என்று ஹிந்திப் பதிப்பின் நிர்வாகம் தமிழ்க் கூரியரின் ஆசிரியரான மணவை முஸ்தபாவை ஆலோசனை கேட்டிருக்கிறது!

கடந்த இருபது ஆண்டுகளாக தனி ஒரு மனிதராக தமிழாக்கம் செய்வது, ப்ரூஃப் பார்ப்பது, லே—அவுட் தயாரிப்பது, நிர்வாகப் பணிகளைக் கவனிப்பது போன்ற எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு, மாதம் தவறாமல் குறித்த தேதியில் கூரியரைக் கொண்டு வருவதில் முஸ்தபா பெரும் வெற்றியடைந்திருக்கிறார்.

முப்பத்து மூன்று மொழிகளில் நாற்பது லட்சம் பிரதிகளுக்குமேல் வெளியாகும் கூரியர் இதழ் குடும்பத்தில், தமிழ்ப் பதிப்பு அதிகம் விற்பனையாகும் (ஒரு பரபரப்புப் பத்திரிகை இல்லைதான். ஆனாலும் ஆர்வமுள்ளவர்கள், கலை, கல்வி, பண்பாடு, அறிவியல் போன்ற பல துறைச் செய்திகளை அறிந்து கொள்ள கூரியர் இதழ்களைத் தேடிச் சென்று வாங்குகிறார்கள். மிகவும் சாதாரண நிலையிலுள்ள வாசகன் முதல் மிகவும் படிப்பாளியான தேர்ந்த வாசகன்வரை எல்லாத் தரப்பாருக்குமே ஈடு கொடுக்கும் இதழாகக் கூரியர் விளங்குகிறது.

ஒவ்வொரு கட்டுரையிலும் படங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. முஸ்தபா சொல்கிறபடி கட்டுரைப் படங்களைப் பார்த்து விளக்கத்தைக் கவனித்தாலே போதும் ஐம்பது சதவிகிதம் விவரங்கள் புரிந்துவிடும்.

அறிவியல் சொற்களைப் புதிது புதிதாக உருவாக்கிப் பயன்படுத்துகிற பணியிலும் தமிழ்க் கூரியர் முன்னணியில் நிற்கிறது.

"நாம் பூஜா மனப்பான்மையில், தமிழை ஏதோ தெய்வீக நிலைக்கு உயர்த்தி அந்நியப் படுத்திவிட்டோம். மற்ற நாடுகளில் இப்படி இல்லை. மொழியை இட்ட பணியை நிறைவேற்றுகிற பணியாளனாகவே கருதுகிறார்கள். யாரும் அந்தப் பணியாளனுக்கு அடிமைப்பட்டுப் போவதில்லை" என்பது முஸ்தபாவின் நோக்கு.

சில ஆண்டுகளுக்கு முன்னால் 'நிழல் படம்' என்ற சொல்லைப் பயன்படுத்திய கூரியர், இப்போது ஒளிப்படம் என்றே எழுதுகிறது. கொஞ்சமும் பொருத்தமில்லாத புகைப்படம் என்ற சொல் எப்படியோ நம்மிடையே வேரூன்றியிருக்கிறது! மலேஷியா, சிங்கப்பூர் தமிழர்கள் ஒளிப்படம் என்றே கூறுகிறார்களாம்!

'கூடுமானவரை ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்திக் கொண்டால் என்ன? கம்ப்யூட்டர் என்பதைக் கணிப்பொறி என்று போட வேண்டுமா.....?' என்று கேட்டால் முஸ்தபா அதற்கும் பதில் வைத்திருக்கிறார்.

"சூரியன் போன்ற வடமொழிச் சொற்களை நாங்கள் புறக்கணிக்கவில்லை. அது இந்தியச் சொல்தான். தமிழில் பழகிவிட்டது. புதிய கண்டுபிடிப்புக்கள் என்று வருகிற போது, அது என்ன, எப்படி என்று நாமும் புரிந்து கொண்டு, தமிழில் ஒரு பெயர் தரலாமே? தமிழ் ஓர் அறிவியல் மொழி. அதை இதன் மூலம் உறுதிப்படுத்த முடியுமே' என்று கூறுகிறார் அவர்.

எல்.எஸ்.டி. என்றால், 'வெறி மயக்க மருந்து'. ஆண்டெனா என்றால், 'வான் அலை வாங்கி' என்று கூரியர் எழுதுகிறது. ஆனால் இதுபோன்ற பல சொற்கள் நமக்கு நிரடுகின்றன. 'யுனெஸ்கோ அமைவனம்' என்கிற மாதிரி. (ஆர்கனைசேஷன் என்று பொருளா?)

"பிரெஞ்சு நாட்டான் முழுக்க முழுக்க ஆங்கிலச் சொல்லை உள்ளே விடுவதில்லை. அவனால் புதிய சொற்களை உருவாக்க முடிகிறது. புதிய புதிய அறிவியல் சொற்களைச் சேர்த்துக் கொள்ள முடிகிறது. நம்மாலும் அது போல் முடியுமே" என்கிற முஸ்தபாவின் வாதத்தை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் வேறு விஷயம்.

"பிரான்ஸ் தேசமும் பிரெஞ்சு மொழியும் ஏற்கெனவே வளர்ந்துவிட்டவை. மேலும் அந்நாட்டில் அனைவரும் பேசுவது ஒரே மொழி — பிரெஞ்சு மொழி. இந்தியாவில் அப்படிப்பட்ட நிலை இல்லையே? தமிழ் வேகமாக வளர வேண்டுமானால் அந்நியச் சொற்களை அப்படி அப்படியே ஏற்றுக் கொண்டு, தமிழ் ஓசை நயத்துக்கு ஏற்ப இலேசான மாற்றம் செய்து கொள்ளலாம். ஜப்பானியர் இதைத்தான் செய்கிறார்கள். ஹிந்திக்காரர்கள் இதைப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். பல்வேறு மொழிகள் உடைய இந்தியாவில் இந்த முறையை எல்லா மாநில மொழிகளும் பின்பற்றுவதே சிறந்தது" என்றெல்லாம் வாதாட முடியும். இந்த வாதப் பிரதிவாதங்கள் எப்படியானாலும் முஸ்தபாவின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் குறைத்து மதிப்பிடவே முடியாது.

சில காலத்துக்கு முன்னால், தமிழ்க் கூரியரை நிறுத்திவிடப்போகிறார்கள் என்கிற மாதிரி அரசல்புரசலாய் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. காரணம்? ஹிந்தியிலேயே சரியாக வெளிவர முடியாத கூரியர் தமிழில் ஜாம் ஜாமென்று வெளிவருகிறதே என்ற பொறாமை தூண்டிவிட்ட சதித்திட்டம்தான்! தக்க சமயத்தில் டாக்டர் கலாநிதியும் வலம்புரி ஜானும் விழித்துக் கொண்டு பிரதமர் வரை போய்ச் சந்தித்து தமிழ்க் கூரியரைக் காப்பாற்றித் தந்தார்கள்!

— சுப்ர. பாலன்

* பாரதி பா மு. தாசன், போடிநாயக்கனூர்

? தமிழக எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஜனாதிபதி தேர்தலில் நிற்கும் நம் தமிழர் வெங்கடராமனுக்கு முழு ஆதரவளிப்பார்களா?

! தி.மு.க. வோட்டு அவருக்குக் கிடையாது என்பது தீர்ந்து போன விஷயம். அ.தி.மு.க. வோட்டு ஒட்டு மொத்தமாகக் கிடைக்கும். அதற்காகத்தானே தமது உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் எம். ஜி. ஆர். அமெரிக்கா போகாமல் இங்கேயே இருக்கிறார். இ. காங்கிரஸ் வோட்டுக்கள் தமிழகத்தில் கிடைத்தாலும் வடக்கே சில மாநிலங்களில் மாறிவிடக் கூடிய சூழ்நிலை உள்ளது.

* பாலன் அசோக், சென்னை—40

? 'தமிழக முதல்வரின் உடல்நிலை சரியில்லையெனப் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம்' என அரசு கேட்டுக் கொண்டது பற்றி...?

! அவர் உடல்நிலை சரியில்லை என்பது வதந்தி அல்ல, உண்மை. எந்த அளவுக்குச் சரியில்லை என்பதில்தான் வதந்திகள் எழுகின்றன. இதற்குக் காரணம் எம்.ஜி.ஆரைச் சுற்றி எழுப்பப்பட்டிருக்கும் ரகசியம் என்னும் கோட்டை. எதையும் ரகசியமாக வைத்திராமல் உண்மைகளை டாக்டர்கள் மூலம் அரசு அவ்வப்போது வெளியிட்டு வந்தால் வதந்திகள் பரவ வாய்ப்பே இராது. அதனால்ஏற்படுகிறவிபரீதங்களையும்தவிர்க்கலாம்.

இவ்வளவு அபரிமிதமான குற்றச்சாட்டுக்கள் இத்தனை பகிரங்கமாக உலக சரித்திரத்தில் எந்தப் பிரதமர் மீதும் சுமத்தப்பட்டதில்லை. அதற்குப் பதில் சொல்லாமல் ஒரு பிரதமர் மௌனம் சாதித்ததுமில்லை என்ற அளவில், இருவருமே சாதனையாளர்களாகிறார்கள். மொத்தத்தில் இதைவிடப் பெரிய தலைகுனிவு இந்தியாவுக்கு இதுவரை நேர்ந்ததில்லை, இனியும் நேரப் போவதில்லை!

* வி. சுந்தன், மயிலாடுதுறை

? மத்திய மந்திரி சபையில் ஒரு வி.பி. சிங் தோன்றியது போல நமது தமிழக சட்டசபையில் தோன்றினால்.....?


! அவ்வப்போது தோன்றத்தான் செய்கிறார்கள். ஆனால் மறுபடி ஜோதியில் கலந்து விடுகிறார்களே!

* சைதை வி. முரளி, சென்னை—15

? 'உலகத்தில் உள்ள தலைவர்களுக்கெல்லாம் தலைவர் எம்.ஜி.ஆர்.' என்று பண்ருட்டி கூறியிருப்பது பற்றி....?

! 'உலகத்தில் உள்ள ஜால்ராக்களிலெல்லாம் தலையாய ஜால்ரா பண்ருட்டி' என்று பதில் கூறி முடித்துவிடலாம் என்று பார்த்தால், சிதம்பரம் சேக்கிழார் விழாவில் கலந்து கொண்டு பேசியவர்கள், பண்ருட்டியுடன் போட்டியிடுகிறார்கள் அந்தப் பதவிக்கு! 'மாண்புமிகு முதலமைச்சர்' நாவலை எழுதிய மணிசேகரனும் அமைச்சர் வி.வி. சுவாமிநாதனும் 'எம்.ஜி.ஆர். சேக்கிழாரின் மறு அவதாரம்' என்றே வர்ணிக்க, உரை நடை சேக்கிழார்' என்ற பட்டத்தைக் கோவி மணிசேகரன் பெற, பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் துணைவேந்தர் கே. வெங்கடசுப்பிரமணியமோ, 'அமைச்சர் வி.வி. சுவாமிநாதனே ஒரு சேக்கிழார்தான்' என்று ஒரு போடு போட்டிருக்கிறார்! யார், யாரை, எதற்காக, எப்படிப் பாராட்டுவது என்பதற்கெல்லாம் ஒரு விவஸ்தையே இல்லாது போய்விட்டது, போங்கள்.

பிரதமர் கொடுத்த அடி ஜெத்மலானியின் ஜென்மத்துக்குப் போதாதா?



* காவல் நாய்

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்

? 'குரைக்கும் ஒவ்வொரு நாய்க்கும் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை' என்று ராஜீவ் காந்தி கொடுத்த சம்மட்டி அடி ஜெத்மலானியின் ஜென்மத்துக்குப் போதும் அல்லவா?

! 'நான் ஜனநாயகத்தின் காவல் நாயாக இருப்பதில் பெருமைப்படுகிறேன். திருடர்களைப் பார்த்தால் நாய் குரைக்கவே செய்யும்' என்று பதிலடி கொடுத்துவிட்டு, ராஜீவ் மீதான குற்றச்சாட்டுக்களைப் பட்டியலிட்டு வருகிறாரே, ஜெத்மலானி. அது ராஜீவ் காந்தியின் இந்த ஜென்மத்துக்கு மட்டு மல்ல, அடுத்த ஜென்மத்துக்கும்கூடப் போதும்!

* டி. தாமரை பிரபு, குடியாத்தம்

? வி.பி.சிங்கிற்கும் உத்திரப்பிரதேச மாநில அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் பற்றி?

! வி.பி. சிங் கனமான ஸ்பிரிங் மாதிரி. வலுக்கட்டாயமாக அமுக்கப் பார்க்கலாம். ஆனால் சற்று கை தளரும்போது.... படார்! முகத்தில் அடி வாங்கிக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.

* எம்.ஏ. கவிலா, மதுரை

? பெண்களுக்குச் சுதந்திரம் அளிப்பது பற்றிய விசுவின் கருத்துக்கள் அபத்தமாக இருக்கிறதே! அதை எடிட் செய்துவிட்டுப் போட்டிருக்கக் கூடாதா?

! விசுவின் கருத்துக்களைக் கல்கியின் கருத்துக்களாக ஏற்க அவசியமில்லை. அவரது



* கல்கியின் சகோதரர்

கருத்துக்களை ஸென்ஸார் செய்கிற நோக்கமும் எங்களுக்கு இல்லை. எந்த ஒரு பேட்டியிலும் கூறப்படும் கருத்துக்கள், பேட்டி காணப்படுகிறவருடைய சொந்தக் கருத்துக்களே. அவற்றை ஏற்பதும், ஏற்காததும் நம் இஷ்டம். நம் சிந்தனையைத் தூண்டுவதே பேட்டிகளின் நோக்கம். நாடு சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்குப் பிறகும், பெண் சுதந்திரத்தை மறுப்பவர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை மூடி மறைப்பதைவிடப் புரிந்து கொண்டு செயலாற்றுவதே நல்லது. விசுவுக்கு ஆதரவாகக் கணிசமான கடிதங்கள் நமது காரியாலயத்துக்கு வந்துள்ளன என்பதையும் உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன்!

* பாமா நாராயணன், சென்னை — 20

? புத்தமங்கலம் ஜகதீசய்யர் — கல்கி அவர்களின் தம்பி — மறைவு பற்றி ஹிந்து பத்திரிகையில் படித்தேன். கல்கியில் அவரைப் பற்றி எழுதலாமே?

! நாம் உண்டு, விவசாயம் உண்டு என்று கிராமத்தோடு இருந்த மனிதரான அவரைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூற இரு விஷயங்கள் உண்டு. ஒன்று, யாரைப் பற்றியும் குறை கூறிப் பேசுவதை விரும்பாத நல்லிதயம். நாம் ஒருவரைக் குறைத்துப் பேசினால்கூட, அவரிடம் உள்ள ஒரு நல்ல அம்சத்தை ஜகதீசய்யர் எடுத்துரைப்பார். மற்றொன்று, மூன்று சகோதரர்களில் ஒருவர் மட்டுமே படிக்கக் குடும்பப் பொருளாதாரம் இடம் தருகிறது என்ற நிலையில், நடுவரான கிருஷ்ணமூர்த்தியின் படிப்பாற்றலை உணர்ந்து, அவருக்காக மற்ற இருவரும் விட்டுக் கொடுத்தது. அந்தத் தியாகத்தை அவர்கள் செய்திருக்கவில்லையானால் அமரர் கல்கி அவ்வளவு தூரம் வளர்ந்திருப்பாரா, அத்தனை சாதனைகளைப் புரிந்திருப்பாரா — சந்தேகம்தான். இதனைக் கல்கி அவர்களும் கடைசி வரை நன்றியோடு நினைவிலிருத்தி, சகோதரர்களுக்கு அவ்வப்போது தம்மாலியன்ற உதவிகளைச் செய்து வந்தார்.

* பிரிய பாரதி, போடிநாயக்கனூர்

? ஸ்விஸ் வங்கியில் கள்ளக் கணக்கு வைத்திருக்கும் புள்ளிகளைக் கண்டறிய குழு ஒன்று சென்றிருப்பது குறித்து?

! கண் துடைப்பு! அங்கு வைக்கப்பட்டுள்ள பணம் சட்ட விரோதமானது என்று இந்த அதிகாரிகளால் நிரூபிக்க முடியுமானால்தான் ஸ்விஸ் வங்கிகள் ஒத்துழைப்புத் தரும். அப்படி நிரூபிக்க முடியுமானால் இங்கேயே, இவர்களை நடவடிக்கை எடுக்கலாமே? ஸ்விஸ் பயணம் எதற்கு? 'கடுகு போன இடம் ஆராய்வார்; பூசணி போன இடம் கண்டு கொள்ள மாட்டார்' என்ற கதைதான்!

* ரூ 15 பரிசு பெறுபவர்:

பிரிய பாரதி,
மே/பா. எல்லோரா
ராமசாமி பிள்ளை தெரு,
போடிநாயக்கனூர்
626 513 (மதுரை மா.வ.)

வேற்றுமையை விரட்டவா? கலையை வளர்க்கவா?

ஐ. ஏ. எஸ். தேறி, அரசு நிர்வாகப் பணியிலும், மகளிர் முன்னேற்றக் கார்ப்பரேஷனிலும் பணியாற்றி விட்டு, முற்றிலும் புதிய சூழலில் தென் மண்டலக் கலாசார மையத்தின் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் ஷீலா ப்ரியா அவர்களைப் பேட்டி கண்ட போது......

பெரும்பாலான கலைஞர்கள் வாழும் சென்னையை விட்டுவிட்டு, தஞ்சையில் பண்பாட்டுக் கலாசார மையத்தின் அலுவலகம் வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

தஞ்சை சரித்திர ரீதியாகவும், கலைகளின் அடிப்படையிலும் முக்கியமான நகரம். அதனால்தான் தஞ்சாவூரில் பண்பாட்டு மைய அலுவலகம் அமைத்தோம். மாதத்தில் மூன்று, நான்கு நாட்கள் இங்கே சென்னையில் இருந்து பார்க்க வேண்டிய அலுவல்களை எல்லாம் கவனித்துக் கொள்கிறேன். (கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 20 மணி நேரம்!) இந்த மையம் ஆந்திர, கர்நாடக, தமிழக, கேரள, புதுவை, லட்சத்தீவுகள், அந்தமான் ஆகிய ஏழு மாநிலங்களின் ஒட்டு மொத்தமான கலாசார அமைப்பு.

அப்படியானால் இத்தனை இடங்களிலிருந்தும் உங்களுக்குப் போதுமான ஒத்துழைப்புக் கிடைக்கிறதா?

தாராளமாகக் கிடைக்கிறது. தமிழக ஆளுநர்தான் இந்த மையத்தின் தலைவராக இருக்கிறார். அவர் எடுத்துக் கொள்ளும் ஆர்வமும் அக்கறையும் அளவிட முடியாதது. பிற மாநில அரசுகளிலிருந்து எனக்கு முழு ஒத்துழைப்புக் கிடைக்கிறதால்தான் ஒழுங்காக நடத்த முடிகிறது.

அந்தமானில் சமீபத்தில் நடந்த கலை நிகழ்ச்சிகளை அந்த ஊர் மக்கள் வெகுவாக ரசித்துப் பார்த்தார்கள். ஏனென்றால் இதுவரை யாருமே இப்படிக் கோலாகலமான கலாசார நிகழ்ச்சிகளைப் பார்த்ததில்லை! அவர்கள் ஐந்து மணிக்கே கடைகளை எல்லாம் மூடிவிட்டு, நிகழ்ச்சிக்கு வந்து உட்கார்ந்து விடுவார்கள். எல்லா நிகழ்ச்சிகளுக்குமே ஏராளமான கூட்டம். எத்தனையோ கலைநிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறேன். இருந்தாலும், சமீபத்திய அந்தமான் கலைவிழா நிகழ்ச்சிகள்தாம் எனக்கு மிகுந்த மன நிறைவைத் தந்தன.

கலாசார விழாக்கள் நடத்துவதன் மூலம் உண்மையிலேயே ஒருமைப்பாட்டை மக்களிடையே உருவாக்கி விட முடியுமா?

ஓரளவுக்கு உணர்ச்சிபூர்வமான மனவொற்றுமை (emotional integration) சாத்தியமானதுதான். காரணம்: ராமாயண, மகாபாரதக் கதைகளுடன் ஹரிச்சந்திரன், பிரகலாதன், இவர்கள் கதைகளும் வடக்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் எல்லோரும் அறிந்தவைதான். நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு கருத்தைக் கலை வடிவில் வழங்குகிறபோது, வேற்றுமையை மறந்து ஒன்றுபட வாய்ப்பிருக்கிறது.

கலைஞர்களைப் பொறுத்தவரை, அவர்களாகவே ஒருவரோடு ஒருவர் வித்தியாசமின்றிக் கலந்து பழகிக் கொள்கிறார்கள். இது ஆரம்பம்தான். போகப் போக இந்தக் கலாசார ஒருமைப்பாடு, தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கலாம். இவை தவிர, இதில் பங்கு கொள்ளும் பல கலைஞர்களுக்கு, நாட்டில் தாங்கள் விஜயம் செய்யும் பகுதியிலுள்ள மக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்களுக்கு மட்டுமே போய் வந்து கொண்டிருந்த இந்த கிராமியக் கலைஞர்கள், அரசு தேசிய அளவுக்குத் தங்களை அங்கீகரிக்கிறது என்ற கௌரவத்தில், தங்கள் கலைகள் பற்றி விரிவான தகவல்களை அச்சிட்டுக் கொண்டு வருகிறார்கள். பலர் விஸிடிங் கார்டுகூட அச்சடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

'அப்னா உத்ஸவ்' கலாசார நிகழ்ச்சிக்காக ஏராளமான பொருட்செலவு செய்யப்பட்டதாகவும், கிராமியக் கலையும் கிளாஸிகல் கலையும் கலந்து ஒரே இடத்தில் அளித்ததால் அதைப் பலர் ரசிக்கவில்லை என்றும் கூறப்படுகிறதே?

கிராமியக் கலைஞரானாலும், கிளாஸிகல் கலைஞரானாலும் அவரவருக்கு என்று தத்தம் கலை பற்றிய ஒரு குறிக்கோள் இருக்கிறது. 'அப்னா உத்ஸவ்'வைப் பொறுத்தவரை, நசித்துக் கொண்டிருக்கும் folk arts எனப்படும் பழங்கலைகளைப் புதுப்பித்து உயிரூட்டி வழங்குவதும் ஒரு லட்சியம். கிளாசிகல் எனப்படும் கதக், பரதநாட்டிய, இசை நிகழ்ச்சிகளும் வழங்கினோம். ஆனால் ஒரே இடத்தில் அல்ல. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்தை முன்பே

நிச்சயம்செய்து, விளம்பரப்படுத்தியே நடத்தி னோம். ஒவ்வொன்றுக்கும் எத்தனை ஆயிரம் மக்கள் வந்து பார்த்து ரசித்தார்கள் என்பது உங்களுக்கே பத்திரிகைகள், டி. வி. வாயி லாகத் தெரிந்திருக்குமே!

மத்திய சங்கீத நாடக அகாடமி, மாநில இயல் இசை நாடக மன்றம் இவை எல்லாம் இருக்கிற போது, புதிதாக இப்படி ஓர் அமைப்பு தேவைதானு?

ஒவ்வோர் அமைப்புக்கும் சில குறிக் கோள்களும் சில வரையறுக்கப்பட்ட பணி களும் இருக்கின்றன. அவற்றைத் தம்மால் முடிந்த அளவுக்கு இந்த அமைப்புகள் செய் கின்றன.

தென் மண்டலப் பண்பாட்டுக் கலாசார மையம், நீங்கள் குறிப்பிட்ட அமைப்புகள் செய்யும் பணிகளோடு கூடுதலாகச் சில பணிகளையும், வேறு மாநிலங்களின் ஒத்து ழைப்போடு ஒரே மேடையில் வழங்க ஏற்பாடு





செய்கிறது.

கைவினைக் கலைஞர்களையும், ஓவியக் கலை ஞர்களையும் கூட ஓரளவுக்கு ஊக்குவிக் கிறது. இப்போது அந்தமான் நிகழ்ச்சிக ளுக்கு, கிராமியக் கைவினைக் கலைஞர்களை அழைத்துப் போயிருந்தோம். அவர்களது படைப்புக்கள் பெருவாரியாக அறிமுகம் ஆனது மட்டுமல்ல. விற்பனையும் ஆயிற்று. இதனுல் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரு கிறது. இல்லையா?

நாட்டின் பெரும்பகுதி வறுமையிலும், வறட்சி யிலும் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, பெரும் செலவு செய்து கலையையும் கலாசாரத்தையும் வளர்க்க முயல்வது நியாயமா என்று சிலர் கேட்கிருர் கள். உங்கள் பதில் என்ன?

பழங்கலைஞர்கள் யார்? ஏழைகள்தானே? ஒவ்வொரு கிராமம் அல்லது சிற்றூர்களில் உள்ள இந்தப் பழங்கலைஞர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களது கலைகளுக்கு அரசுகூட ஆதரவு காண்பிக்காவிட்டால் அவர்கள் கதி என்ன ஆவது? இதுவும் ஒரு economic activity தானே? கைவினைக் கலைஞர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் தயாரிப் புக்களுக்கு இப்படி ஒரு விளம்பரமும் வாய்ப் பும் கொடுத்து, அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர உதவுவது பொறுப்பான ஒரு சமூகப் பணி அல்லவா?

இது ஒருபுறம் இருக்கட்டும். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட கலா சாரம் இருக்கத்தானே செய்கிறது? பல நாடுகள் அவற்றைப் பேணிப் பாதுகாக்க எத்தனை செலவு செய்கின்றன! அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், நம்மால் முடிந்த அளவுக்கு, 'ஹெரிடேஜ்' என்கிற நம் பண்பாடு, நம் கலாசாரம் இவற்றைப் பாதுகாக்க வேண்டாமா? இதைக் காணத் தானே வெளிநாடுகளிலிருந்து ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் இங்கே வருகி ருர்கள்?...

இந்த மையம் அப்படி ஒன்றும் தாம் தூம் என்று செலவு செய்வது இல்லை. மத்திய ஹ்யூமன் ரிசோர்சஸ் டெவலப்மெண்ட் அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது. ஒரு கோடி ரூபாய் மூலதனத்திலிருந்து கிடைக் கும் வட்டியில் இந்த மையத்தின் பணிகள் நடைபெறுகின்றன. இதுபோன்ற சில Social investments நாட்டுக்குத் தேவைதான். பண்பாடும், கலாசாரமும் ஒரு நாட்டில் அழிந்து போய்விட்டால், அப்புறம் ஒரு நாட் டின் தனித்தன்மையை எங்கே காண் பீர்கள்?

பேட்டி: **சாருகேசி**

புகைப்படம்: **யோகா**



''சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதில் உங்க தலைவருக்குப் பெரிய பங்கு உண்டுங்கறீயே, அப்படி என்ன சாதிச்சிருக்கார்?''

''எலெக்‌ஷன் நேரத்தில் விடிய விடியக் கூட்டம் போட்டுத் தூக்கத்தைக் கெடுத்திருக்காரே!''

— கிழை. அ. கதிர்வேல்.

நிருபர்: உங்க காதல் ஏன் தோல்வி அடைந்தது?

நடிகை: எல்லாம் என் புதுக் காதலரால் வந்த வினை சார்!

— கலைப்பிரியன்





''பக்கத்து வீட்டுக்காரன் சரியான கஞ்சன்!''

''அப்படியா?''

''ஆமாங்க. அவன் வீட்டு ரேடியோ வில்பாட்டு கேட்கலாம்னு நான் ரேடியோ வை நிறுத்தினேன். அவனும் நிறுத்திட் டான்!''

— மணியன் தர்மலிங்கம்

நீதிபதி: உனக்காக வாதாட ஒரு அரசு வக்கீலை வைத்துக் கொள்ள விரும்பு கிறாயா?

குற்றவாளி: வேண்டாமுங்க. நானாகவே தோற்று விடுகிறேன்!

— கிழை அ. கதிர்வேல்





வின்சென்டாவுக்குச் சிறு வயதிலிருந்தே சேவற் கோழி ஒலியெழுப்புவதைக் கேட்பதில் மிகுந்த ஆவல். சின்னஞ்சிறு பெட்டிக்குள் ஒரு சேவற் கோழியை அடைத்து வைத்து, இரவில் அது எழுப் பும் நாதத்தைக் கேட்டபடியே உறங்குவார். இப் பொழுது, சேவற் கோழிகளை விற்றே, பணக்காரி யாகிவிட்டார்!

— ஆர். சம்பத்குமாரன்

ஆதாரம்: உலகம் பலவிதம்

ஆஸ்ட்ரிச் என்னும் நெருப்புக் கோழியின் முட்டை மூன்று பவுண்ட் எடையுள்ளதாகவும், முட்டையின் ஓடு சீனக் களிமண்போல் உறுதி யாகவும் இருக்கும். இப்பறவையின் முட்டையை உடைப்பதற்கு, உளியும் சுத்தியலும் தேவைப் படும். முட்டையை அவிப்பதற்கு இரண்டு மணி நேரமாகும். ஆண் பறவை பத்து அடி உயரமுள்ள தாகவும், முந்நூறு பவுண்ட் எடையுள்ளதாகவும் இருக்கும்.

ஆதாரம்; கலைக்கதிர் — ஜூன் 87

தகவல்: தங்க. கார்த்திகை ராஜா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 31543 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 4 73389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—: வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—: விமானத் தபால் ரூ 650/—.
(ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)


Godrej
Marvel
LLOUS PERFUME
ர்வல்-இதம் தரும் தன்மை
ஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப்
ன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான
குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட
3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெ கொண்டது

Registered No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka